

# கீதை நிழலில்

எஸ். பொன்னுதுரை

# கீதை நிழலில்

அலையானது கடலுக்கு அந்நியமாகாது. அதிலேயே பிறந்து அதிலேயே மடியும் தன்மையதுதானே அலை. மிகச் சிறிய தாகச் சுருண்டு எழுந்தாலும் சரி, மிகப் பெரியதாகச் சீறி எழுந்தாலும் சரி, அலை யானது யாண்டும் கடல் மயமே. அது போல ஜீவன் தன்னை எத்தனை எத்தனை உபாதிகளோடு பொருத்தி வைத்திருந் தாலும் அத்தனை வடிவங்களுக்கிடையிலும் அது பூரணத்திலேயே புதைந்து உள்ளதே.

# கீதை நிழலில்

எஸ். பொன்னுதுரை

கலைஞன் பதிப்பகம்
தியாகராயநகர்: சென்னை-17

முதற் பதிப்பு: அக்டோபர் 1975
இரண்டாம் பதிப்பு : நவம்பர் 1977

விலை ரூ. 3-50

எலைட் பிரிண்ட் அன் பேக்
10-இ, கோடம்பாக்கம் ஐரோடு,
சென்னை-600 034.

# விதை

அந்தந்த விதையின் வகைக்கேற்ப அது அது முளை கொள்ளுகின்றது. ஆனாலும், மண்வளம்—சுவாத்தியம்—விதையின் தன்மை—பதியம் — பருவகாலம் — உழவனின் ஊக்கம்—வேலி—காவல் ஆகிய பிற ஏதுக்களும் முளையின் வளர்ச்சியையும், பயனின் ஏற்றத்தையும் நிர்ணயிக்கின்றன. இங்கு இப்படி விதையையும் பயனையும் வகுத்துப் பேசுவதற்குக் காரணம் உண்டு. பகவத் கீதை என்ற விதை என் மனத்திலே வித்தப்பட்டது. 'கீதை நிழலில்...., என்னும் இப்பயன் சமைந்தது. கீதைக் கருத்து அற்புத விதை. இதிலே சமைந்த பயன் எல்லைக்கட்டுடையதாயின், குறை விதை சார்ந்ததல்ல என்பதை உங்கள் மனத்தில் இருத்திக் கொள்ளுதலை யாசிப்பேன்.

ஒரு சமயம் என் மனத்தினை பாரிய சஞ்சலம் உலைக்கலாயிற்று. அதனைப் போக்கு மார்க்கம் என்ன என மனம் அலையலாயிற்று. அப்பொழுது பகவத் கீதையே என் நினைவில் எழுந்தது. மீண்டும் அதனுடன் கலக்கவேண்டும் என்ற ஆசை முற்றியது. கீதையின் படனம் வேர் கொண்டது. கீதையிலே ஒன்ற ஒன்ற என் மனம் இலேசாகியது என்பது சத்தியம். அதே சமயம் என் கற்பனைகளும் சடைத்து வளர்வதை உணரலானேன்.

கீதையிலே காணப்படும் கருத்துக்களை ஒன்றிச் சில கற்பனைகள் முளைத்தன. விளங்கியும் விளங்காததுமான ஐய நிலையில் வேறு சில கற்பனைகள் கிளைத்தன. எனவே, சில கதைகளிலே கீதையின் கருத்துக்களும், வேறு சில கதைகளிலே கீதைக்கு விளக்கவுரை வழங்கிய பெரியோருடைய கருத்துக்களும் இயல்பாகப் புகுந்து கொண்டன. வினோபாஜி, சித்பவானந்தஜி, ராஜாஜி ஆகியோர் கையாண்ட சில உவமைகளும் ஆங்காங்குச் சேர்ந்து கொண்டன. வேறு சிலவற்றிலே கீதையுடன் நேரடித்

தொடர்பற்ற கருத்துக்கள் மட்டுமின்றி, எதிர்த்துருவமான கருத்துக்களும் முகங்காட்டியுள்ளன. 'கருத்துக்கள்' என்னுடையவை, சுயம்புவாக என் கற்பனையில் உதித்தவை எனப் பொய்யுரைக்க ஒப்பேன். அவை தரப்பட்டுள்ள உருவங்கள் நான் தேர்ந்தெடுத்தவையாக இருக்கலாம். இன்னொரு வகையிற் சொல்வதானால் 'வளத்'திற்குப் பெரியவர்களும், 'குறை'களுக்கு நானும் அதிகாரிகள் எனப் பாரட்டுதல் சங்கையானது.

கீதையின் தாக்கத்தினால் ஒட்டியும் வெட்டியும் சடைத்த கற்பனைகளில் ஆழ்வதிலே ஓர் இன்பம் இருப்பது என் அநுபவம். அந்த இன்பத்தை இலக்கியச் சுவைஞர்களுடன் பங்கிடல் வேண்டும் என்ற அன்பின் அறுவடையே 'கீதை நிழலில்....'

பூவின் சுகம் ஓர் இனிய அநுபவம். ஆனால், ஒரு பூவினை எடுத்து, 'இதழில் மென்மையை ஸ்பரிசி; அமையும் வண்ணத்தையும் பார்; கந்தத்தை மண, என்றெல்லாம் கூறுதல் சுவைஞனை அவமதிப்பதாகும். இதனை எழுதுதல் எப்படிக் கதைஞனுகிய என் சுவதர்மமாகின்றதோ, அப்படியே இதனைச் சுவைத்தல் சுவைஞனுடைய சுவதர்மமாகும். என் சிந்தனையும் அவன் சிந்தனையும் ஒரே இடத்திற் சங்கமித்தால் அஃது என்பேறு.

இன்னுமொன்று. கீதையின் கருத்துக்களை மலிவித்தலே இதன் தரிசனபயன் என்று கூறமுடியாது. என் நிலைக்களன் பயன் கருதாத பக்தியன்று. படைப்பு என்ற நிலைக்களன் என்று கூடச் சொல்லலாம். ஒளி சத்தென்றால், நிழல் அசத்தா? இருப்பினும், கோடை வெயில் உக்கிரமாக இருக்கும் பொழுது நிழலில் அமர்ந்திருப்பதில் ஒரு சுகம் இருக்கின்றது என்பது நமது அநுபவம்.

வணக்கம்

எஸ். பொன்னுதுரை

## வீசு தென்றல்


| | | |
|---|---|---|
| 1. | நிலா | 9 |
| 2. | விலை | 11 |
| 3. | பணி | 13 |
| 4. | அணு | 16 |
| 5. | மெய் | 18 |
| 6. | ஓம் | 20 |
| 7. | புள் | 22 |
| 8. | புலை | 24 |
| 9. | கண் | 26 |
| 10. | மாயை | 27 |
| 11. | பேறு | 29 |
| 12. | குரு | 31 |
| 13. | நேர் | 33 |
| 14. | திரி | 35 |
| 15. | வேறு | 36 |
| 16. | சோறு | 38 |
| 17. | வழி | 40 |
| 18. | பலி | 41 |
| 16. | பால் | 44 |
| 20. | தயை | 46 |
| 21. | தாய் | 47 |
| 22. | நிறை | 49 |
| 23. | ஈடு | 50 |
| 24. | ஈகை | 52 |
| 25. | வேளை | 54 |

26. சீர் 56
27. கலி 58
28. விடை 59
29. யோனி 61
30. விகை 64
31. வசை 66
32. துணை 68
33. போது 70
34. வினை 71
35. மேடை 73
36. அணி 75
37. பூஜை 78
38. மண் 80
39. கனி 82
40. துதி 84
41. மறை 86
42. வீடு 87
43. கலை 89
44. விதி 92
45. நீலை 96
46. சாரு 98
47. உரை 100
48. ஆணை 102
49. நீயே 105
50. முளை 107

# 1. நிலா

> 'குடம் என்ற உடற்கொட்டு, அதற்குள்
> இருப்பதாகத் தோன்றும் ஆன்மா
> தன் ஆதி சத்துடன் கலக்கும்
> பொழுது சம்சாரசாகரம் இறந்து
> விடுகின்றது.'

அழகின் வாலேயில் மிதக்கும் முழு நிலா. போதிமரத்தின் கீழ் அமர்ந்திருந்தார் ஞானி. எதிரில் வந்து நின்ருன் ஜடாமுடிதாரி.

சுய விசாரணை செய்யும் தொனியில், 'உடம்பு என்ற இப்பாண்டம் அழிந்த பிறகு என்ன சம்பவிக்கின்றது?' என்ருர் ஞானி.

'அதுவே உன் மனத்தினை உலேதல் செயயும் விஞ.விடை நாடற் பயணம். புறப்படும்.

'நீங்கள் தான் கடவுளா?'

'அப்படி நான் சொல்லவில்லே. அஃது உன் நம்பிக் கையைப் பொறுத்தது....' ஜடாமுடிதாரி நடக்கத் தொடங்கினன்.

'நான் கடவுள் நம்பிக்கையற்றவன்' என்ருர் ஞானி.

'அந்த நம்பிக்கையீனங்கூட ஒருவகை நம்பிக்கை தானே?....வா....'

இருவரும் ஓரிடத்தை அடைந்தனர். அவ்விடத்தில், பத்துப் பெரிய நிறை குடங்கள் வரிசையாக இருந்தன. முழு நிலவின் பூரண விம்பங்கள் நீந்தி மகிழும் சாயலில்

அக்குடங்களில் அழகு வழிந்தது. ஞானி சிந்தனையில் ஆழ்ந்தார்.

'பார்த்தாயா குடங்களும் சந்திரன்களும்!'

'பார்த்தேன். பத்துக் குடங்களும் பத்துச் சந்திரன் களும்!' என்றார் ஞானி பரவசத்துடன்.

ஜடாமுடிதாரி குடம் ஒன்றைக் காலால் இடறினன். பானை உடைந்தது. நீர் நிலத்தில் சிந்தியது. சந்திர விம்பம் மாயமாக மறைந்தது.

'இப்பொழுது?'

'ஒன்பது....'

'பத்தாவது சந்திர விம்பம் எங்கே? குடத்துடன் உடைந்ததா? நீருடன் சிந்தியதா?' எனக் கேட்டு ஜடா முடிதாரி சிரித்தான்.

ஞானிக்கு ஒன்றும் புரியவில்லை. மௌனமே அவராகி வானத்தைப் பார்த்தார்.

வானத்தில் ஏக சந்திரன் பவனி வந்து கொண் டிருந்தான்.

'அன்றேல் வானத்திலுள்ள சந்திரனிடத்தேயே அந்த விம்பம் சென்றடைந்து விட்டதென நினைக்கிறாயா?'

ஞானி பதிலளிக்கவில்லை. நிலத்தைக் குனிந்து பார்த்தார்.

'குடங்களிலே தெரிபவை ஒரு சத்தின் பல்வேறு அசத்துத் தோற்றங்கள் என்பதாவது புரிகின்றதா?'

ஞானியின் உள்ளத்தில் திகைப்பு விளைந்தது.

'குடம் என்ற உடற்கொட்டு. அதற்குள் இருப்பதாகத் தோன்றும் ஆன்மா. ஆன்மா தன் ஆதி சத்துடன் கலக்கும்

பொழுது சம்சார சக்கரம் இற்று விடுகின்றது. அதுவே நித்யம்....' எனக் கூறி ஜடாமுடிதாரி சிரித்தார்.

ஞானியின் முகத்தில் சிரிப்பு வெடித்துக் கிளம்பியது.

'ஏன் சிரிக்கின்றுய்?'—ஜடாமுடிதாரியின் கேள்வி.

'ஆன்மாவின் ஈடேற்றம் நான் விளங்காதது. என் வழி சித்த பரிசுத்தம்' என்ருர் ஞானி.

'உனது பார்வை பாதி தூரமே....!'

ஞானி திரும்பிப் பார்க்காமலே போதி மரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினுர்.

ஆனுல், அன்று வைசாக பௌர்ணமியல்ல!

## 2. விலை

'அந்தப் பானையை நானே வனைத்தேன்;
வேக வைத்தேன். எனவே, அஃது
என் சொத்தாகியது.'

அவனும் அவன் கருமமும்.

சக்கரம் சுழல்கின்றது. அதிலிருக்கும் களி மண்ணில் அவன் விரல்கள் வித்வம் பயில்கின்றன. அவன் பணியே யானுன். அருகில் வந்த சித்தரைக் கவனிக்கவில்லை.

தனக்குரிய கௌரவத்தை அவன் தரவில்லை என்ற முனிவு சித்தரின் உள்ளத்தில் திரண்டு விளைந்தது.

சந்தைக்குச் செல்லத் தயாராக இருந்த பானைகளுள் ஒன்றைக் கால்களால் இடறினுர்.

பானை உடைந்தது; சித்தரின் சினமும் உடைந்தது!

குயவன் நிமிர்ந்தான். சக்கரம் தரித்தது. சித்தர் பானை மீது உரிமை பாராட்டியிருப்பதை உணர்ந்தான். கோபம் குயவன் மாட்டு இடம் பெயர்ந்தது.

'ஏன் பானையை உடைத்தாய்?'

'என்றுவது உடைந்து போகும் மட்பாண்டம். அதற்காக ஏன் இத்தனை கோபம்?' சித்தர் சிரித்தார்.

'இது என் பானை. விலை கொடுத்து வாங்கிய பிறகு நீ அதனை உடைத்திருந்தால் எனக்குக் கவலையில்லை'.

'அப்படியா? மண்ணேயான பானைக்கு எப்படி விலை விளைந்தது?

'அந்தப் பானையை நானே வனைந்தேன்; வேக வைத்தேன். எனவே, அஃது என் சொத்தாகியது. விலையை செலுத்துபவனுக்குப் பானையின் சொத்துரிமையை விற்கிறேன். அப்பொழுது பானையை உடைக்கும் அதிகாரம் வாங்கியவனைச் சார்கின்றது. இப்பொழுது செய்யத் தக்கது இதுதான்....'

'எது?'

'பானையை உடைத்தபடியானல், நீ பானையின் உரிமையை அநுபவித்தவனுகி விட்டாய். எனவே, நீ பானையின் விலையை எனக்குத் தருவதுதான் உகந்தது; அதுவே தர்மம்.'

குயவனின் கூற்றில் தொனித்த நெறி சித்தரின் அறிவுப் பிடிக்குட் சிக்கவில்லை. அகந்தையின் பசளையுண்ட சித்தரின் முனிவு மீண்டும் மதாளித்தது.

'குயவா! பானை உன்னுடையது எனச் சொத்துரிமை பாராட்டுகின்ருய். நீ வனைந்ததினுலும், வேகவைத்ததினுலும் வந்தடைந்த அதிகாரம் என்கிருய்! பானையை எதிலிருந்து செய்தாய்?'

'மண்ணிலிருந்து....'

'முதலில் நீ சூனியத்திலிருந்து மண்ணை உருவாக்கிக் காட்டு. அஃது உன்னாற் சாலுமாயின், நீ கோரும் விலையை நான் தருகிறேன்....'

குயவன் ஒரு கணம் சிந்தனையில் ஆழ்ந்தான். அவனை மடக்கியதான பூரிப்பில், சித்தரின் முகத்தில் ஏளனச் சிரிப் புக்கள் பூத்தன.

சக்கரம் சுழல்கின்றது. பானை வனையும் பணியின் தொடர்....

சித்தர் ஏமாப்புடன், 'நான் சொன்னதன் தத்துவம் புரிந்ததா?' எனக் கேட்டார்.

'நான் எப்படித்தான் வழக்குரைத்தாலும், நீ பானைக்கான விலையைத் தரப்போவதில்லை. குயுக்தி வாதத்திலே விரய மாகும் நேரத்தில் இன்னொரு பானையை வனைந்தெடுப்பேனே யாகில், நீ உடைத்த பானையை ஈடு செய்யலாம்' எனக் கூறிய குயவன் வனைதற் பணியில் ஒன்றலானான்.

குயவன் ஏதோ மகாதத்துவம் பேசிவிட்டதான மலைப்பு சித்தரின் மனத்தினைக் குடையலாயிற்று.

## 3. பணி

'நான் உன்னிற் கலந்தேன். கடமையை
இயற்றி, பயனை ஈசுரார்ப்பண
மாக்கினேன். மௌனமும் என்
யோகமே'....

அன்று மகாபாரதப் போர் முடிந்தது. வெற்றி அறத்தின் பக்கலில் பலித்தது. பார்த்தனின் காண்டீபம் வெற்றி நத்தி யெழுப்பிய நாஒலி இன்னமும் மடியாது நாற்பக்கமும்

எதிரொலிப்பதான பிரமை நிலவியது. பார்த்தசாரதியின் தேரிலே பூட்டப்பட்ட புரவிகள்கூட ஒருவித வெற்றிப் பெருமிதத்தினுல் ஆரோகணித்தன.

'சத்திய நெறியே அகிம்ஸை. கொலேயே கொல்லாமையாகவும் அமையலாம். அதனே இயற்றும் கர்மமே க்ஷத்திரியனுன அர்ஜுனனின் சுயதர்மம் என்றேன். கீதையும் பிறந்தது. அதன் வழிநின்று அவன் நிச்சய புத்தியடைந்தான். பயன் ஈசுரார்ப்பணமாயிற்று. வெற்றி வெற்றியின் பக்கல் நிலேத்தது....'-இவ்வாறு தீர்த்தனின் மனத்திலே எண்ண அலேயொன்று சுழிந்தது. அவன் முகம் சத்திய சோதனேயின் வெற்றி முறுவலாக ஒளிர்ந்தது.

வாகை வெறியில் காண்டீபம் தன் வகை மறைந்தது. பற்றுக்களே அறுத்த ஞானியாகப் பார்த்தன் கண்ணன் மீது பக்தி செலுத்துதல் அதற்குப் பிடிக்கவில்லே. 'விஜயா! வில் என்ருல் நான்; நான் என்ருல் நீ. எனவே, வெற்றி நினதே!' எனக் காண்டீபம் இரகசியமாகச் செவி கடித்துக் கூறிற்று.

காண்டீபத்தின் கூற்றுக் கண்ணனின் திருச்செவிகளிலே விழத் தவறவில்லே. அவன் காண்டீபத்தைத் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் அநந்தகோடி அர்த்தங்களேச் சொல்லாமலே சொல்லும் ஒரு முறுவல்.

தேரின் வேகம் குறைகிறது. தரிப்பு நிலே.

தேர்ச் சக்கரங்கள் பரம இரகசியமான குரலிற் பேசிக் கொண்டன. உரையாடலின் சாரம்: 'தக்க சமயத்தில் நாங்கள் மட்டும் நிலத்திலே புதைந் திருக்காவிட்டால், பார்த்தன் கர்ணனின் நாகாஸ்திரத்திற்குப் பலியாகியேயிருப்பான். யுத்தத்தின் முடிவு வேறு விதமாக அமைந்து இருக்கும்....'

கண்ணனின் திருச்செவிகள் இக்கூற்றைக் கிரகித்தன. அவன் முகத்தில் அதே முறுவல்.

கிழவியொருத்தியின் ஏக்கப் பெருமூச்சின் கேவல், கண்ணனின் செவிகளை அடைகின்றது.

'எல்லாம் அக்கள்ளனின் சூழ்ச்சிகள்! போரிலே என் இஷ்டம் வென்ருன். அந்த வெற்றிக்கு என் சிரேஷ்டனைப் பறிகொடுத்தேனே.... 'மாமி, மாமி....' என மயக்கி, அந்த மாயவன் தன் காரியம் யாவும் சாதித்து விட்டான்....இவன் பொருட்டுப் பெற்ற வரம், கலவிக் கனியமுதின் முதலாவது அறுவடையாக ஈன்றெடுத்த மகனின் எமனாகியது....'

புதிதாகச் சுரந்துள்ள தாய்ப்பாசத்தின் ஏக்கரவே இவ் வோலம், என்பதைக் கண்ணன் அறிவான். அவன் முகத்தில் அதே முறுவல்.

தேரிலிருந்து இறங்கிய கண்ணன் எதையோ நினைவு படுத்திக் கொண்டவனுக, 'அச்சாணியே! ஏன் நீ மட்டும் மௌனமாக இருக்கின்ருய்?' எனக் கேட்டான்.

'பரந்தாமா!....நான் இருக்கும் நினைவு சக்கரங்களுக்கே இல்லாதபோது இத்தேருக்கோ, உன்னையே சாரதியாகப் பெற்ற பார்த்தனுக்கோ, அன்றேல் உலகுண்ட பெம்மானுன உனக்கோ....'

'உன்னைப் பற்றிய நினைவு இல்லாவிட்டால், உன் நலனை விசாரித்திருப்பேனு? ஏதேனும் மனக்குறை....' எனக் கண்ணன் குறுக்கிட்டான்.

'கீதோபதேசம் என் செவிகளிலும் விழுந்நது. நான் உன்னிற் கலந்தேன். கடமையை இயற்றிப் பயனை ஈசுரார்ப் பணமாக்கினேன். அந்த இன்பத்தில் மௌனமானேன். மௌனமும் என் யோகமே என்பதைப் பரந்தாமன் அறியானே?' எனக்கூறிய அச்சாணி மௌனத்தைத் தொடர்ந்து இயற்றியது.

கண்ணனின் முகத்தில் ஒளிர்ந்த முறுவல் சிரிப்பாகக் கனிந்து வெடித்தது!

## 4. அணு

'உன்னுல் எண்பிக்க இயலாத கற்பனை கள் நீ கண்டுபிடிப்பவற்றின் அடித் தளமென்ருல், வாழ்க்கையின் மாயா முடிச்சுகளை அவிழ்த்துக்காட்டுவ தற்கு ஏன் என்கற்பிதங்கள் அடிப் படையாக அமைய மாட்டா?'

அணுவைத் துளைத்து அதன் புகழைப் பரப்பிய விஞ்ஞானி யின் பார்வையில் சந்நியாசி அஞ்ஞானியாகத் தோன்றினுன். போலி வேடத்தைக் களைந்தெறிந்து உண்மையை நிலை நாட்டல் வேண்டுமென்ற எண்ணம் அவன் உள்ளத்தில் ஆழமாக வேர் பாய்ச்சியது. ஒரு சமயம் தன் யுத்தியினுல் விஞ்ஞானி சந்நியாசியைச் சம்பாவத்திற்குள் இழுத்துக் கொண்டான்.

'சந்நியாசம் என்ருல் என்ன?' என விஞ்ஞானி அலட்சிய மாகக் கேட்டான்.

'சந்நியாசம் என்ருல் எல்லாக் கர்மங்களையும் விட்டு விடுதல் என்று பொருள். உலகத்திலுள்ள கர்மங்களைச் செய்து கொண்டிருந்த போதிலும், அனைத்தும் உருகி ஓடிப்போகும் படியான யுக்தியை அனுசரிப்பதினுற் சந்நியாசங் கிட்டுகிறது. சந்நியாசி அகர்மியுமாவன். அவன் பொறிகளினுற் கர்மம் எதுவும் புரியான். கர்ம சக்தி ஒடுங்கிக் கிடக்கும். இச் செயலின்மையே செயலாகவுஞ் சித்திக்கிறது.... சந்நியாசி யல்லாதானுக்குச் செயலே செயலின்மையாகும் யோகம் கிட்டலாம்........' எனச் சந்நியாசி அக்கறையுடன் விளக் கினுன்.

'செயலின்மையே செயலா? செயலே செய லின்மையா?'

'ஆம். சக்கரம் வேகமாகச் சுழலும்பொழுது, அஃது அசைவதாக நமக்குத் தோன்றுவதில்லை. செயலிற் செயலின்மை யோகம்; செய்யாமையிற் செயல் சந்நியாசம். ஆகா, எவ்வளவு இனிய காவியமயமான கற்பனை!....' பதிலில் பக்திப் பரவசம் சிலிர்த்தது.

'பூ....அதுதானே பார்த்தேன்! எல்லாம் வெறும் கற்பனை தானா?' விஞ்ஞானி இடக்காகக் கேட்டான்.

'கற்பனை என்பது அற்பமா?'

'அற்பமே தான்! விஞ்ஞானிகள் எதையும் திடமாக நிறுவ வல்லவர்கள்....'

'அப்படியானால், கேத்திர கணிதத்தில் 'அ, இ, உ, என ஒரு முக்கோணம் இருப்பதாக வைத்துக் கொள்' என்பது எதனால்?'

'அது கற்பனையல்ல; அது தற்புனைவு. அ, இ, உ, ஆகியன மூன்று புள்ளிகள். அஇ, இஉ, உஅ ஆகியன மூன்று ரேகைகள். அவை முக்கோணம் ஒன்றினைச் சமைக்கின்றன.'

'புள்ளி என்றால் என்ன?'

'முப்பரிமாணம் எதுவுமற்றது....'

'ரேகை என்றால்?'

'அகலமில்லாத நீளம்....

'முப்பரிமாணமெதுமற்ற புள்ளியையோ, அகலமில்லாத நீளத்தையோ காட்டுக!'

விஞ்ஞானி ஒரு கணம் யோசித்தான். பின்னர் கூறுவான்; 'புள்ளியையும் ரேகையையும் கற்பிதம் என்று வைத்துக் கொண்டாலும், அவற்றினடிப்படையிற் பல தோற்றங்களின் உண்மையை நம்மால் நிறுவமுடிகின்றது....'

'புள்ளிகளிலும் ரேகைகளிலும் நீ நம்பிக்கை வைத்திருக்கின்ருய். நான் பகவானிடத்திலும், ஆன்ம ஈடேற்றத்திலும் நம்பிக்கை வைத்திருக்கின்றேன். உன்னல் எண்பிக்க இயலாத கற்பனைகள் நீ கண்டுபிடிப்பவற்றின் அடித்தளமென்ருல், வாழ்க்கையின் மாயா முடிச்சுகளை அவிழ்த்துக் காட்டுவதற்கு ஏன் என் கற்பிதங்கள் அடிப்படையாக அமைய மாட்டா?'

சந்நியாசியின் வாதம் பிழையானதென நிறுவ வல்ல தேற்றத்தைக் கண்டு பிடிப்பதற்கு அந்த விஞ்ஞானிக்குப் புள்ளிகளும் ரேகைகளும் உதவ மறுத்தன!

## 5. மெய்

'மௌனங்கூட அறிவின் திறவுகோலாக
அமையலாம்........'

அநாதியும் அந்தமுமற்ற அத்தத்துவத்தின் படுமுடிச்சினை அவிழ்ப்பதில் அறிஞர் குழாம் ஒன்று ஈடுபட்டிருந்தது. தத்தமது அறிவுக்கும் அறிவின்மைக்கும், பக்குவத்திற்கும் பக்குவமின்மைக்கும் ஏற்றவாறு ஒவ்வொரு விதமான விளக்கக் கக்கல்! ஒருவரின் விளக்கம் ஏனையோருக்கு அறிவின்மையின் அலங்கோலமாகத் தோன்றியது. விவகாரம் லாட சங்கிலியாயிற்று.

பழுத்த கிழவர் ஒருவர் மட்டும் மௌனம் ஓம்பினர்.

'உங்களுடைய விளக்கம் என்ன?' ஏனைய அறிஞர்கள் அவரைக் கேட்டார்கள்.

'அறிஞரின் எண்ணிக்கை எத்தனையோ, விளக்கங்களும் அத்தனை! அனைத்தும் தவருனவை என்பது பெரும்பான்மை அபிப்பிராயம். மெய்யை யான் அறிவேன். அதனை விண்டேனல்லேன்........ 'மீண்டும் மோனத்தில் ஐக்கியம்.

கிழவர் அறிந்து வைத்திருக்கும் உண்மையை அறியும் அவா ஒவ்வொரு அறிஞனையும் அலைக்கழித்தது. 'பேரறிஞ! அந்த உண்மையை எனக்கு மட்டும் விண்டு காட்டுங் கள். நானே பாதுகாப்பான இரும்புப் பெட்டகம்.......' என ஒவ்வொரு அறிஞனும் அவரை வளைய வலம் வந்தான்.

'வேளை வரும். மெய் பிரகடனமாகும்' என்ற ஒரே விடையைக் கிழவர் எல்லோருடனும் பங்கிட்டார்.

சிறிது காலத்தில் கிழவர் நோய்வசமானார். 'மரணப் படுக்கையில் இருக்கிறார்' என்ற செய்தி பரவியது. அறிஞர் குழாம் அவரைச் சூழ்ந்து கொண்டது.

'இனியும் தகுந்த வேளைக்குக் காத்திருத்தல் அறிவுடைமை யாகாது. அரிய உண்மை ஒன்று தங்களுடன் மரித்தால், மனித குலத்திற்கு அது பயன்படாது போய்விடும். எங்களுக் காக அல்ல, வருங்கால மனித குலத்தின் இரட்சிப்பிற்காக அந்த மெய்யை விண்டு காட்டுங்கள்....' என அவர்கள் கெஞ்சினார்கள்.

கிழவரின் கட்டித்த மௌனம் கலைந்தது.

'அத்தத்துவத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கம் கொடுத்தீர்கள். உண்மை என்ன வென்றால் அத்தத்துவம் என்ன என்று எவருக்கும் புரியவில்லை. மற்றவர்கள் உங்களைப் பற்றி அறிஞர் என்று பெருமை யாகப் பேச வேண்டுமென்பதற்காக, விளங்காததைப் பற்றி விளங்கியதான பாவனையில் விளக்கந்தர முன் வந்தீர்கள்....'

'பேரறிஞ! இந்தப் பாவிகளை மன்னித்தருளுங்கள்' எனத் தண்டனிட்டார்கள்.

'இதோ, மெய்யை விண்டேன். அத்தத்துவத்தின் ஓர் அட்சரந்தானும் எனக்கு அன்றும் விளங்கவில்லை; இன்றும் விளங்கவில்லை. இந்த உண்மையை நான்

அன்றே அறிந்திருந்தேன்!' என்றார் கிழவர் வெகு நிதான மாக.

'இதனை அன்றே சொல்லியிருக்கலாமே........' ஏமாற் றத்துடனும், அது பிரசவித்த ஆத்திரத்துடனும் சத்தினர் கள்.

'நான் இதனை அன்றே சொல்லியிருந்தால், நீங்கள் என்னை இன்றைவரை பேரறிஞர் எனக் கொண்டாடியிருப்பீர் களா?....மௌனங்கூட அறிவின் திறவுகோலாக அமையலாம் என்ற உண்மையை இப்பொழுது விண்டு காட்டினேனல்லவா?' எனக் கூறிக் கொண்டே கிழவர் கண்களை நிம்மதியாக மூடினார்.

## 6. ஓம்

'ஓம் என்றால் ஆம் என்றும் அர்த்தம்;
பரம்பொருள் என்றும் அர்த்தம்.
பரம்பொருளான அவன் நித்தியன் ...'

அந்த மந்திரத்தைப் பக்தி நனிசொட்டும் பாவனையில் உச்சரித்தார் தபஸ்வி. அர்த்தமற்ற உச்சாடனத்தில் நேரத்தை அவர் பாழாக்குவதாக நாஸ்திகனுக்குத் தோன் றியது.

'உச்சரிக்கும் 'ஓம் தத் ஸத்' அர்த்தமற்ற சொற் கோவை....'

'நான், நீ என்று பிரித்துப் பேசாதே. உன்னையும் என்னையும் இணைக்கும் பொழுது நாமாகி விடுகின்றோம். நாமையும் அவனான பரம்பொருளையும் இணைத்து விட்டால், சுயநலம் - பிறர் நலம் - பரமார்த்தம் எல்லாமே ஒன்றாகிப் பேரின்பம் சித்திக்கின்றது. இக்கருத்தையே ஓம்தத்ஸத் பரப்புகின்றது.

'ஓம் என்ருல்....'

'ஆம் என்றும் அர்த்தம்; பரம்பொருள் என்றும் அர்த்தம். பரம்பொருளான அவன் நித்தியன். நேற்று-இன்று-நாளை என்ற கால வரம்புகளைக் கடந்தவன். அவன் பகவான்; நாம் சாதகர். நம்முடைய இந்த சிருஷ்டி பூஜைப் பொருள். அவனுடைய வழிபாட்டிற்கே உதவுவது. இந்தப் பாவனை நமது நெஞ்சில் நிறையும்பொழுது நாம் ஓம் என்பதைப் புரிந்து ஆமோதிக்கின்ருேம்.'

'ஸத் என்ற சொல்தான் ஆண்டவனைக் குறிக்குமெனக் கேள்விப்பட்டேன்....'

'ஆண்டவனின் நாமங்கள் அளப்பரியன. எனவே, ஸத் என்பதும் அவனைக் குறித்தது. பகவான் மங்களகர மானவனுகையால் ஸத் ஆனுன். சிருஷ்டி என்ற ஆறு வேகத்தினுல் சுத்தமாகிக் கொண்டிருக்கின்றது. சிருஷ்டி முழுமையும் சுபமானதாகவும், மங்களகரமானதாகவும் இருப்பது போலவே நமது செயல்களும் அமைதல் வேண்டும். சுத்தமாகவும் பக்தி மயமாகவும் நாம் செயலாற்றும் பொழுது ஸத் நமதாகி விடுகிறது....'

'நடுவிலுள்ள தத் என்பது எதைக் குறிக்கிறது?'

'தத் என்ருல் அது. அதுவும் பகவானையே குறிக்கும். சிருஷ்டியிலிருந்து பகவான் வேறுபட்டவன் என்பது தாற் பரியம். சூரியன் உதித்ததும் இருள் அகலுகின்றது. பறவைகள் கீதமியற்றிப் பறக்கின்றன. பங்கயம் மொட்ட விழ்த்து விரிகின்றது. உயிர்கள் உயிர்ப்புக் கொள்ளுகின்றன. ஆனுல், இந்த விளைவுகளிலிருந்து சூரியன் முற்றிலும் தனித்து நிற்கின்றது. நம் வாழ்க்கையில் அத்தகைய தொடர்பின்மை கைவந்து விடுமானுல், 'தத்' தத்துவம் நம் வாழ்க்கையில் புகுந்து கொள்ளுகின்றது.'

'நீ செத்த பிறகு....நீ 'ஓம் தத் ஸத்' என்பதின் மூலம் நம்பிக்கை வரித்த பரம்பொருளைக் காணமுடியாது. இல்லாத

ஒன்றை இருப்பதாகக் கற்பித்து வாழ்நாளின் பெரும் பகுதியை வீணே செலவு செய்ததைப் பற்றி உனக்கு ஏற்படக்கூடிய துக்கத்தை நினைத்து நான் இப்பொழுதே அநுதாபப்படு கின்றேன்....'-போலி அநுதாபத்தைத் தன் குரலிலே நாஸ்தீகன் குழைத்தான்.

'இல்லை. நாமில்லாத நமது சாதனை; எப்பொழுதும் மங்கள நினைவு; தற்பற்றை அழித்த சமத்துவநிலை;- இவையே, எஞ்சியிருக்குமானால், எனக்கு நிறைவின் நிறைவே சித்திக்கும்' எனத் தபஸ்வி அமைதியாகப் பதிலிறுத்தார்.

## 7. புள்

'ஜீவன் பரத்தை அடைவதற்கு ஞான மும் பக்தியும் இரு சிறகுகளாகப் பயன்படுகின்றன. கர்மயோகத்தை சமத்துவப்படுத்துவதும் வால் எனக் கூறலாம்.

அடர்ந்த மரத்தின் கீழ், பாய் விரித்திருந்த நிழலில் அமர்ந்து கீதையின் பேருண்மைகளை விளக்கிக் கொண் டிருந்தார் மகான்.

அப்பொழுது, அம்மரத்தின் கிளையிலே தங்கியிருந்த பறவை ஒன்று வானவெளியிலே பறக்கத் துவங்கிற்று. சீடர்களுடைய கவனம் சுதந்திரமாகச் சிறகடிக்கும் அந்தப் பறவையிலே நிலைத்தது.

'கீதா படனத்தை மறந்து விடுவோம். ஆகாயத்தில் வட்டமிடும் அந்தப் பறவை நம் சிந்தையை நிரப்புவதால்,

அதனைப்பற்றிச் சற்றே விரிவாக அறிதல் பயன் சுரக்கலாம்' என்றார் மகான் அமைதியாக.

'புலனைப் புறவிடயங்களிலே நாம் அலையவிட்டதை மகான் அவதானித்து விட்டாரே' என உன்னிச் சீடர்கள் வெட்கப்பட்டார்கள்.

'உங்கள் செயலில் நாணுந் தகைமை எதுவும் இல்லை. விழி ஆண்டவன் படைப்பு. விழியினாற் காட்சி சித்திக்கின்றது. விழிக்காக இறையைக் குறை சொல்வதா? அந்தப் பறவையைப் பாருங்கள். ஆனந்தமாக ஆகாயத்திலே பறக்கும் ஆற்றல் அதற்கு இயல்பாகப் பொருந்தி இருக்கின்றது.... நம்மால் அவ்வாறு பறக்க இயலவில்லை....' என ஆனந்தப் பரவசத்துடன் மகான் கூறினார். அவர் வித்திய பாச வார்த்தைகளினாற் பிணிக்கப்பட்ட சீடர்கள் மீண்டும் அப் பறவையை நன்றாக அவதானித்தார்கள்.

'புள் பறப்பது எதனால்?'-சுய விசாரணை செய்யும் பாவனையில் மகான் கேட்டார்.

'இரு இறகுகளும், ஒரு வாலுந் துணை செய்கின்றன' என்று சீடன் ஒருவன் தாற்பரியம் விண்டான்.

'புகன்றது சரி. இரு சிறகுகள்; ஒரு வால்!....நமது வாழ்க்கையின் குறி முக்தி. அதற்கு உற்ற நெறி யோகம். கீதையிலே கர்மம், ஞானம், பக்தி ஆகிய மூன்று யோகங் களும் கூறப்பட்டிருக்கின்றன. ஜீவன் பரத்தை அடை வதற்கு ஞானமும் பக்தியும் இரு சிறகுகளாகப் பயன்படு கின்றன. கர்மயோகத்தைச் சமத்துவப்படுத்தும் வால் எனக் கூறலாம். எல்லாச் சாதனங்களும் இம்மூன்றினுள் அடங்கும்....'

சீடர்கள் அக்கணமே ஆகாயத்தில் வட்டமிட்ட பறவையை மறந்து போனார்கள். கீதைப் போதனைகள் அவர்களுடைய நெஞ்சமெல்லாம் சிறகடிக்கத் துவங்கின.

## 8. புலே

'அசைவுள்ள சரமும், அசைவில்லாத அசரமும் சேர்ந்ததுதான் இவ் வுலகம். அதுவே சராசரம்!'

அங்கே மந்தை மேய்ந்து கொண்டிருந்தது. தன் பாதுகாப்பிலுள்ள அவற்றைப் போஷிப்பதான திருப்தி யாதவப் பயல் கண்ணனுக்கு ஏற்பட்டது. மரத்தின் கிளையிலே தாவி அமர்ந்து, குழலிசை பொழிந்து சுகிக்க லானுன்.

குறவனும் சிவன் அவ்வழியே வந்துகொண்டிருந்தான். அவனுடைய கையிலே அன்றைய வேட்டைத் தேட்டமாம் முயல் ஒன்று இருந்தது. அதன் மேனியிலே சிந்திக்கிடந்த உதிரம் கண்ணனுக்குக் கொலேச் செயலே ஞாபகப்படுத்தியது. கொலேத் தொழிலால் உயிர்வாழும் அக்குறவன்மீது யாதவனுக்கு அருசை மிகுந்தது.

'குறவா! நீ புல்லியன். கொலே அதர்மமானது. பாவம், அந்த முயலே நீ கொல்வதற்கு, அது உனக்குச் செய்த தீங்கென்ன?'

'பசித்த வயிற்றுக்கு உணவிடுவது தர்மம். எனக்கு உணவாக இன்று இந்த முயல்தான் கிடைத்தது. இதில் எங்கே வந்து குதித்தது அதர்மம்?' ...எனச் சிவன் தன் கட்சியை விளக்கினன்.

'தர்மா அதர்மங்கள் இருக்கட்டும். ஓர் உயிரைச் சித்திர வதை செய்திருக்கின்ருயே. அவ்வமயம் ஓர் உயிர் அல்லற் படுவதைப் பார்க்க இன்பமாகவா இருந்தது? நீ துஷ்டன்; கொடூரன்' எனக் கண்ணன் குறிக்கிட்டான்.

சிவனின் சினம் உருத்திரா தாண்டவமாடிற்று.

'போதும், இடையனே! நீ அமர்ந்திருக்கும் இந்த மரத்தைப் பார். பல திசைகளும் கிளை பரப்பி, விண்ணோக்கி இறை தியானத்தில் ஆழ்ந்திருப்பதான சோபிதத்திற் காட்சி தந்தது. வேட்டைக்குச் செல்லும் வழியில், ஒரு கணம் தரித்து, இதன் கவினைச் சுவைத்தேன். இந்த மரம் உனக்குச் செய்த குற்றம் என்ன? இரு பாரிய கிளைகளை முறித்து, உன் ஆடுகள் தழைகள் மேய்வதற்கு வசதி செய்து கொடுத்திருக்கின்றாய். கிளைகளின் மேல் பகுதிகள் முற்றாக மரணித்தும், கீழ்ப் பகுதிகள் இன்னமும் மரணாவஸ்தையிலே இன்னலுற்றுக் கொண்டிருக்கின்றன. அணு அணுவாகக் கொல்லும் இதைப் பார்க்கிலும் ஒரே அடியில் முயலை வீழ்த்துவது சித்திரைவதையாகி விடுமா?' எனச் சிவன் ஆத்திரத்தை ஆலகாலமாகக் கக்கினான்.

கிளையிலிருந்து கீழே குதித்த கண்ணன், 'மரம் அசரம்....' என வார்த்தைகளைச் சப்பி உச்சரித்து இழுத்தான்.

'அசைவுள்ள சரமும், அசைவில்லாத அசரமும் சேர்ந்தது தான் இவ்வுலகம். அதுவே சராசரம்!' எனக்கூறிய சிவனின் கண்களில் பிறிதொரு வேட்டை தென்படவே, அதனைத் துரத்தத் தொடங்கினான்.

கண்ணனின் உள்ளத்திலே குற்ற உணர்வொன்று பல திசையும் கிளை பரப்பிச் சடைத்து வளரலாயிற்று!

## 9. கண்

'ஊனக் கண்கள் மட்டும் உள்ளவனுக்கு அது புரியாது. கடவுளை ஞானக் கண்களால் உணருதல் வேண்டும்'

'அன்பே சிவன்' என்றான் சித்தன்.

'சிவனே பித்தன்' என்றான் பித்தன்.

இருவரும் எதிர்பாராத வசத்தால் பைத்தியக்காரர் விடுதி ஒன்றின் முன்றில் சந்தித்தார்கள்.

'நான் கடவுளை உணர்ந்தவன். புரிந்ததா?' எனப் பித்தனை மடக்கினான் சித்தன்.

'கடவுளை உணர்ந்தவன் என்கிறாய். நீ அவரைக் கண்டிருக்கிறாயா?'

'காணவில்லை.'

'காணாததை எப்படிக் கண்டாய்?'

'ஊனக்கண்கள் மட்டும் உள்ளவனுக்கு அது புரியாது. கடவுளை ஞானக் கண்களால் உணருதல் வேண்டும்....'

'இவ்வளவுதானா உன் சாமர்த்தியம்? நான் கடவுளை இந்த இரண்டு கண்களாலும் பார்த்திருக்கிறேன்' எனக் கூறிய பித்தன் பேய்ச்சிரிப்பில் மூழ்கினான்.

'நான் நம்பமாட்டேன்' என்றான் சித்தன்.

'இது யோக்கியமா? நீ ஞானக் கண்களாற் கடவுளை உணர்ந்ததாகச் சொன்னதை மறு பேச்சின்றி நம்பினேன். நான் கடவுளை என் ஊனக் கண்களாற் கண்டேன் என்று சொல்வதை நீ ஏன் நம்ப மறுக்கின்றாய்? இது நியாயமல்ல....'

பித்தன் பேசுவதில் ஏதோ நியாயமிருப்பதாகச் சித்தனுக்குத் தோன்றியது. எனவே, 'எங்கே கண்டாய்?' எனக் கேட்டான்.

'இந்த விடுதியிலேதான்!'

'அப்படியானல், நீ ஏன் வெளியே வந்துவிட்டாய்?'

'உஸ்ஸ்....! நான் வெளியே வந்திருக்காவிட்டால், அவர் உள்ளே இருக்கும் சமாசாரம் உமக்குத் தெரிந்திருக்குமா? அத்துடன், அவர் உள்ளே வந்தபிறகு எனக்கு அங்கே என்ன வேலே?'

இப்பொழுது, சித்தனைப் பைத்தியக்கார விடுதிக்கு அழைத்துச் செல்கிருர்கள்.

## 10. மாயை

' பந்தம்—தொந்தம்—உறவு எல்லாம்
மாயையினல் விளைபவை. மாயை நீங்
கினுற்ருன் உண்மையின் உண்மைச்
சொருபத்தைத் தரிசிக்கலாம்....!

அத்தியந்த இரத்த பாசமே நிச்சயமானது எனத் தந்தையும் மகனும் நம்பினுர்கள்.

'பந்தம்—தொந்தம்—உறவு எல்லாம் மாயையினல் விளைபவை. மாயை நீங்கினுற்ருன் உண்மையில் உண்மைச் சொருபத்தைத் தரிசிக்கலாம்!' என்ருர் சந்நியாசி.

'சொந்த உறவுகள் எதுவுமற்ற தேசாந்தரியாக ஊர் சுற்றும் சந்நியாசிகள் மாயை என வறட்டுத் தத்துவம் பேசலாம். நான் தந்தை. இவன் என் மகன்-இருவருக்கு மிடையில் இரத்த உறவு இருக்கிறது. எனவே, இந்தத் தொந்தத்தில் விளையும் பாசம் நிச்சயமானது....' என்ருன் தந்தை.

'நிச்சயம் என அடித்துப் பேசுவதும் மாயையைச் சார்ந்ததே. மனிதனின் பக்குவ நிலேகளுக்கு ஏற்ப மாயையின் தோற்றங்களும் மாறுபடுகின்றன....' என்ருர் சந்நியாசி.

'ஊர்மனைக்குட் புகுந்து, இல்லற சுகம் மாந்துவோர் மனங்களில், 'சஞ்சலத்தையும் பேதலிப்பையும் ஏற்படுத்துவதற்காக மாயை என்ற சொல்லை பூச்சாண்டியாக உபயோகிக்கின்றீர். மாயை என நீர் கருதுபவற்றைத் திருட்டாந்தமாக விளக்காவிட்டால், உம்மை....' என்று தந்தை தோலோ தோலென உதடுகளைக் கடித்தான்.

'விளக்கம்!....திருட்டாந்தம்!....அதையும் மனிதன் பக்குவ நிலையில் உணர்தல் வேண்டும். எதற்கும் வாருங்கள். சற்று தூரம் வரை நடந்து வரலாம்....' எனச் சந்நியாசி அழைத்தார். மூவரும் புறப்பட்டார்கள்.

வழியிற் கடைத்தெரு. அங்கு ஒரு பொம்மைக்கடை. பலவகைப் பொம்மைகள் அடுக்கப்பட்டிருந்தன. மகனின் கவனம் குறிப்பிட்ட பொம்மை ஒன்றிலே நிலைத்தது. 'அப்பா, அதோ அந்தப் பாம்பை வாங்கித் தா' என மகன் கூறினன்.

'பாம்பா?....அது பொம்மையடா!' எனக் கூறித் தந்தை சிரித்தான். சந்நியாசியும் சிரித்தான்.

இரவாகியது. சனசஞ்சாரமற்ற வழிப்பாட்டில் நடக்கலாயினர்.

திடீரென்று, 'ஐயோ பாம்பு!' என்று தந்தை கத்தினர்.

'பாம்பா? இது தாம்பு!' எனக் கீழே கிடந்த கயிற்றுத் துண்டை எடுத்து எறிந்து சந்நியாசி சிரித்தார். மகனும் சிரித்தான்.

நடையில் மேலுந்தூரம் நகர்ந்ததும், பாம்புப் புற்று ஒன்று தெரிந்தது. புற்றின் நுழைவாயில்களிலே உழவன் ஒருவன் பாலூற்றி, பூஜை செய்து கொண்டிருந்தான்.

அப்பொழுது பாம்பொன்று நெளிந்து, படம் எடுத்து ஆடியபடி புற்றுக்கு வெளியே லாவகமாக வந்தது.

'பாம்பு! பாம்பு!' எனத் தந்தையும் மகனும் கத்தினார்கள்.

'உஸ்....நமது குலதெய்வம் நாகதம்பிரானைக் குழப்பாதீர்கள். அவர் இப்பொழுதுதான் பூஜையிலே பக்குவமாகக் கலக்கின்றார்....' என்றான் குடியானவன்.

'பாம்பு கடவுளா?' எனத் தந்தையும் மகனும் கேட்டார்கள்.

'வயல் வெளிகளிலே நாங்கள் பாடுபட்டுழைக்கின்றோம். பூச்சி புழுக்கள் நமது பயனை அழிக்க வருகின்றன. அந்தப் பூச்சிகளை அழித்து, நமது பயன் முழுமையாகக் கிடைக்கும் வகையில் காவல் செய்யும் பாம்பு தெய்வமில்லையா?' என உழவன் பக்திப் பரவசத்துடன் கூறினான்.

சந்நியாசி சிரித்தார். தந்தையும் மகனும் எதுவும் புரியாமல் விழித்தார்கள்.

## 11. பேறு

> 'ஞானத்திற்கும் கர்மத்திற்கும் உள்ள தொடர்பினை விசாரிக்கும் எண்ணம் பரமாத்மாவிற்குத் தோன்றியது. இரு மீமாத்சைகளையும் பக்தி என்ற இனிய பிணைப்பினாற் பூரணப்படுத்தி என்னை அருளினார்.'

அந்நூல் நிலயத்தின் ஒதுக்குப்புறமான மூலை. பழைய நூல்கள் மூன்று. பல்லாண்டுகள் நோற்றிய மௌனத்தைக் கலைத்தன.

'என் மகிமையை இத்தலைமுறையினர் மறந்தனர் போலும். நூலகத்திலுள்ள அத்தனை நூல்களிலும் யானே

சிறந்தவன். சைமினி முனிவரால் சிருஷ்டிக்கப்பட்டவன். 'தர்மத்தை அறிய ஆசை....' என்பதே என் தொடக்கம். சுயதர்மத்தில் ஜனிக்கும் கர்ம சுத்தியை விளக்குகின்றேன்' எனப் பூர்வ மீமாம்சை தன் பெருமைக்குச் சுயகட்டியங் கூறியது.

'சற்றே அடக்கத்துடன் பேசு. சைமினி மாமுனி வரின் குருதேவரான வியாச முனிவர் என்னைப் படைத்த னர். 'பிரமத்தை அறிய ஆசை....' என்று என்னைத் தொடங்கினர். ஞானநிமித்தமானது கர்மம். எனவே, ஞானத்தை விளக்குவதனால் நான் உயர்ந்தவனல்லவா?' என முன்னதின் ஏமாப்பினை மடக்கும் வகையில் பிரம மீமாம்சை சாற்றியது.

''யான்' என்பது அகங்காரம்; 'என்னது' என்பது மமதை. ஞானமும், ஞான நிமித்தமும் பேசும் ஒரு முழு நூலின் இரு பாகங்களாகக் குருவும் சீடரும் இரு மீமாம்சை களையும் அருளினர். ஞானத்திற்கும் கர்மத்திற்குமுள்ள தொடர்பினை விசாரிக்கும் எண்ணம் பரமாத்மாவுக்குத் தோன்றியது. இரு மீமாம்சைகளையும் பக்தி என்னும் இனிய பசைப் பிணைப்பினுற் பூரணப்படுத்தி என்னை அர்ஜு னனுக்கு அருளியதைப் போன்று உலகிற்கு அருளினர். எனவேதான், 'இது வேத உபநிடதங்களின் சாரமாக அமைந்தது' என அறிந்தோர் கூறுவர்'' என பகவத் கீதை சமத்துவபுத்தி பேச விழைந்தது.

இம்மூன்று நூல்களும் தமது உரையாடலின்போது வித் திக்கொண்டிருந்த நித்திலக் கருத்துக்களைக் கேட்டுச் சுவைத்துச் சுகிப்பதற்கு அந்நூல் நிலையத்தில் துப்பறியும் நாவல் ஒன்று தானும் இருக்கவில்லை. ஜனரஞ்சக வாசகர் களின் வீடுகளுக்கு அவை 'பறந்து பறந்து' பயணஞ் செய்த வண்ணம் இருந்தன.

# 12. குரு

'காமத்தை அடக்கி, ஆன்மாவைத் தொல்பரமாகிய பரமாத்மாவுடன் ஐக்கியப்படுத்துவதுதான் மேலான நிலை'

அவர் ஒரு மகான். அவருக்கு ஒரு மகன்.

மகன் கன்னி ஒருத்திமீது காதல் வசப்பட்டான். அவ் விள வயதில், தன் மகன் மாம்ஸ இச்சைகளுக்கு மசிந்து கொடுப்பது பலவீனச் செயலென மகானுக்குத் தோன் றிற்று.

'மகனே! ஆசை மிக்கதானது காமம், புலன்வழி புகுந்து மனதை மயக்குவது. ஐம்பொறிகளையும் அடக்கி, புல்லிய காமத்தை ஒடுக்குக. காமம் ஞானத்தின் விரோதி. நுகருமிடத்து காமம் இனிக்கிறது. ஆனால், அறுவடை துன்பமே துன்பம்! இந்திரியங்களும், மனமும், புத்தியும் காமத்தின் இருப்பிடம் எனப்படுகின்றன. இதன் வழி அறிவை மறைத்து, பல்வகையாலும் காமம் மனிதனை மயக்கம் அடையச் செய்கின்றது. எனவே, நீ இந்திரியங்களை அடக்கிக் காமத் தைத் துரத்துவாயாக!' என மகான் மகனுக்கு உபதேசித் தருளினார்.

மகன் மௌனத்தில் ஆழ்ந்தான். பின்னர், தியானத்தில் ஒன்றினான்.

நிஷ்டை கலைந்ததும் கோவணாண்டியனாகப் புறப்பட் டான். மலை உச்சி ஒன்றினை அடைந்தான். அங்குத் தவ வாழ்க்கையை மேற்கொண்டான்.

பாசம் மகானை உலைதல் செய்தது. தமது உபதேசங் கேட்டு, மகன் துறவு வாழ்க்கை பூணுவான் என மகான் எதிர்பார்த்தவரல்லர். மகனின் கோபத்தைக் கல்லியெறிந்து,

அவனை வீட்டிற்கு அழைத்துவரும் ஆசை அவருடைய உள்ளத்தில் முற்றியது.

மலையின் உச்சிக்கு ஏறினார். இரத்த உறவின் பாசம் முழுவதையும் குரலிலே குழைத்து, 'மகனே!' என அழைத்தார்.

மகன் விழி அலர்த்திப் பார்த்தான். தந்தை தன் முன்னால் நிற்பதைக் கண்டான். மௌனியாகவே அவரை அமரும்படி பணித்தான். மகனிடம் அதீத சக்தியொன்று குடிகொண்டிருப்பதாக மகானுக்குத் தோன்றியது. மகனின் பாத நிழலில் மகான் அமர்ந்தார்.

'உமது உபதேசத்தைக் கேட்டுத் தெளிவடைந்து, இங்கு வந்து தவமியற்றலானேன். அப்பொழுது, என் சித்தத்தில் மகா உண்மையொன்று பிரகாசமாயிற்று....'

'அதை எனக்கு உபதேசிப்பாயா?' என மகான் பயபக்தியுடன் கேட்டார்.

'என் சீடனுக்கே அதனை உபதேசிப்பேன்....'

மகான் தன் மகனையே உரிய முறைப்படி குருவாக வரித்தார்.

'தன் உபதேசங்களின்படி நடந்து காட்டுபவன்தானே மகான்?'—மகனின் கேள்வி.

'ஆமாம்.'

'காமத்தை அடக்கி ஆன்மாவைத் தொல்பரமாகிய பரமாத்மாவுடன் ஐக்கியப்படுத்துவதுதானே மேலான நிலை?'

'நிச்சயமாக!'—தன் மகன் ஆழ்ந்த மதத் தத்துவங்கள் பேசுவதைக் கேட்டு மகான் புளகாங்கிதம் அடைந்தார்.

'நீர் உமது காமத்தை உரிய முறைப்படி கட்டுப்படுத்தியிருந்தீரானால், நான் பிறந்திருக்கமாட்டேன். அப்படி நீர் உமது காமத்தை அடக்காதிருந்தும், நீர் எப்படி மகானானீர்?

மகான் ஒரு கணம் யோசித்தார்.

அடுத்த கணம், 'நீயே அப்பன் சுவாமி!'—மகன் அடிகள் முன்னர் மகான் அடி வீழ்ந்தார்.

## 13. நேர்

'எந்த வடிவததிலும் யானேயான அம்சமும் கலந்து கிடக்கின்றது. அந்த அம்சம் ஒன்றிலே கூடியும் ஒன்றிலே குறைந்தும் காணப்படுகிறது என்பது மனப்பிராந்தியாகும்.'

அந்த மக்காச் சோளத்திற்குத் தன் உருவம் கோரமானது என்று மனக்குறை நெஞ்சுமுட்டி வழிந்தது. பாலாடையிலே கடைத் தெடுக்கப்பட்டதைப் போன்று கவர்ச்சிப் பொலிவு காட்டும் மல்லிகைப் பூவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டது.

'இறைவன் ஓரவஞ்சகன். சிலவற்றிற்குச் சுந்தரஞ் சிந்தும் போக வடிவத்தையும், என்னைப் போன்ற சிலவற்றிற்குக் கோர வடிவத்தையும் வைத்திருக்கின்றான்....'-இந்த நினைவில் அதன் மனம் புழுங்கிச் சாம்பியது.

சோளத்தின் மனக்குறையை ஈசன் அறிந்தான். அதன் மாயையைப் போக்கும் கருணை அவன் உள்ளத்திற் சுரந்தது.

'சோளமே! நீ இவ்வாறு கவலுறுதல் முறை கேடானது. வடிவங்கள் அவையவற்றின் யோகத்தைப் பொறுத்தன. போக வடிவமும் என்னுடையவையே. எந்த வடிவத்திலும்

நானேயான அம்சமும் கலந்து கிடக்கின்றது. அந்த அம்சம் ஒன்றிலே கூடியும், ஒன்றிலே குறைந்தும் காணப் படுகிறது என்பது மனப்பிராந்தியாகும்....' என்ருன் ஈசன்.

'ஈசனே! நீ சாமர்த்தியமாகப் புளுகுகின்ருய். மல்லிகைப் பூவுக்கும் எனக்கும் ஒரே அம்சம் இருக்கிறதா?' எனச் சோளம் அவலக் குரலிற் சினந்தது.

'ஏன் இல்லே? எல்லாம் என் வடிவங்களே என்று பாவனே செய்து கொள்வதற்குப் பக்குவ முதிர்ச்சி தேவை....'

'பாவனே, பக்குவம் ஆகிய தத்துவக் கிளவிகளின் அர்த்தங்களே நான் அறியமாட்டேன்....'

ஈசன் முறுவல் பூத்துத் தீயை மூட்டினுன். தீயில் ஓடு ஏறிற்று. ஓட்டிலே மணல் சுடாக வறுக்கப் பட்டது.

'சோளமே! ஓட்டில் இருக்கும் சுடு மணலிலே குதி' என்ருன் ஈசன்.

'மாட்டேன். சுடுமணலிலே போட்டு என்னேக் கொல்லவா பார்க்கின்ருய்?' எனச் சோளம் பரிதாபமாக அலறியது.

அதன் ஆட்சேபனேயைப் பொருட்படுத்தாது, அதனேத் தூக்கிச் சுடு மணலிலே போட்டு ஈசன் வறுத்தெடுத்தான்.

மறுகணம், சோளம் மல்லிகைப் பூவைப் போன்று பால் நகை சிந்தி மலர்ந்தது! தன்னுள் மறைந்திருந்த இறையம்சத்தைத் தரிசித்த நிறைவிற் குதூகலித்தது.

இந்த அற்புதத்திற்கான விளக்கத்தை அறியச் சோளம் அவாவுற்றது. அதற்கிடையில் ஈசன் மறைந்தனன்!

# 14. திரி

'மோட்சம் அடைவதற்கு மானிடர் முன் மூன்று மார்க்கங்கள் உள. அவரவர் யோகத்தைப் பொறுத்தது அவரவர் மார்க்கம்....'

அன்றைக்கு வெள்ளிக்கிழமைச் சமய வகுப்பு. நாவலர் பிரசங்கம் செய்தார்.

'நாம் இந்த உடலைப் பெற்றதின் பயன் இறைவனைச் சேவிப்பதுவே. இறை பக்தி மோட்சம் அடைவதற்கான நிச்சய பயணச்சீட்டு. பிறவிப் பெருங்கடல் நீங்கி, இறைவனுடன் இரண்டறக் கலத்தலே மோட்சநிலை. மோட்சம் அடைவதற்கு மூன்று மார்க்கங்கள் உள எனக் கூறுகின்றது பகவத்கீதை. அவரவர் யோகத்தைப் பொறுத்தது அவரவர் மார்க்கம். கர்மயோகம், ஞானயோகம், பக்தி யோகம் என....'

* * *

'யானே கர்மயோகத்தின் திருட்டாந்தம். என் கடமையைச் செய்கின்றேன். பயனை ஈசுரார்ப்பணமாக்கிவிட்டேன். எனவே, மோட்சமடைவதற்குச் சிறந்த வழி கர்மயோகமே....' எனக் கூறியது அக்கினியில் எரிந்துகொண்டிருந்த நிலக்கரி.

'கர்மம் இயற்றுமலே, ஞானவழி நின்று ஈசனைச் சார்ந்து மோட்சமடைவதிலுள்ள இன்பம் பிறிதுண்டோ? ஞானமும் ஞானவிருத்தியுமே என் யோகமாக அமைந்தது....' என்றது அறிஞனின் கையிலிருந்த காரீய எழுதுகோல்.

நிலக்கரியும், காரீய எழுதுகோலும் பேசியவற்றைக் கேட்டு, ஈசனின் செவியில் ஜொலித்த வைரம் சிரித்தது.

'நான் வைரம். என் மதிப்புத் தெரியுமா? என் மேனியிலிருந்து வீசும் ஒளியைப் பார்க்க உங்கள் கண்கள் கூச

வில்லையா? நான் சக்தியின் வடிவம். அதனாலேதான், இந்த ஒளியும் ஈசன் செவிகளிலே வீற்றிருக்கும் பேறும்!'

*   *   *

விஞ்ஞான ஆசிரியர், விடுதியின் இரவு வகுப்பிலே போதித்துக் கொண்டிருந்தார்.

'முன்னர் தொண்ணூற்ரூறு தனிமங்கள் இருப்பதாகவே விஞ்ஞானிகள் நம்பிக்கொண்டிருந்தார்கள். விஞ்ஞான அறிவு இப்பொழுது எவ்வளவோ வளர்ச்சியடைந்து விட்டது. இற்றைவரை நூற்றியேழு தனிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்குக் காரீயம் என்ற தனிமத்தைப் பற்றிப் படிப்போம். நிலக்கரி இன்னமும் முக்கிய எரிபொருள்களுள் ஒன்றாக உபயோகப்பட்டு வருகின்றது....காரீயம் எழுது கோல்களின் உள்வீட்டுக் கூர்கள் செய்யவும் உபயோகப்படுகின்றது....வைரம் அதிகப்பிரகாசமானது; அதிகவிலையுள்ளது. இவை மூன்றும் மூன்று வெவ்வேறான பொருள்களாகத் தோன்றினாலும் உண்மை அதுவல்ல. மூன்றும் கரியம் என்ற ஒரே தனிமப் பொருள்களே....'

## 15. வேறு

'நீங்கள் சுவாமியைப் புத்தியால்
ஏமாற்றப் பார்க்க, அவர் உங்களைத்
தன் சக்தியால் ஏமாற்றி விட்டார்
போலிருக்கிறது....'

அவன் ஈசுவர தரிசனத்திற்காக ஆலயஞ் சென்றிருந் தான். அவனுடைய பட்டிக்காட்டு மனைவி வெளியே காத் திருந்தாள்.

வெகு நேரமாகியது. முகமெல்லாம் சிரிப்பாகப் பொலிய அவன் ஆலயத்திலிருந்து மீண்டான்.

'என்ன விசேடம்? வெகு சிரிப்பு....' என்ருள் மனைவி

'கடவுளைக் கண்ணுரக் கண்டால் ஆனந்தமாக இருக்காதா என்ன?' என்ருன் கணவன்.

ஆவல் மீதூர, 'அவர் எப்படி இருந்தார்? என்ன கூறினுர்' எனக் கேட்டாள்.

'ஆயிரம் சூரியர்கள் ஒரே சமயம் உதித்ததுபோல அவர் ஜெகஜோதியாகக் காட்சி தந்தார். திருவாய் திறந்து அருள் பேசினுர். குமின் நகையே அவராகி, என்னைப் பார்த்து, 'பக்தா! முதலில் உன் ஆணவத்தை உடை' என்ருர். நான் தேங்காயை எடுத்துச் சிதற அடித்தேன்....'

'உன் உள்ளத்தை என் பாதங்களிலே அர்ப்பணிக்கவும்' என்ருர். நான் இரு கைகள் நிறைய மலர்களை அள்ளி அவருடைய பாதங்களிலே சொரிந்தேன்...., ஞானச் சுடரிலே நீ ஒன்றுதல் வேண்டும்' என்ருர். நான் சூடத்தை எரித்துக் காட்டினேன். ஒரு கணம் சிந்தனையில் ஆழ்ந்தார். மறுகணம், என் கிரியைகளுக்கான விளக்கத்தைக் கேட்டார். நான் 'ஈசா! நீ அளித்துள்ள அறிவின் துணைபற்றி உருவகமாகச் சிந்திக்கவும், அவற்றைச் செயற்படுத்தவும் கற்றுக் கொண்டேன். என் ஆணவத்தை உடைத்ததற்கு அடையாளமாகத் தேங்காயை உடைத்தேன். என் இதயத்தை அர்ப்பணிக்கும் கிரியையாக மலர்களை வைத்தேன். ஈற்றில் தங்களுடைய பக்தியிலே தன்னையே அழித்துக்கொள்ளும் சூடத்தைக் காட்டினேன்....' என விளக்கினேன். ஈசன் மகிழ்ச்சியுடன் முறுவலித்தார். 'பக்தா! உன் சாமர்த்தியத்தை மெச்சினேன். நீ சென்று வா' என்ருர்....' என கணவன் நடந்தேறிய வர்த்தமானத்தைக் கூறி முடித்தான்.

'உங்களுடைய சாமர்த்தியத்தைச் சுவாமியே மெச்சினுர் என்ருல் பெரிய சாதனைதான்....அது சரி, என்ன வரம் பெற்றீர்கள்?'

'வந்து....வரமா? ஈசன் என்னைப் புத்திசாலியெனப் புகழ்ந்ததும் நான் மெய்மறந்து போனேன். வரம் கேட்கும் விஷயம் நினைவிற்கு வரவில்லை. அதற்கிடையில் ஈசன் மறைந்துவிட்டார்....'

'நீங்கள் சுவாமியைப் புத்தியால் ஏமாற்றப் பார்க்க, அவர் உங்களைத் தன் சக்தியால் ஏமாற்றி விட்டார் போலிருக்கிறது' எனக்கூறிய பட்டிக்காட்டு மனைவி, மனம் சவுங்கினுள்.

## 16. சோறு

'படைக்கப்பட்ட பொருளின் தன்மையைப் பொறுத்தல்ல, படைக்கப்பட்ட பாவனையைப் பொறுத்துத் தான் ஆண்டவன் அவற்றை ஏற்றுக் கொள்ளுகிறுன்....'

அரசடிப் பிள்ளையாருக்கு அன்று பென்னம்பெரியதொரு படையல். பல்லாயிரக் கணக்கான மோதகங்கள்; கொழுக் கட்டைகள்! பல நூற்றுக்கணக்கான வடை மாலைகள்! பல அண்டாக்கள் நிறைய அவல்—கடலை முதலியன! தேங்காய்கள் மலைமலையாகக் குவிந்து கிடந்தன!

பூஜையை நடத்திப் பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்க இருகைகளும் போதவில்லையே என்ற அவதி குருக்களுக்கு!

இந்தத் தடபுடலுக்குக் காரணம், பல்கலைக்கழகப் பரீட்சைகளின் பெறு பேறுகள் அன்றுதான் வெளியாகி யிருந்தன. பிள்ளையாருடைய அருட்சுரப்பிலே நம்பிக்கை பூண்டு நேர்ச்சை வைத்தவர்கள், நன்றி நவில நள்ளும் போட்டியினுல் ஏற்பட்ட வினை!

அப்பிரமாண்டமான படையல்களைப் பார்த்தபடி நின்றான் ஒரு சிறுவன். பக்திக்கும், வேதனை உந்திய பரிவுக்குமிடையில் அவன் மனம் ஊசலாடிற்று. யோசனைகள் பல அவனுடைய பிஞ்சு மனத்தைப் பிருண்டலாயின. அவனுடைய பக்குவத்திற்கு ஏற்ற யோசனை ஒன்று பிரகாசித்தது.

அதன் செயற்படுத்தலாக அவன் தன் வீடு சென்று திரும்பி, தன்னுடைய காணிக்கைப் பொருளைப் பிள்ளையாருக்கு முன்னாற் படைத்தான்.

இதனை அவதானித்த குருக்கள், 'என்னடா அது?' எனச் சிறுவனை அதட்டினார்.

'நம்ம பிள்ளையாருக்கு இஞ்சி படைத்திருக்கிறேன்....' என்றான் சிறுவன் பயபக்தியுடன்.

'பிள்ளையாருக்கு இஞ்சி படைக்கலாமென்று யாரடா சொல்லித் தந்தது?' என்று குருக்கள் 'பாய்' ந்தார்.

குழுமி நின்ற பக்தர்கள் சிறுவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள்.

அவமான உணர்ச்சி மேகங்கள் சிறுவனின் உள்ளத்திற் கவியலாயின.

குரல் கேவலில் நசிவுற, 'நீங்கள் படைத்திருப்பது முழுவதையும் நம்ம பிள்ளையார் சாப்பிட்டால் அஜீரணக் கோளாறு ஏற்படாதா? பாவம், அவரை நாம் இப்படிக் கஷ்டப்படுத்துதல் முறையா? எனக்கு வயிற்றுக் கோளாறு வந்தால், அம்மா இஞ்சிதான் தருவாள்....' என்றான்.

அவனுடைய விளக்கத்தைக் கேட்ட எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள்!

'படைக்கப்பட்ட பொருளின் தன்மையைப் 'பொறுத்தல்ல, படைக்கப்பட்ட பாவனையைப் பொறுத்துத்தான்

ஆண்டவன் அவற்றை ஏற்றுக்கொள்ளுகின்றான்....' என்று பிள்ளையார் சொல்ல உன்னிய போதிலும், கல்லுப்பிள்ளையாராக அரசமரத்தின் கீழ்க் குந்தியிருப்பதில் அவர் இன்பங் கண்டார்!

## 17. வழி

'நம்பிக்கையே கதி; நம்பிக்கையீனம்
அழிவின் வழி....'

அக்கரையை அடைதல் அவ்விரு நண்பர்களினதும் இலட்சியமாக அமைந்தது. வழியில் காட்டாற்றின் வெள்ளப் பெருக்கு. அதனைக் கடந்து செல்லும்வழி புலனாகாது திகைத்து நின்றனர்.

அவ்வமயம், அவ்விடம் துறவி ஒருவர் வந்து சேர்ந்தார்.

'ஏன் இந்த வியாகூலம்?' குரலில் அன்பு பிழிந்து கேட்டார்.

'மறுகரையை அடைதல் வேண்டும். மார்க்கம் அறியாத தவிப்பு!'

'வியாகூலம் அவநம்பிக்கையின் விளைச்சல். அதனைத் துறவுங்கள். என் இருப்பிடம் மறுகரையிலேதான். இக்காட்டாற்றின் போக்கு நான் அறிந்தது. என்னைப் பின்பற்றுங்கள்! வாருங்கள்!' நம்பிக்கையூட்டும் குரலிற்கூறி, துறவி நடக்கத் தொடங்கினார்.

அத்துறவியின் வார்த்தைகளில் ஒருவன் பரிபூரண நம்பிக்கை வைத்தான். அவரைப் பின்பற்றினான்.

'இக்கிழவரின் கூற்றை நம்பி, ஆழமறியாத இவ்வாற்றில் கால்களை வைக்கின்றாயே....' என மற்றவன் தடுத்தனன்.

முன்னவன் தன் சகாவின் எச்சரிக்கை வார்த்தைகளை செவிகளில் வாங்கிக்கொள்ளாது, துறவியிலே முழு நம்பிக்கை வைத்துத் தொடர்ந்தான்.

துறவியும் அவனும் அக்கரை சேர்ந்தனர்.

இக்கரையில் பின்தங்கியவனுக்கு மன உடைவு. துறவியின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்துப் பின்பற்றி யிருக்கலாம் என்ற உண்மை அப்பொழுதுதான் உறைத்தது.

துறவி ஆற்றினைக் கடந்த வழிப்பாட்டில் நடக்கத் தொடங்கினான்; நடுவழியில் சுழியிலே அகப்பட்டுக்கொண் டான். சற்று நேரத்தில் சுழியின் போக்கில் அடித்துச் செல்லப்படலானான். மீளவேயில்லை.

நண்பனுக்கு நேர்ந்த கதியை நினைத்துக் கரை சேர்ந்தவன் துக்கித்தான்.

'நதியைக் கடந்து கரை சேர்ந்த பிறகும் வியாகூலமா? உன் கருமங்களைக் கவனி. நீ என்னில் நம்பிக்கை வைத்தாய். நம்பிக்கையே கதி; நம்பிக்கையீனம் அழிவின் வழி. அவனுக்கு என்மீது நம்பிக்கை இருக்கவில்லை. நான் நடந்த வழிப்பாட் டிலேதான் நம்பிக்கை இருந்தது....' எனத் துறவி அமைதி யாகக் கூறினார்.

## 18. பலி

'அதுவே ரிஷிகள் வழிவழி வந்த பக்தித் துளி. காய்ச்சித் தூய்மை பெற்ற நிலையில் அதனுடன் ஐக்கியமாதலே உத்தமம்....'

அருள் சிந்த மகாதேவன் முறுவலித்தான். பார்வதி காய்ச்சிய பசும்பாலை இரண்டு பாத்திரங்களிலே சமமாகப்

பங்கிட்டாள். கணபதியின் பாலிலே பாகும் தெளிதேனும் சேர்த்துக் கலக்கினுள்.

'எங்கே முருகன்? அவனுடைய பால் வீணுகக் கிடக்கின்றதே....' என்ருன் மகாதேவன்.

'இதிலும் பார்க்கத் தேனும் தினைமாவும் சுவையானது என்ற எண்ணத்தில், அவன் குறத்தியின் வீட்டிற்குச் சென்றிருக்கலாம்' என்று மருமகள் வள்ளியை ஏளனஞ் செய்யும் குரலிற் பார்வதி கூறினுள்.

கணபதி பாலில் பாதியைக் குடித்திருப்பான். இடையில் ஏதோ நினைத்தவனுய், பாத்திரத்தைக் கீழே வைத்து ஓடத் தொடங்கினுன்.

'எங்கே விக்னேஸ்வரன் ஓடுகிருன்?' எனப் பார்வதி கேட்டாள்.

'அரசடிக் குளத்தில் ஒருத்தி குளித்துக் கொண்டிருக்கிருள். அவளும் நீயும் ஒத்த சாயல் என்று பேசிக் கொள்ளுகிருர்கள். அவளைப் பார்க்கத்தான் இவ்வளவு அவசரம்' என்ருன் மகாதேவன்.

'ஒவ்வொரு பிள்ளைக்கும் சிவன் போக்குச் சித்தம் போக்கு என்பது போலத்தான் புத்தி....' என்ருள் பார்வதி சற்றுச் சலிப்புடன்.

'அப்பனே பித்தன். அவன் அம்ஸம் பிள்ளைகளில் இருக்கக்கூடாதா?' என்ருன் மகாதேவன் பெருமிதத்துடன்.

* * *

முருகனுடைய பால் சீந்துவாரற்றுக் கிடந்தது. மான பங்க உணர்வும், தாழ்வுச் சிக்கலும் அதனை அரிக்கலாயின. துக்கத்தைத் தாங்கமாட்டாது, 'கோபாலா! கோபிகிருஷ்ணு!' என அழுதது.

கண்ணன் தோன்றினன். அவன் அறியாதன இல்லை. முறுவலித்தான். ஒரு துளி நீரையை எடுத்துப் பாலிலே தெளித்தான். பாலுக்கு உடலெல்லாஞ் சில்லிட்டது. தாங்க முடியாத குளிர்.

'கோவிந்தா!' குளிரிலே பற்கள் கிட்டிபோட, பால் அவதியுற்றது.

'பேசாமல், சேமமாகத் தூங்கு!' எனக் கூறிக் கண்ணன் மறைந்தனன்.

'விக்னேஸ்வரனை இன்னமுங் காணவில்லை. குடித்து மீதம் வைத்த பால் ஒன்றுக்கும் ஆகாது....' எனத் தெளிந்த பார்வதி அதனைக் குப்பையிலே கொட்டினாள்.

'முருகனின் பால்?' ஒன்றுமே அறியாதவனைப் போல மகாதேவன் கேட்டான்.

'தயிராகிவிட்டது....நடந்த மாயம் என்ன?'

'நான் இங்குதான் நிற்கின்றேன்' என மொழிந்து கண்ணன் தோன்றினன்.

'தயிரே, கவனம்! வந்திருப்பவன் கண்ணன்' என உபதேசித்து மகாதேவன் நழுவினான். பார்வதியும் அரனின் நாரியிலே புகுந்து மறைந்தனள்.

'கட்டித்த பாலே, உன் சௌக்கியத்தை அறிந்து போகத்தான் வந்தேன்....' என ஆயிரம் கோபியரை துகட் கணத்தில் மயக்கவல்ல இன்குரலிற் சொன்னான்.

'நான் இப்பொழுது தயிர். என்னுள் கலந்திருக்கும் வெண்ணெயைத் திருடத்தானே வந்தாய்? உண்மையைச் சொல்....'

'நீ மேனிலை அடைந்தும், அஞ்ஞானம் உன்னை விட்டு அகலவில்லை. தெளிதேனும் பாகும் கலந்த பால் உட

ணருந்த நல்லம். ஆனால்...ஒரு துளி பிரை! அதுவே ரிஷி கள் வழிவழி வந்த பக்தித் துளி. காய்ச்சித் தூய்மைபெற்ற நிலையில் அதனுடன் ஐக்கியமாதலே உத்தமம். அந்த உத்தம வழி நின்றபடியாற்றான் நீ தயிராகி, உன்னில் வெண்ணெயும் முற்றியது. உன்னுள் பிரையைச் சேர்த் தவன் நான். வெண்ணெய் அதன் பயன்....பயனை அறுவடை செய்தல் எப்படித் திருட்டாகும்?' எனக் கண் ணன் கேட்டான்.

ஒரு கணம் மௌனத்தின் தவம்.

'உன் இஷ்டம். நான் உன் பலி!' என்று பற்றற்ற குரலிலே தயிராகிவிட்ட பால் கூறிற்று.

## 19. பால்

'பசுவின் சுவையோ? பாலின் சுவையோ?'

அந்த மகாவாக்கியத்தை என்றும் த்யானிக்கவும்' என்றார் மகான்.

'மகாவாக்கியம் என்றால்....' விளக்கத்தின் பூரணத் துவம் அறிவுப் பிடிமானத்திற்குட் சிக்குப்படாததினால் சீடன் தத்தளித்தான்.

'மகாவாக்கியம் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கு முள்ள தொடர்பை விளக்குகின்றது....'

'தத் த்வம் அஸி எவ்வாறு மகாவாக்கியமாகும்?'

'த்வம் நீ என்றும், தத் அது என்றும், அஸி இருக்கின்றான் என்றும் பொருள்படும். ஜீவாத்மாவாகிய நீ, பரமாத்மாவாகிய அதற்கு வேறானவனல்லன் என்ற கருத்திலேதான் எத்தகைய மகத்துவம் தேங்கி நிற் கின்றது!'

'இந்த மகாவாக்கியத்தின் விளக்கமாக அமையும் நூல்?'

'ஏன்? பகவத்கீதையே அதற்கு உன்னத விளக்கமாக அமைந்துள்ளதே! கீதை மூவாறு அத்தியாங்களிலே அருளப்பட்டுள்ளது. முதலாறு அத்தியாயங்களும் த்வம் என்று நீயேயான ஜீவ தத்துவத்தின் விளக்கம். அடுத்து வரும் ஆறு அத்தியாயங்கள் பரமாத்மா எப்படியிருக்கின்றார் எவ்வாறு அவர் அந்தராத்மாவாகவும், உலகைக் கடந்தவராகவும் இருக்கின்றார் என்பதை விளக்குகின்றது. மூன்றும் பகுதி பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள இணக்கத்தை விளக்குகின்றது. தத் த்வம் அஸி மூன்று பகுதிகளுக்கும் சமாமன அந்தஸ்துகொடுப்பதினாலும் கீதை உயர்வு பெற்றது. எனவே இஃது உபநிஷதங்களின் சாரமாக அமைந்தது என்பதும் பொருந்தும்....'

உபநிஷதங்கள் நான்கு வேதங்களிலிருந்தும் பெறப் பட்டவை. ஆனால், கீதை மகாபாரதத்தின் ஒருபகுதி· அப்படி இருந்தும்....'

'எவ்வாறு உபநிஷதங்களின் சாரமாயிற்று என்பது உன் கேள்வி. கண்ணன் உயிர்களை அறியும் கோவிந்தனாக வும், பசுக்களைப் பராமரிக்கவல்ல கோபாலராகவும் விளங்கு கின்றான். உபநிஷதங்களைப் பசுக்களென வைத்துக்கொள். பசுக்கள் பல நிறத்தவை; அவற்றைப் பராமரித்தல் உன் போன்றசாமானியனுக்கு மிகவுஞ்சிரமமானது. உணர்பவன் உணர்ந்தான். பசுக்களைப் பராமரித்து, வெண்மையான பசும்பாலைக் கறந்து கீதையாகத் தந்தான். பசுவின் சுவையோ ; பாலின் சுவையோ?' எனக் கேட்டுக் குருதேவர் சிரித்தார்.

சீடரின் உள்ளத்தில் எல்லாமே விளங்கியதான ஒளிப்பிழம்பு ஒன்று தோன்றி மறைந்தது!

## 20. தயை

'இது பக்தி கலந்தது; மந்திரம் ஏறியது. எனவே இதன் மகத்துவம் அற்புத மானது!'

அவல் முடிச்சினை மடியிலே பக்குவப்படுத்திக் கொண்டு குசேலர் துவாரகாபுரி வந்து சேர்ந்தார்.

நீண்ட காலம் பிரிந்திருந்த ஆருயிர்த் தோழன் கண்ணனைப் பார்க்கும் பரவசம் அவர் நெஞ்சினில் நிரம்பி வழிந்தது.

கண்ணன் தரிசனம் சித்தித்தது. பாசங்கொண்ட இரண்டு உள்ளங்கள் அன்பிலே பிணைந்தன.

அதே சமயம் குசேலரின் உள்ளத்தில் கரணை ஒன்றின் தாக்குதல்!

'இந்தக் கண்ணன் எவ்வளவு சம்பத்துகளுடன் வாழ் கின்ருன்! இவனுக்கு நான் கையுறையாகக் கொண்டு வந்திருப்பது அவல் முடிச்சு. இங்கு அறுசுவை உண்டிகள் மலிந்து வழிந்து கிடக்கையில், கந்தல் துணியிலே முடிந்து கிடக்கும் அவல் சுவைக்கவா போகின்றது? அவன் நட்பின் நிமித்தம் இதனை ஏற்றுக்கொண்டாலும், சூழ இருப் பவர்கள் கேவலமாக நினைக்கமாட்டார்களா? என்னைப் பற்றிக் கேவலமாக நினைத்தாலும் பாதகமில்லை. இந்தப் பரம தரித்திரனுடன் நட்புரிமை பாராட்டும் கண்ணனைப் பற்றிப் பிரபுக்கள் கேவலமாக நினைக்கப் போகிருர்கள்....'

குசேலரின் உள்ளத்தில் ஊர்தி செய்யும் கரணையைக் கண்ணனும் அறிவான். அன்பின் சுரப்பிலே அவன் முகத்தில் புன்னகைக் கொத்தொன்று சினைத்தது!

'குசேலா! நீண்டகாலம் கழித்து, வெகு தூரம் நடந்து வந்திருக்கின்ருய். உன் பாலிய நண்பனுக்கு என்ன கொண்டு வந்தாய்?'

குசேலர் தயக்கத்துடன் அவல் முடிச்சை மடியி லிருந்து எடுத்தார்.

'என் இல்லாள் கொஞ்சம் அவல் செய்து தந்தனள்....'

'அவலா? சாப்பிட்டு எவ்வளவு காலமாகின்றது? நினைக்கவே நாக்கில் ஜலமூறுகின்றது....தா!' என மகிழ்ச்சி பெருகக் கூறி, பல நாள் உண்ணு நோன்பு இயற்றியவனைப் போல, அவலை ஆவலுடன் சாப்பிடத் தொடங்கினுன்.

தன்னையே குசேலரின் அன்பிற்கு அடிமையாக்கும் பிரகடனத்துடன் எடுத்த பிடி அவலை உண்ண ஒண்ணுது கண்ணனின் மனைவி தடுத்தனள்.

'அடிமையாகத் துணிந்தீர்களே!........இந்தப் பிடி அவலிலே அப்படி என்னதான் அபூர்வச் சுவை இருக் கிறது?' என அவள் இரகசியமாகக் கேட்டாள்.

'ருக்மினி! உனக்கு இஃது அவலாகத் தோன்றலாம்.... இது பக்தி கலந்தது, மந்திரம் ஏறியது. எனவே, இதன் மகத்துவம் அற்புதமானது....' என விளக்கிய கண்ணபிரான், குசேலரை அருள் சுரக்கப் பார்த்தான்!

## 21. தாய்

'....இருட் சிறையிலிருந்து நமக்கு மீட்சி கிட்டப் போகின்றது. நீல வானிலே மீண்டும் சுதந்திர மாகப் பறக்க நாம் இயற்றியதவம் பலித்தது!'

அருணன் வருகை தரப்போகின்ருன். உலகைக் கவிந்திருக்கும் இருள் அகலப் போகின்றது. இருள் மாயை யிற் கட்டுண்டு துயில் பயிலும் உயிரினங்களே! அவனை எதிர் கொண்டழைக்க எழுமின்!' எனச் சேவல் கூவிற்று.

'இருட் சிறையிலிருந்து நமக்கு மீட்சி கிட்டப்போகின் றது. நீலவானிலே மீண்டும் சுதந்திரமாகப் பறக்க நாம்

இயற்றிய தவம் பலித்தது! ஆதவன் நாமம் வாழ்க!' எனப் புள்ளினங்கள் பரவசத்துடன் பாடல்கள் இசைத்தன.

இனிய திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களின் சங்கமம்.

கீழ்த்திசையில் ஆதவன் முகம் தெரிந்தது. தங்க நிறத்தில் பிஞ்சுக் கரங்கள் பரம்பத் தொடங்கின. அந்த ஒளிப்பிரவாகத்திலே சராசரம் முழுவதும் புதிய உயிர்ப்புப் பெற்றன போன்று குதித்தன.

'ஆகா! என் காதலன் வந்தானு? அவன் பிரிவு தாங்காது நான் எப்படியெல்லாம் தவித்தேன்' என்று பங்கயம் நாணச் சிவப்பு அப்பிய தன் இதழ்களை விரித்து ஊமைச் சிரிப்பு உகுத்தது.

இதனைப் பார்த்த கவிஞன், 'அருணன் உதித்தனன் அம்புஜம் விண்டது பாராய்....!' எனக் கவி புனையத் தொடங்கினுன்.

எல்லாவற்றையும் பொறுமையுடன் தாங்கும் பூமித் தாய்க்குப் பிள்ளைகளின் பித்தப் போக்குப் பிடிக்கவில்லை.

'அருணனை என் மடிமீதிருந்து பார்த்து மகிழலாம். சூரியன் மீது அவ்வளவு பித்து இருக்குமேயானுல், அவை சூரியனிலேயே குடியேறி வாழட்டுமே....இவற்றின் மீதுள்ள அன்பினுலா ஆதவன் தரிசனம் தருகின்றுன்? தன்னிலிருந்து ஒளி பிறக்கின்றது என்ற மமதையில் அவன் ஒரே இடத்தில் நிற்கின்றுன்! தாய் மனம் பித்து. குழந்தைகள் அவனைப் பார்த்து மகிழ வேண்டுமென்பதற்காக நானல்லா தினமும் நிதமும் சுழன்றுகொண்டிருக்கிறேன்....இந்தச் செய்ந்நன்றி கொன்ற குழந்தைகளை....' எனப் பூமாதேவி நா உன்னினுள்.

மறுகணம் அவ்வெண்ணத்தை மாற்றி, பொறுமையுடன் கோயில் வீதியில் அடியளித்து வலம் வரும் பக்தையின் கோலத்தில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் வலம் வரும் நித்திய கடமையில் ஒன்றலானுன்.

## 22. நிறை

"வைரம் என்பது நிலக்கரியின் இன்னொரு ஸ்திதி, முத்துக்கள் புழுக்களின் மலங்களே!"

அவ்வேந்தனின் புகழ் அட்ட திக்குகளெல்லாம் பரவலாயிற்று. அவன் தாமரை இலை நீராகக் கனகராஜனைப் போல ராஜ்ய பரிபாலனஞ் செய்வதாகப் பேசிக்கொண்டார்கள். இத்தகைய பிரஸ்தாபத்திலுள்ள உண்மை பொய்யை அறியும் கருத்து, தேசாந்திரியான தபசி ஒருவரின் உள்ளத்தில் முளைத்தது.

அவர் அரண்மனைக்கு வந்து வேந்தனைச் சந்தித்தார். தம்முடைய தபோவலிமையினால், அவனுக்கு முன்னால் மூன்று பொற்றட்டுகள் தோன்றும்படி செய்தார். ஒன்றிலே வைரங்களும், இன்னொன்றில் முத்துக்களும், மற்றதில் அன்றலர்ந்த மலர்களும் குவிந்து கிடந்தன.

'வேந்தே! உன் முன் மூன்று தட்டுகள். ஒன்றில் வைரங்கள். அவை நிலமடந்தை தன் நெஞ்சின் ஆழத்தில் புதைத்து வைத்திருக்கும் அற்புதச் செல்வங்கள். அடுத்ததில் முத்துக்கள். அவை கடற்கன்னியின் பொக்கிஷங்கள். மூன்றாந் தட்டில் மலர்கள். அநித்தியத்தின் நித்தியத்துவத்தை விளக்கும் அற்பங்கள். இம்மூன்றினுள் நீ விரும்பும் தட்டு ஒன்றினை என் அன்புப் பரிசாக ஏற்றுக்கொள்....'

மூன்று தட்டுகளையும் பார்த்த வேந்தன் இளநகை சிந்தினான். மலர்த்தட்டிலே இருந்த மலர்களுள் ஒன்றினைக் கையிலெடுத்தான். 'இதுவே போதும்; ஏனையன வேண்டாம்....' என வேந்தன் அடக்கத்துடன் கூறினான்.

'நீ வேந்தன்; துறவியல்லன்!' என்றார் தபசி.

'அறிவேன். அத்துடன் வைரம் என்பது நிலக்கரியின் இன்னொரு ஸ்திதி என்பதையும், முத்துக்கள் புழுக்களின் மலங்களே என்பதையும் அறிவேன்....!'

'உன் கையிலுள்ள மலர்?'

'இறை சிருஷ்டியின் ஜீவத்துவத்தைப் புன்னகை மூலம் அஃது எனக்கு ஞாபகப்படுத்துகின்றது. அச்சிரிப்பு அதனையும், என்னையும், உம்மையும் சிருஷ்டித்த அநாதி முத்த சித்துரு வாகிய முதல்வனைப் பற்றிய நினைவினை என் நெஞ்சமெல்லாம் நிரம்புகின்றது. இந்நினைவினால், அவன் பணித்த கருமத்தை இயற்றி, அதன் வழி அவனைச் சேரும் யோகத்தைச் சுகிக்க முடிகின்றது' என்றான் வேந்தன்.

தபசி ஒருகணம் யோசித்தார்.

'வேந்தே! நீதான் உண்மையான தபசி, நீ வாழ வேண்டிய இடம் காடு. அங்கு செல்லவும்' என்றார்.

'காட்டில் வாழும் உமக்கு வைரங்களும், முத்துக்களும் இன்னமும் சம்பத்துக்களாகவே தோன்றுகின்றன. ஆகை யால், காட்டிலே சென்று வாழ்வதினால் யான் அடையப் போகும் பயன் யாது?'

பதில் சொல்லத் தபசியின் நா எழவில்லை.

## 23. ஈடு

'எனவே, நீ பட்ட கடனே நீ வழங்கிய தானமாகவும் அமைந்தது...'

அவன் கிங்கரன்; இவன் சங்கரன்.

அவன் எமதூதன்; இவன் நரன்.

'உன்னைச் சொர்க்கத்திற்கு அழைத்து வரக் கட்டளை இதோ!' என்றான் அவன்.

'நன்று. அமரும். ஓர் ஐயம் உளது. தயை செய்யும்' என்பான் இவன்.

'சங்கரா! சீக்கிரம் கேள் ...'—கிங்கரனுச்குக் கடமையிற் கண்.

'எனக்கு முன்னரும் இறந்தனர் பலர். மாடிவீட்டு மாணிக்கமும், பண்ணையார் கண்ணப்பரும், மளிகைக்கடை மார்க்கண்டுவும் அவர்களுள் அடங்குவர். அவர்கள் இக்கணம் யாங்குளர் அறிவிரோ?'

'அறிவேன். சொர்க்கத்தில் சேமமுடன் வாழ் கிருர்கள்.'

'அப்படியா?' இவன் முகத்திற் சோகம் கவிந்தது.

'ஏன் கவலை?'

'அவர்கள் விடாக்கண்டர்களாகவும், நான் கொடாக் கண்டனுகவும் இப்பூவுலகில் வாழ்ந்தோம். அவர்களிடம் நான் பட்ட கடனை இறுதிவரை இறுக்கவே யில்லை. அவர்கள் தொல்லை சொர்க்கத்தில் தொடருமோ என அஞ்சு கின்றேன்.'

'அச்சம் தவிர். அவர்கள் உன்னை வரவேற்பதற்கு மாலையுடன் காத்திருக்கிருர்கள்....'

'மனமாற்றத்திற்குக் காரணம் யாதோ?'

'சொர்க்க பதவி கிடைப்பதற்குத் தான தர்மம் செய் வதினுற் குதிரும் புண்ணியமும் சேரல் வேண்டும். அந்தப் புண்ணியத்தை அவர்கள் உன்னுலேதான் பெற்ருர்கள்....'

'எனக்கு விளங்கவில்லை....!'

'உன்னிடமிருந்து கடன் தொகைகளை வசூலிக்கும் அலுவல்கள் அலுத்துப் போகவே, அவற்றைத் தர்மக் கணக்கில் எழுதிவிட்டார்கள். பின்னர், நீ கடன் கொடுக்

காது தப்பியோடும் வித்தையை ரசிப்பதற்கு உன்னை விரட்டினார்களே யொழிய, கடன் வசூலிக்கும் நோக்கம் அவர்களுக்குக் கிஞ்சித்தும் இருக்கவில்லை.'

'நான் யாருக்குந் தான தர்மம் செய்ததாக ஞாபகம் இல்லை....'

'ஈதலறம் சம்பாதிக்கும் புண்ணியத்தை அவர்கள் பெற நீ காரணனாய் அமைந்தாயல்லவா? எனவே, நீ பட்ட கடனே நீ வழங்கிய தானமாகவும் அமைந்தது வா, சீக்கிரம்....'

இவனுக்கு அவன் கூறியவை விளங்கவில்லை. புரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையும் இல்லை.

இவன் அன்புடன் புறப்பட்டான்!

## 24. ஈகை

'ஞானத்திற்குத் தவணையிடலாம்; தருமத்திற்கு அப்படிச் செய்யலாகாது........'

அவர் ஒரு மகா மேதை. மகா லோபியுங்கூட. வித்துவத்திற்கு முதன்மை அளிப்பவர். அறிவை விலையாக்கிப் பொருளீட்டும் பேராசையினர்.

அறிவுப் பசியுள்வர்கள் அவரை நாடுவதுண்டு. அன்று அயலூரவன் ஒருவன் அவரிடம் பாடங்கேட்க வந்திருந்தான். வீட்டுத்திண்ணையில் அமர்ந்து பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தார் மாமேதை. அப்பொழுது, மிடிமையின் பிடியில் அலைக் கழிவுற்ற பிச்சைக்காரன் ஒருவன் அங்கு வந்து சேர்ந்தான்.

'ஐயா! கடிய பசி .... உயிர் போகிறதே .... மனம் இரங்குங்கள்....உங்களுக்குக் கோடி புண்ணியம் கிட்டும்....'— குரல் கெஞ்சிற்று; உடல் தள்ளாடிற்று.

'பாவம், நல்லபசி....உணவு கொடுக்காவிடின் செத்தாலும்....' அயலூரவனின் மனம் நெகிழ்ந்தது.

'உனக்கு அறிவின் பக்குவநிலை கைவரப் பெறவில்லை. பலவீன உணர்ச்சிகளின் விளைச்சலே இரக்கம். அஃது அறிவின் விரோதி....' என்றுர் மகாமேதை. அவருடைய குரலிலே தெறித்த அதிகாரம் அக்கூற்றிலே ஏதோ மகா தத்துவம் பொதிந்து கிடப்பதான மனமயக்கத்தை ஏற்படுத்தியது.

'சுவாமி! தங்கள் கூற்றினைத் தயைசெய்து சற்றே விளக்கி அருளுங்கள்....' அயலூரவன் கேட்டான்.

'நான் உணவளித்தால் பிச்சைக்காரன் உயிர் பிழைத்து விடுவான் என்பது உன் மனப்பிரமையாகும். பிரமையும் அறிவின் விரோதி! பசித்த வேளைக்குச் சாப்பிடுவதினுற் சாவைத் தடுக்க முடியுமென்ருல், சாவு எப்படிச் சம்பவிக்கின்றது?.

'சாவினைப் பற்றிய தத்துவம் நான் அறியாதது. பசித்த வேளைக்கு உணவு இடுதல் தர்மமானதல்லவா?'

'சகல வேதங்களையும் கற்றுத்தேர்ந்த எனக்குத் தர்மத்தைப் பற்றிப் போதித்தல் அடாது....நான் அவனுக்கு உணவளிக்கின்றேன் என வைத்துக் கொள். சாப்பிடும் பொழுது அவன் தொண்டை விக்கி இறந்துபோனுல்?.... அன்றேல், சாப்பிட்ட பின்னர் அவன் அஜீரணத்தால் இறந்துபோனுல்? அவனுடைய சாவு என் அன்னத்தினுற் சம்பவித்தபடியால் பழியும் பாவமும் என்னையல்லவா வந்தடையும்? பழியும் பாவமும் சம்பாதித்தல் தர்மமானது என எந்தச் சாத்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது? சாவு என்பது ஈசன் விதித்த நியதி. நான் உணவு அளித்து அவனுடைய சாவு வேளையைப் பிற்போடுவேனுகில், அந்த நிரீச்சுரச் செயல் யாரைச் சாரும்?' என அறிவின் அகந்தை கொப்பளிக்க மாமேதை கேட்டார்.

அயலூரவன் திண்ணையிலிருந்து இறங்கினுன். பிச்சைக் காரனைச் சமீபித்தான். 'என்னுடன் சற்றுத் தூரம் வா! அயலில் யாசித்தாவது நான் உனது பசியை நீக்குகின் றேன்....' என்று அவனை அழைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினுன்.

'நீ மகா அறிவீனன்!' என மாமேதை கத்தினுர்.

'இருக்கலாம். ஞானத்திற்குத் தவணையிடலாம்; தர்மத் திற்கு அப்படிச் செய்யலாகாது' என்று மகான் ஒருவர் போதித்துள்ளதை நான் இன்னமும் மறக்கவில்லை...., எனக் கூறிய அயலூரவன் பிச்சைக்காரனை ஆதரவுடன் அணைத்தனன்.

## 25. வேளை

'அது அதற்கு அந்தந்த வேளையென்று ஈசன் நியமித்திருக்கையில், ஒரு காரியம் கைகூடுதலுக்குச் சகுனம் தடையாக இருக்கின்றன என்று பேசுதல் நிரீச்சுவர வாதஞ் சார்ந்ததாகும்.......'

அபாவின் காரிய சித்தி குதிர்ந்து வருவதாகக் கறுத்த பூனைக்குத் தோன்றியது.

இரையாக்க இச்சை வளர்ந்திருந்த அதே எலி வீதியைக் கடந்து எதிர் வீட்டிற்குள் நுழைவதை அது கண்ணுரக் கண்டது.

ஆசையும் அவதியும் உந்த, பூனை எதிர்வீடு நோக்கிப் பாய்ந்தது.

அப்பொழுதுதான் எதிர்வீட்டுக் கிழான் வீதியில் இறங்கிக் கொண்டிருந்தான். மொட்டைத் தலை. நெற்றியில் விபூதிப்

பட்டை. கழுத்திலே ருத்திராட்ச கொட்டை. கால்களில் மிதியடிக்கட்டை.

அவனுடைய கண்களில் முதன்முதலில் தென்பட்டது பாய்ந்துவந்த கறுத்த பூனை தான்.

பூனையிலும் பார்க்க அவன் முகம் கறுத்தது.

'சனியன் பிடித்த பூனே!' எனச் சினத்துடன் வைதான்.

மான உணர்வில் பூனையின் மீசை துடித்தது.

'மானிடனே! ஏன் என்னை அநியாயமாக வைகின்ருய்?'—பூனையின் கேள்வி.

மங்கள காரியமொன்று இயற்ற வெளியே புறப்பட்டால், கறுத்த பூனையாகிய நீ, அபசகுனமாக என் முன்னல் வந்து நிற்கின்ருயே!' எனச் சலிப்புடன் கூறினன்.

'அப்படியா சங்கதி? உன் வீட்டிலுள்ள எலியைப் பிடிக்க நான் எத்தனையோ தடவை முயன்றேன். ஒவ்வொரு தடவையும் நீ குறுக்கிட்டாய். உன் குறுக் கீட்டினல் காரியம் கெட்டு விட்டதென நான் முணு முணுத்திருக்கிறேனு? வேலை கைகூடவில்லை என்றே நான் சமாதானம் அடைந்து வருகிறேன். அது அதற்கு அந்தந்த வேலையென்று ஈசன் நியமித்திருக்கையில், ஒரு காரியம் கைகூடுதலுக்குச் சகுனம் தடையாக இருக்கிறது என்று பேசுதல் நிரீச்சுவரவதாஞ் சார்ந்ததாகும். சைவப் பழமாக வேடந் தரித்து இப்படி நடந்துகொள்ளும் உங்களால் பூனை இனத்திற்கு மாருத களங்கம் ஏற்பட்டுள்ளது' எனப் பூனை ஆத்திரத்தைக் கொட்டியது.

மனிதன் நாணத்தினல் தலை குனிந்தான்!

## 26. சீர்

'எண்ணவும் அரிதான இரகசியங்களி னுள்ளே மௌனமாக இருக்கிறவனும் யானே யாவேன்' என்ருன் கீதாசிரி யன். அந்த வாசகம் நினைவுக்கு வரவே யான் மௌனமாக இருக் கிறேன்..............'

அவன் படைத்தனன் ஐம்பொறிகளை. எனினும்' அவற்றிற்கிடையேயும் முளைத்தது சச்சரவு.

'யானே எல்லாப் புலன்களிலும் முதலில் விழிப்பு நிலை எய்துபவன். பிரபஞ்ச தோற்றத்திற்கு ஆதி நிமித்தமாய் அமைந்த பிரணவ மந்திரத்தைக் கேட்டின்புற்றவனும் யானே. எனவே, மாட்சிமை பெற்றவனும் யானே' தோடுடைய பெருமையுடன் செவி பேசிற்று.

'உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பிராண வாயு உட்செல்லும் வாயில் யான். இது மட்டுமோ என் பெருமை? தமிழ்ச் சங்கத்திலே தங்கக் கவிதை ஒன்று இயற்றினன் தென்னுடைய சிவன். அக்கவிதையிலே பொருட் குற்றம் இருக்கிறது என்ற நக்கீரனின் விமர்சனத்தைத் தொற்றி விவாதம் மூற்றியது. திருக்காளத்தியப்பருடைய தேவியாராகிய ஞானப்பூங்கோதை அம்மையாருடைய கூந் தலிலே இயற்கையான மணம் வீசுகின்றதா என்ற ஆராய்ச் சியில் ஈடுபட்டனர். நாற்றத்தை நிறுவ உதவுபவன் யார்?' என மூக்கு வரலாற்று ஞானத்துடன் தன் புகழ் அளந்தது.

'செவிடனும் வாழ்கிருன்; மூக்கறையனும் வாழ்கிருன் துர்நாற்றத்தைச் சகிக்க முடியுமா? உயிர் தங்குவதற்கு ஆதாரம் மெய்யாகிய யானே. இன்பங்களுள் கல்வி இன் பமே தலையாயது என்பதைப் போகிகள் அறிவர். வ்

வற்புத இன்ப அனுபவம் மெய் என்னும் வழிநின்று சித்திக்கின்றது. அதனை மறக்கவேண்டாம்' என்றது மெய்.

'வட்டக் கருவி, வீழ்த்திடும் வேல்விழி, குளிர் மதர் குவளைவிழி, துள்ளும் கயல்விழி, வெல்லும் வில்விழி என்று பலபட என்னைப் போன்று உங்களை எந்தப் புலவனாவது விதந்தேத்திப் பாடியிருக்கிறானா? கண்ணை இழந்தவன் ஒளியை இழக்கிறான். ஒளியை இழந்தவன் சகல திருத்தரிசனங்களையும் இழக்கிறான். மெய், கேவலம் சிற்றின்ப நுகர்ச்சிக்கு உட்படுவதைப் பிரமாதப்படுத்துகின்றது. குருநிலத்தில் பார்த்தனுக்குப் பரமாத்மாவின் விஸ்வரூப தரிசனம் நானின்றிச் சித்தித்திருக்குமா?' என்று கவிஞர்களையும், புராணீகச் செய்திகளையும் தன் கட்சியை நிலைநாட்ட இழுத்தது.

'செவியும் ஓசையும், மூக்கும் நாற்றமும், உடலும் ஊனும், கண்ணும் ஒளியும்! அவ்வளவுதானே? கண்ணில்லாதான் திருதராஷ்டிரரும் குருக்ஷேத்திரப் போரினைச் சஞ்சய முனியின் கட்புலன்வழி தரிசித்தான். மொழிகள் தோன்ற யானே காரணன். மேலும் யானே சுவையின் வடிவம். இச்சுவையையும் நால்வழிகளில் ஊட்டுகிறேன். சோறு முதலிய உண்ணுதற் பொருள்களிலும், கறி முதலிய தின்னுதற் பொருள்களிலும், தேன் முதலிய நக்குதற் பொருள்களிலும் சுவையறிந்து சொல்லுகின்றேன். உண்பவன் வைச்வாநரன் என்னும் நெருப்பு; உண்ணப்படுவது சோமன் என்ற தத்துவமும் என்னால் எழுந்தது....இனி, சுவையும் ஆறு வகைத்து....' என நா தன் வன்மை சாற்றித் தொடர்ந்து பேசலாயிற்று.

'மூளையே! ஐவருள் யார் உயர்ந்தவன்? நீயே தீர்ப்புக் கூறு....' எனச் செவி குறுக்கிட்டது.

'எண்ணவும் அரிதான இரகசியங்களிலுள்ளே மௌனமாக இருக்கிறவனும் யானே யாவேன்' என்றான் கீதாசிரியன். அந்த வாசகம் நினைவுக்கு வரவே யான் மௌனமாக இருக்கிறேன் என மூளை அடக்கமாகக் கூறியது.

## 27. கலி

'பூததயை, மிருதுத்தன்மை, சகிப்பு, வெகுளாமை, நன்றி மறவாமை ஆகியன கூட அகிம்சையின் பிற உருவங்களே....'

அகிம்ஸையைப் பற்றிக் காலம் காலம் காலமாக மகான்கள் நடத்திவரும் பரிசோதனைகளின் பயனைத்தான், உணவு சம்பந்தமாகவும் இந்து தர்மம் உலகிற்கு அகிம்ஸை நெறியை அளிக்கக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், முற்காலத்தவர்களைப் பார்க்கிலும் திருந்திய அகிம்ஸை உணவு விதிமுறைகளை அமைத்துக் கொள்வதும் சாத்தியமாகின்றது. பூததயை, மிருதுத்தன்மை, சகிப்பு, வெகுளாமை, நன்றி மறவாமை ஆகியனகூட அகிம்ஸையின் பிற உருவங்களே. வேதகாலத்தில் முனிவர்கள் புலால் அருந்தினர்கள் என்பதை வாசிக்கும்பொழுது நமக்கு அதிர்ச்சி ஏற்படுகின்றது. ஒருதடவை வால்மீகியின் ஆசிரமத்திற்கு வசிட்ட முனிவர் வந்திருந்தார். அவருக்கு விருந்து வைப்பதற்காகப் பசுக்கன்று ஒன்று கொல்லப்பட்டது. புலால் மறுப்பினைச் சர்வசாதாரண நெறியாக ஒழுகும் நமக்கு அம்முனிவர்களுடைய செயல் காட்டுமிராண்டித் தனஞ் சார்ந்ததாகவும் தோன்றுகின்றது. இன்று, சைவ உணவு என்ற எண்ணத்தில் மிருகங்களின் பாலைக் குஷியாக அருந்துகின்றோம். இது மட்டும் மிலேச்சத் தனஞ் சார்ந்தது இல்லையா? ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் தோன்றப் போகும் சந்ததியினர், 'நமது முன்னோர்கள் பால் அருந்தினர்களாமே....அவர்கள் எத்தகைய காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தார்கள்' என நம்மை ஏளனஞ் செய்வார்களேன்றே எனக்குத் தோன்றுகின்றது. எனவே, அகிம்ஸாவாதிகள் பாலுணவை மறுக்கக் கடவர்....எனப் போதித்துக் கொண்டிருந்தார் சத்திய

சோதனை என்ற உலைக்களத்தில் புடம்போட்டெடுக்கப்பட்ட அகிம்ஸாவாதி.

'பால் ஹிம்ஸை வழியில் பெறப்பட்ட உணவா?' எனக் கேட்டான் அடுத்த வேளை கிடைக்கக்கூடிய பாலின் சுவையிலே புலன் குத்தி நின்ற ஒருவன்.

'ஆம். நம்முடைய உணவைப் பிற பிராணிகளுடைய முலைகளிலே ஆண்டவன் ஒளித்து வைத்திருப்பான் என்று நினைக்கின்றீர்களா? .... பிறிதொரு குட்டிக்கு அதன் உணவை மறுத்து, நமது உணவாக்குதல் எவ்வாறு அஹிம்ஸை சார்ந்ததாக இருக்கும்?' என அகிம்ஸாவாதி கேட்டார்.

'போதும், உமது விளக்கம், நீர் தாய்ப்பால் குடித்து வளர்ந்ததில்லையா?' என மறித்தான் ஊன்தின்னி ஒருவன்.

'குடித்தேன்; வளர்ந்தேன். என்தாயின் பால் வேதனை என்ற ஹிம்ஸையைத் தணிப்பதற்காகவும் அருந்தப்பட்ட தாகையால், அஃது அகிம்ஸை வழியில் பெறப்பட்டதே. மேலும், இயற்கையில் அது வேறு மிருகக் குட்டிகளுக்குப் படைக்கப்படாததினால், இந்த மிருகம் அதனைச் சுவைத்ததில் அதர்மம் எங்கே புகுந்தது?' என அகிம்ஸாவாதி சாந்தமாகக் கேட்டார்!

## 28. விடை

> 'வினாவைப் பொறுத்து மட்டுமே விடை அமைவதில்லை. வினா கேட்கப்படும் பாவத்தைப் பொறுத்தும் விடை அமையும்....'

அறநெறி போதகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

'பயனைத் துறப்பவன் தன் கருமத்தில் ஆழ்ந்து ஒன்றி விடுகிறான். அவன் நோக்கும் போக்கும் பரந்ததாகவும்,

சமமானதாகவும் அமையும். இதனுல், அவன் பல்வேறு தத்துவஞானங்களின் வலையில் சிக்குப்படுவதில்லை. அதே சமயம் தன் தத்துவத்தைவிடுவதுமில்லை.

துறவியின் போதனையைப் பக்திப் பரவசத்துடன் இஷ்ட. மாணுக்கன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவ்விடம் கிருகஸ்தன் ஒருவன் வந்தான்.

'சுவாமி! மோட்சம் அடைவதற்கு விடு வாயிலைத் துறத்தல் அவசியமா!' எனக் கேட்டான்.

'அவற்றைத் துறக்க வேண்டுமென்று அவசியமில்லை. ஜனகருக்கு மோட்ச கதி கிட்ட வில்லையா? அவர் அரண்மனையிற்றுனே வாழ்ந்தார்? அவருக்கு மோட்ச கதி சித்திக்குமானுல், நீ ஏன் வீடுவாசலைத் துறத்தல் வேண்டும்?' என்று விளக்கி, அவனை அனுப்பி வைத்தார் துறவி.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம், வேறொரு கிருகஸ்தன் துறவியிடம் வந்தான்.

'சுவாமி! வீடு வாயிலைத் துறக்காமலேயே மோட்சம் கிடைக்குமா?' என அவன் கேட்டான்.

'யார் அப்படிச் சொன்னது? வீட்டிலிருந்தபடியே மோட்சம் சித்திக்குமானுல், ஏன் சுகர் முதலியவர்கள் வீடு வாயில்களைத் துறந்தார்கள்? அவர்கள் மூடர்களா?'

துறவி இருவருக்கும் கூறிய விடைகளைக் கேட்டுக் கொண்டிருந்த மாணுக்கனுக்கு இயல்பாகவே ஓர் ஐயம் ஏற்பட்டது.

'சுவாமி! இருவரும் ஒரே கேள்வியைக் கேட்டார்கள். இருவருக்கும் நீங்கள் இரண்டு எதிர் துருவமான பதிலை அளித்தீர்கள். ஒருவினுவிற்கு ஒரு குறிப்பிட்ட விடைதானே பொருந்துவதாக அமையும்?'

'அப்படியல்ல. இருவிடைகளும் சரியானவையே! வினவைப் பொறுத்துமட்டும் விடை அமைவதில்லை. வினு கேட்கப்படும் பாவத்தைப் பொறுத்தும் விடை அமையும். முதலில் வந்தவன், 'வீடு வாயிலைத் துறத்தல் அவசியமா?' எனக் கேட்டான். தேவையானல் வீடுவாயிலைத் துறக்கும் பக்குவ நிலை அவனிடமிருக்கிறது. அப்பக்குவநிலை அடைந்தவன் ஏன் வீடு வாயிலைக் துறக்கவேண்டும்? எனவே, அவன் அவற்றைத் துறக்க வேண்டியதில்லை என்பதும் உண்மையாக அமைந்தது. இரண்டாமவன், 'வீடு வாயிலைத் துறக்காமலே மோட்சம் கிட்டுமா?' எனக் கேட்டான். அந்தக் கேள்வியிலேயே அவன் அவற்றில் வைத்திருக்கும் பந்தம் நன்ருகத் தெரிகிறது, அத்தகைய அபக்குவன் ஒருவன் வீடு வாயிலைத் துறத்தல் வேண்டும் என்பதும் உண்மை' எனத் துறவி விளக்கினர்.

## 29. யோனி

> 'தன் காமத்தினவுக்குத் தீனியிடும் கருமத்தில் பெண் ஒருத்தி கருத்தரிக்கின்ருள் அதற்கு அவள் பெறும் தண்டனை தான் மகப்பேறு........'

அனைத்தின் அனைத்துமே அன்னை! எனவே, அண்ட சராசரங்களும் அன்னை வடிவானது. உயிர் அன்னை அருளியது'—இஃதே அந்த மகான் வரித்திருந்த மதத்தின் சாரம்.

பெண்மையில் அவர் தாய்மையைத் தரிசித்ததினல் இல்வாழ்வில் மனம் ஒப்பவில்லை. துறவறம் பயின்ருர். தன் அன்னையின் உருவத்தையே வழிபட்டு, ஆசிரம வாழ்க்கையில் இன்பந் துய்க்கலானர்.

வழக்கம் போலவே அன்றும், அதிகாலையில் காலைக் கடன்களை முடிக்க ஆற்றங்கரைக்குச் சென்றார். அங்கு ஓர் அழகிய இளம் பெண அமர்ந்திருந்தாள். சிசுவுக்குப் பாலூட்டும் பணியில் ஒன்றினாள். சிசுவும் தாயின் இன் அணைப்பினைச் சுகித்து மகிழ்ந்தது.

அவருடைய மனத்திலே உண்மை ஒன்று விண்டதைப் போன்ற எண்ணப் பிரகாசம்.

'நிஷ்காமிய கருமத்தின் செவ்வை. அது பயனிற் பற்றின்றியே இயற்றுதல் ஒழிக்க இயலாமை வழி இயற்றுவது. அதன் சுரப்பே தாய்ப்பால்....'

மகானின் மனத்தில் நிறைவு.

அவர் தன் கடன்கள் முடித்துத் திரும்பிக்கொண்டு இருந்தார்.

அப்பெண் தூரத்திற் செல்வது தெரிந்தது. அவள் கையிற் சிசுவைக்காணவில்லை. ஓர் ஐயத்தின் சிலிர்ப்பு.

தாம் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடக்கையில், 'வீல்' எனக் கத்திய பிஞ்சுக்குரல் கேட்டதும், ஏதோ ஒன்று ஆற்றிலே வீசப்பட்டதான சத்தம் தொடர்ந்ததும், நினைவு மனத்தின் சுழற்சியில் வெண்ணெய்த் திரண்டு விளைய.... நடைக்கு விரைவு சேர்த்து அப்பெண்ணைத் தடுத்து நிறுத்தினார்.

'உன் குழந்தை எங்கே?'

'அதனை ஆற்றிலே வீசிவிட்டேன்'.

'நீ பெற்ற பிள்ளையைக் கொன்ற பாவி! உன் செயல் அன்னைக் குலத்திற்கே மாசு....'

'அந்தக் குழந்தைக்கு உயிரளிக்க நானே சாதனமாக அமைந்ததால், அதனை அழிக்கும் நிமித்தமாக நான் ஏன் என்னை நியமித்துக் கொள்ளக்கூடாது?'

மகான் சுகட் பொழுது நேரம் யோசித்தார்.

'சற்று முன்னர் அதற்கு உன் முலையிற் பாலூட்டினாய். அஃது அன்பின் பூரிப்பில் விளைந்த செயலன்றோ?'

'பால் வேதனையைத் தாங்கமாட்டாததாலல்லவா அதற்குப் பாலூட்டினேன், இதில் எவ்வாறு புகுந்தது அன்பு?'

புதிய உண்மையொன்று சிரசுதயங் காட்டுவதான மனமயக்க ஜாலம்.

'ஏன் அதனைக் கொன்றாய்?'

'அஃது அழுக்கின் கறை. என் மாம்ஸ இச்சைகளுக்கு என் உடலை அர்ப்பணித்தேன் என்ற பலவீனத்தின் சின்னம்....'

'அன்னை கருணை வடிவானவள்....'

'வெறும் பிரமை! தன் காமத் தினவுகளுக்குத் தீனியிடும் கருமத்தில் பெண் ஒருத்தி கருத்தரிக்கின்றாள். அதற்கு அவள் பெறும் தண்டனைதான் மகப்பேறு. கட்டுடலைத் தளர்ச்சி செய்யும் மகப்பேறு புனிதமானது என்று உலக ஒப்பாசாரத்திற்காக ஏற்றுத் தன்னையும் பிறரையும் ஏமாற்று கின்றாள்....'

'சக்தி வடிவாக நான் வழிபடும் என் அன்னை?'

'நீர் யோனி வழிப்பிறந்தீர்! எனவே, உமது அன்னையும் பத்தோடு இன்னொன்று....'

அவள் நடக்கத் தொடங்கினாள். அவளைத் தடுத்து நிறுத்தும் தைரியம் தன் வசம் இற்றுவிட்டதை அவர் உணரலானார்.

# 30. விகை

'அத்தகைய மோக நீக்கம் உங்களுக்குக்
கைவரப் பெறுமானல், கீதையின்
மோக நீக்கம் என்னும் தரிசன
பயனைத் தரிசித்தல் சாலும்....'

அவர்கள் மத்தியில் பகவத்கீதை தொற்றிச் சர்ச்சை ஒன்று வெடித்துக் கிளம்பியது.

'கீதை முற்று முழுக்க பக்தி நூலே' என்றான் ஒருவன்.

'இல்லை. கீதை என்பது ஞான மார்க்கமே....' என்றான் மற்றவன்.

'அப்படியுமல்ல. கீதா நூல் பதினெட்டு யோகங்களில் நிறைவுறுவதால், அதனை யோக சாஸ்திரம் என்பதே பொருந்தும்' என்றான் பிறிதொருவன்.

'வாழ்க்கை சமுதாய உணர்வுடன் ஒட்டியது. சொற்களைக் கடந்த பரமார்த்திகத்தைப் பற்றியா கீதை மொழிகின்றது? இல்லை. சீரிய சமுதாய நெறியின் அடிப்படையாக அஃது அமைந்தது' என்றான் இன்னும் ஒருவன்.

'மாக்கிவல்லி இயற்றிய 'இளவரச'னைப் போன்றே, கீதை அரசியல் தத்துவம் போதிக்கின்றது' என்றான் வேறொருவன்.

'போர்மீது வந்த பார்த்தனுக்குப் போதிக்கப்பட்டது. எனவே, அது ராணுவ தத்துவத்தைப் போதிக்காமல் வேறு எதைப் போதிக்கும்?' என்றான் மேலுமொருவன்.

இவ்விளக்கங்களை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஒருவன் தன் மௌனத்தைக் கலைத்து, 'இயற்கை முழுவதும் முடிவில்லாத ஒரு கொலைக்களம்....ஒரு துளி

நீரிலே எத்தனை ஜீவ அணுக்கள் இருக்கின்றன? நம்முடைய கனியப் பருமானங்களுக்கு அவை சிற்றுயிராயினும், அவற்றின் தளத்தில் அவை பேருயிர்களே.... இந்த அகிலம் உயிர்த் தத்துவத்தின் சோபிதமே. இவை ஒன்றையொன்று இரையாக்கியே வாழவும் வளரவும் செய்கின்றன. எவ்வளவுதான் அகிம்ஸை பேசினாலும், ஓர் உயிர்—நீரை மட்டுமே அருந்தி வாழும் புண்ணியனேயானாலும்—மற்றும் உயிர்களை உணவாக்காது வாழ முடியாது. இயற்கையே கொலைக்களமாக அமைந்திருப்பதினால், கொலைத் தொழில் புரியக் குருநிலத்தில் சேனா சமுத்திரம் திரண்டிருந்தபொழுது கீதையை உபதேசித்தமை மிக இயல்பாக அமைந்தது. கர்மயோகத்தின் வழி நின்று, யுத்த யோகத்தை இயற்றும்படி வழிகாட்டும் கொலை நூலே கீதை' என யுக்தி வாதத்துடன் பேசி முடித்தான்.

எல்லா விளக்கங்களையும் கேட்டுக் கொண்டிருந்த குருதேவர் முறுவலித்து, நிலைக்கண்ணாடி ஒன்றை எடுத்து அவர்களிடம் தந்தார். 'இதில் என்ன தெரிகிறது என்று ஒவ்வொருவராகப் பாருங்கள்' என்றார்.

'என்னுடைய முகமே தெரிந்தது' என ஒவ்வொருவனும் பதிலளித்தான்.

'உங்களுடைய முகத்திற்குப் பதிலாக, உங்களுடைய இதயத்தை யாராவது கண்ணாடியிற் பார்க்க முடிந்ததா?' எனக் கேட்டார்.

'இல்லை!' என்ற ஒரே பதில் எல்லார் உதடுகளிலுமிருந்து வெளிவந்தது.

'புரிகிறதா? கீதை என்ற கண்ணாடியில் ஒவ்வொருவரும் உங்கள் தனிப்பட்ட உருவத்தைப் பார்க்கின்றீர்கள். இதயத்தைப் பார்ப்பதற்கு மோகம் தடையாக அமைந்தது. கீதை அருளப்பட்டதும் அர்ஜுனனின் மோகம் கலைந்தது.

அத்தகைய மோக நீக்கம் உங்களுக்கும் கைவரப் பெறு மானல், கீதையின் மோக நீக்கம் என்னும் தரிசன பயனைத் தரிசித்தல் சாலும்' என்றார் குருதேவர்.

## 31. வசை

'கர்மங்களை அறவே துறந்து!, அத் துறத்தலின் பயனையும் துறந்து, அது பற்றி எழக்கூடிய அகங்காரத்தையும் துறத்தல் வேண்டும்...'

அக்கம் பக்கமாக இரு மாமரங்கள் பழப்பயன் நல்கி வாழ்ந்தன.

ஆண்டுகளின் ஓட்டத்தில், ஒரு மாமரத்தின் மனத்திலே வியாகூலம் வளரலாயிற்று. சிறுரின் கல்லெறிகளுக்கும், பறவைகளின் குட்டல்களுக்கும் ஆளாகித் தான் துன்பப்படுவ தான சோகத்தில் அழுக்காறும் புகுந்துகொள்ளவே தற்பற்று ஏகமாகியது. 'வேர்களை ஆழமாக நிலத்திலே உழுது நீர் உறிஞ்சியும், வானவெளியில் செழுங்கிளை பரப்பி வெப்பம் காய்ந்தும், கனிகளை விளைவித்து மனிதருக்கும் பட்சிகளுக்கும் கொடுப்பதில் யாது பயன்? என்னல் பழங்களைப் புசித்துச் சுவைக்க முடிகிறதா? தொடர்ந்து ஏற்படும் இந்த ஆக்கினை அனுபவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும்...! என்று பலவாறு யோசித்துத் தீர்மானத்திற்கு வந்தது. எனவே, தன் மிடிமைகளுக்கு விமோசனம் தேடும் முகமாக, அன்னை பராசக்தியை நினைத்து நீண்ட நோன்பு இயற்றலாயிற்று. அதன் பக்தியின் பிணைப்பிலே சிக்குண்ட அன்னை பிரசன்ன மாயினள்.

'நான் இனிக் கனிகள் தராதவளாக, நித்திய கன்னி யின் பொலிவில் வாழ வரம் அருளும் தாயே!' என இறைஞ் சியது. அன்னை அருள் சுரந்தாள்.

அன்றிலிருந்து அம்மரம் ஒரு பழந்தானும் தராது தலை நிமிர்ந்து நின்றது. பக்கத்து மரம் வழமைபோலப் பழப்பயன் பொழிந்து வந்தது.

ஆண்டுகள் சில ஓடின. அம்மரங்களின் சொந்தக்காரன், 'ஒரு மரம் வீணே பயன் தராது திடுமலியாக நிற்கின்றதே. தறித்தால் பலகைகளும், விறகுமாவது தேறும்' என நினைத்து அதனைத் தறிப்பித்தான்.

ஒவ்வொரு கிளையாகத் தறிபட, சித்திரவதையுடன் மரணவஸ்தை அடையும் மரத்தைப் பார்த்த பயன்தரு மரத்தின் மனத்திலே கழிபேரிரக்கம் சுரந்தது.

'சகோதரி!....பயனைத் துறத்தலிலுள்ள இன்பத்தினை அறியாததினால் வந்துற்ற சோகம்....பயனைத் துறத்தலின் விளைவுகள் பற்றிப் பரமாத்மாவே போதித்திருக்கின்றார். இராசத, தாமச கர்மங்களை அறவே துறந்து, அத்துறத் தலின் பயனையுந் துறந்து, அது பற்றி எழக்கூடிய அகங்கா ரத்தையும் துறந்துவிடல் வேண்டும். சாத்துவிகக் கர்மங் களைத் துறக்காது, பயனை மட்டுமே துறத்தல் வேண்டும். இடையறுது பயனைத் துறந்து கொண்டே சாத்துவிகக் கருமங்களை இயற்றுவோமாயின் சித்த சுத்தி மூலம் சாந்த மும், சாந்தத்திலிருந்து சூட்சுமமும், சூட்சுமத்திலிருந்து சூன்யமும் என்ற தொடரிலே கிரியையே அற்றுப்போகும். இதனால், நன்மை என்ற கர்மம் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருக்கும்....'

தறிபட்ட மாமரத்தின் குற்றியிலே அமர்ந்த மரச் சொந்தக்காரன்,

'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்லவல்ல கொல்லவல்லப்
பொல்லாப் பிணி யறுக்க....'

எனப் பாடலானான்!

## 32. துணை

'நீ பிறந்ததிலிருந்து வாழ்க்கை கிடைத்து விட்டது என மகிழ்ந்து கொண்டிருக் கிறாய்........ சாவை நோக்கிச் செய் யும் பயணந்தான் வாழ்க்கை!'

அகாம வினையாக தெருவிளக்கை நோக்கி ஒருவன் நடந்து கொண்டிருந்தான். இருள் எவ்வளவு தூரம் தன்னைப் பிரிந்து செல்கின்றது என்பதை அளவிடும் எண்ணம் உதித்தது. அப்பொழுது, ஓர் இருள் உருவம் தன்னைக் கெட்டியாகப் பின் தொடர்வதை உணரலானான். விளக்கை நெருங்க நெருங்க அவ்வுருவம் சிறுத்து வரு வதையும் அவதானித்தான்.

விளக்கின் பூரண வெளிச்சத்தின் கீழ் நின்று திரும்பிப் பார்க்கிறான். உருசிறுத்துப் பின்தொடர்ந்த அந்த உருவத் தைக் காணவில்லை. மனப்பிராந்தியோ என்ற மலைப்பு முகங்காட்டி மறைய........

பயணம் தொடர்ந்தது. இப்பொழுது தெருவிளக்கை முதுகிட்டு நடக்கும் பயணம்.

பின்னாலே துரத்தி வந்த உருவம் முன்னால் நீளத் தொடங்கியது.

பயணத்தின் நிழல் மனத்திலே சாய்ந்தது. அதனைப் போக்க, அந்த உருவத்துடன் பேச்சுக் கொடுக்க விழைந் தான்.

'நீ யார்?'

'நான் நீயே தான்.'

'அஃது எவ்வாறு?'

'நான் உன் நிழல்!'

'ஓகோ, நான் என்ற அசலின் போலியா நீ? அப்படி யாஞல், நீ ஏன் என்ஜனச் சுற்றி அலேகின்ருய்?'

'நான் போலியா? இன்னெரு விதத்திற் பார்த்தால் நான் அசலும், நீ போலியும் எனக் கூறுவது கூடப் பொருத்த மாக இருக்கும். நீ பிறந்த வேளையிலேதான் நானும் பிறந் தேன். நித்திய தத்துவம் ஒன்றின் விளக்கமாக அரன் என்னை உன்னுடன் படைத்தனன். அந்த அளவில் நானும் அசலே!'

'பிதற்றுகின்ருய். நீ அசத்து. நானும் ஒளியும் இல்லா மல் நீ எவ்வாறு தோன்றிஞய்?' எனத் தனது அறிவு வாதத்தால் அதன் கூற்றை மடக்கப் பார்த்தான்.

'நீ தூல வடிவங்கள் பற்றிப் பேசுகின்ருய்....சூக்கும மாகிய மாயையினின்றும், தூலமாகிய கலாதியும், அவற்றின் தூலமாகிய மூலப்பகுதியும், அதனிஞந் தூலங்களாகிய குணதத்துவம் முதலாயினவும் தோன்றுமெனவும் சிலர் கருதுவர்- இதோ பார்! நீ பிறந்ததிலிருந்து வாழ்க்கை கிடைத்துவிட்டது என மகிழ்ந்து கொண்டிருக்கின்ருய். உண்மை என்னவென்ருல், சாவை நோக்கிச் செய்யும் பயணந்தான் வாழ்க்கை, பிறப்பு என்பது சாவின் நுழை வாயில். அரன் என்னும் ஒளியுடன் நீ கலக்கும்பொழுது நீயும் நானும் ஒன்றேயாகி அவனே யாவோம். சம்சார சக்கரங்களைக் கடந்த நித்திய நிலேயும் அதுவே....அந்த ஒளியிலிருந்து நீ விலகி ஓடிஞல், சாவை திணைத்துப் பார்க் கும்படி எச்சரிக்கின்றேன். ஒளியை நாடி முன்னேறும் பொழுது உன்னுடன் அரனிற் கலக்கும் ஆசையில் அடி யொற்றி நடக்கிறேன். அதுவே நான் உன்னைச் சுற்றி அலேவதிலுள்ள தத்துவம்' என்றது நிழல்.

## 33. போது

'இம்மையின் போகம் பிரேயஸ். அதனைத் தோழமையினால் அருளலாம். ஞானமும் யோகமும் அடங்கப் பெற்றது சிரேயஸ்......'

அர்ஜுனன் என்னுமோர் இளவரசன் இருந்தான். அவனுக்குக் கிருஷ்ணன் தோழனாக வாய்த்தான். இருவரும் நட்பிலே ஓருயிரும் ஈருடலுமாகக் கலந்தனர்.

நண்பனுடைய உலக காரியங்கள் அனைத்திலும் கண்ணன் சகாயனாக உழைத்தான். அன்புப் பிணைப்பு இறுகி முற்றியது. அர்ஜுனனுக்கு கிருஷ்ணனின் தங்கை சுபத்திரை மீது காதல் முளைத்து, விளைந்து, கனிந்தது. தானே தன் தங்கையைத் தோழனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான்.

இவ்வாறு சித்தித்த பிரேயஸை அநுபவித்து மகிழ்ந்தான் அர்ஜுனன்.

அர்ஜுனன் சற்றும் எதிர்பாராத விதமாக நெருக்கடி ஒன்று சூழுகின்றது. யுத்த சன்னதனாக யுத்தகளத்திற்கு வந்த பொழுது குதிர்ந்த நெருக்கடி. அவன் போருக்கென்றே பிறந்த மாவீரன். யுத்தத்திற்கு என்றுமே அஞ்சினவனல்லன். மகாதேவனையே எதிர்த்துப் போரிட்டவன். இன்று அமர்க்களத்தில் எதிரிகளாகக் கூடியிருப்போரை, ஒத்திகையாக நடைபெற்ற 'மாடுபிடிப்' போரில் புறமுதுகிடச் செய்தவன். ஆனால், இப்பொழுது சோர்வும் சஞ்சலமும் குடிகொண்டுவிட்டன.

அந்நிலையில் கிருஷ்ணன் மூலம் அடைந்திருந்த பிரேயஸ் பயன்படாது போய்விடுகிறது.

வேறு மார்க்கமே தோன்றவில்லை. தெளிவின்மையிலே ஒரு தெளிவு. தெளிவிலே ஒரு தெளிவின்மை. எது

எதுவென நிதானிக்க இயலவில்லை. பூரண அடைக்கலம் கிருஷ்ணனைக் குருவாக வரித்து, அர்ஜுனன் சீடனாகச் சரணடைந்தான்.

கிருஷ்ணனும் மனமிரங்கி, சிரேயஸைப் புகட்டத் தொடங்கினான்.

** ** **

'இதனை ஏற்கனவே புகட்டியிருந்தால், அர்ஜுனனுக்கு இந்த நெருக்கடி தோன்றியிருக்க மாட்டாதல்லவா'' என அந்தராத்மாவொன்று கிருஷ்ணனைக் கேட்டது.

'இம்மையின் போகம் பிரேயஸ். அதனைத் தோழமையினால் அருளலாம். ஞானமும் யோகமும் அடங்கப் பெற்றது சிரேயஸ். சிஷ்ய பாவனை வருவதற்கு முன்னர் சிரேயஸைப் புகட்டினால் எவ்விதப் பயனும் ஏற்படமாட்டாது. அதற்கான தகுதியில் இப்பொழுதுதான் அர்ஜுனனின் மனம் பண்பட்டது' என விளக்கினான் கிருஷ்ணன்.

## 34. வினை

'அதனுடன் சேர்த்து என்னுடைய பாவனை
யை உடைக்க முடியாது. பக்தியின்
பாவனையினால், உடைத்த ஒவ்வொரு
துணுக்கிலுமே என்னால் அரனைத்
தரிசிக்க முடிகிறதே.......'

அறநெறி சார்ந்த பக்தன் சிவலிங்க பூஜையில் ஈடுபட்டிருந்தான். அவ்வழியாக வந்த சிந்தனசீலனுக்கு அவனுடைய செயல் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகத் தோன்றியது.

'விக்கிரஹ வழிபாடு பகுத்தறிவுக்குப் புறம்பானது. எனவே, அது மூடத்தனம் சார்ந்தது' என்றான் சிந்தனசீலன்.

'பகுத்தறிவு என நீ சொல்வது உன் அறிவின் தளத்தைப் பொறுத்ததுதானே? அதற்குள் விக்கிரஹ வழிபாட்டின் மகத்துவம் சிக்குப்படவில்லையென்றால், அஃது உன் அறிவின் எல்லைக் கட்டினையே காட்டுகின்றது. பக்திமயமான பாவனையுடன் இச்சிலையை நோக்கு. அப்பொழுது என் வழிபாட்டின் மகத்துவம் விளங்கும்' என்றான் பக்தன்.

'அஞ்ஞான ஆசாரங்களிலும், சடங்குகளிலும் நம்பிக்கை வைத்திருக்கும் அறிவிலியாகிய நீ, என் அறிவு நிலையை எடைபோடுதல் அடாது. இச்சிலையிலே வணக்கத்திற்கேற்ற கலைத் தன்மைதானும் கிடையாது. கோரமாகக் காட்சி தருகிறது....'

'முதல்வன் கொண்ட திருமேனிகளிற் சில திருமேனி போக வடிவமும், சில திருமேனி கோரவடிவமும், சில திருமேனி யோக வடிவமும் கொண்டது, முறையே, உயிர்கட்குப் போகம் புரிதற் பொருட்டும், வினையினை வீட்டுதற் பொருட்டும், யோகமுக்தி உதவுதற் பொருட்டுமாம். இத்தத்துவத்தை நீ அறிவாயோ?'

'நெட்டுருப்போட்டு வைத்திருக்கும் எதனையோ சொல்லி என்னை மருட்டப் பார்க்கின்றாய். இஃது இந்த உருவில் வடித்தெடுக்கப்படுவதற்கு முன்னர் என்னவாக இருந்தது?'

'வெறும் கல்லாக இருந்தது....'

'சிற்பியின் கைவண்ணந்தானே இதனைச் சிலையாக்கியது? சிலையான இது வணக்கத்திற்குரிய தெய்வீகப் பொருளாகி விட்டது. அப்படியானால், நீ மனிதனுடைய கலையாற்றலைத் தானே தெய்வமென்று வணங்குகிறாய்?'

'நீ பேசுவது உருவம் பற்றியது. இது கல்லாக இருந்தது. சிலையாக மாறிய பிறகும் கல்லேதான்! கல்லின்

இன்னொரு வகை உருவம் என்று வைத்துக் கொள்ளலாம். தெய்வம் என்று வணங்கும் பாவனையை இதிலே இணைக்கும் பொழுதுதான் சிலையின் தெய்வத்தன்மை உயிர்ப்புப் பெற்றது. இதுவே பக்தியின் மகத்துவம்........'

'பக்தி என்ருல் என்ன?'

'உள்ளங் கலத்தல் என்னும் யுக்தி....'

'யுக்தியா? உன் யுக்தியின் மூலமோ, அன்றேல் பக்தியின் மூலமோ இதிலுள்ள தெய்வத்தைக் காட்டேன்' எனக்கூறிய சிந்தனுசீலன் சிவலிங்கத்தைக் கீழே போட்டுடைத்தான்.

'உடைத்தது கல்லைத்தானே? அதனுடன் சேர்த்து என்னுடைய பாவனையை உன்ஞல் உடைக்க முடியாது. என் பக்தியின் பாவனையினுல், உடைந்த ஒவ்வொரு துணுக்கிலுமே என்னுல் அரனைத் தரிசிக்க முடிகின்றதே....' என்ருன் பக்தன் மேலும் அழுத்தமான நம்பிக்கையுடன்.

சிந்தனுசீலன் மௌனியானுன்!

## 35. மேடை

'சிவன் சக்தியைப் பார்த்தான். சக்தி
சிவனைப் பார்த்தாள். மீண்டும் ஒரு
வரேயான அர்த்தநாரீஸ்வரராயினர்!'

அர்த்தநாரீஸ்வரனின் விளையாட்டு நள்ளல். நடன உந்தலில் கால்கள் அபிநயத்துடன்....சக்திக்கும் சிவனுக்கு மிடையில் கலை வித்துவம் தொற்றிக் காழ்ப்பின் முனைப்பு. ஒன்றே இரண்டாகியது. சிவனும் சக்தியும் வேருகிய நிலை.

ஒருடலில் ஒருயிராகவே இருந்தபொழுது நன்மை என்ற சிருஷ்டி சக்தி மட்டுமே இருந்தது. அம்மை அப்பன்

விரோதத்தில் தீமை என்ற புதிய சிருஷ்டி சக்தியும் தோன்றியது.

மலைகளையும், நதிகளையும், கடல்களையும் அவற்றில் வசிப்பதற்கு விலங்குகளையும் — புள்ளினங்களையும் — மச்சங்களையும் — ஊர்வனவற்றையும் நன்மை படைத்தது. சில மலைகளின் வயிற்றில் எரிமலைக் குழம்பையும், நதிகளிலே வெள்ளப் பெருக்கையும் - கடல்களிலே கோரப் புயல்களையும் - உயிரினங்கள் பலவற்றிற்குக் கொலை வெறியையும் தீமை படைத்தது.

ஆனால், மனிதன் இன்பமுடன் வாழ்ந்தான். அவன் நன்மையையே சேவித்தான்.

தீமை கர்வியது. மனிதன் தன்னையே சேவித்தல் வேண்டுமென்ற போட்டியில் தீமை முழுமூச்சாக இறங்கியது.

மனிதன் அநுபவிப்பதற்குப் பலவிதமான செல்வங்களை நன்மை படைத்திருந்தது. தீமை பொன்னை மண்ணுடன் கலந்தது; ரத்தினக் கற்களைப் பூமிக்கடியிற் பதுக்கியது; முத்துக்களைக் கடலின் ஆழத்திலே கொட்டியது. மனிதன் இன்பமுடன் வாழ்ந்தான். அவன் நன்மையையே சேவித்தான்.

பழவர்க்கங்களை நன்மை படைத்தது. தீமை சிலவற்றிலே மதுவை ஒளித்து வைத்து அதனை வடிக்கும் இரகசியத்தை மனிதனுக்குக் கற்றுக்கொடுத்தது. மனிதன் இன்பமுடன் வாழ்ந்தான். அவன் நன்மையையே சேவித்தான்.

நட்பைப் படைத்தது நன்மை. விரோதத்தைப் படைத்தது தீமை. அன்பைப் படைத்தது நன்மை. அழுக்காறினைப் படைத்தது தீமை. அறிவையும், அதனை நல்ல முறையிற் கையாளும் வகையையும் நன்மை கற்பித்தது. ஆணவத்தையும் அதர்ம வழிகளையும் தீமை

கற்பித்தது. இப்படி எத்தனையோ போட்டிகள்! மனிதன் இன்பமுடன் வாழ்ந்தான். அவன் நன்மையையே சேவித்தான்.

தோல்விக்குப் பின் தோல்வியாக சங்கிலித் தொடரிலே ஏற்பட்ட தோல்விகளைத் தீமையினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அது நன்றாக யோசித்தது. தன் கருங்கூந்தல் பஞ்சுத் திரளாகும் வரை யோசித்தது.

ஈற்றில், தீமை மோகத்தையும் தற்பற்றையும் மனித உள்ளத்திலே படைத்தது....

....மனிதன் தீமையை வணங்கத் தொடங்கினான்.

சிவன் சக்தியைப் பார்த்தான்.

சக்தி சிவனைப் பார்த்தாள்.

மீண்டும் ஒருவரேயான அர்த்தநாரீஸ்வரராயினர்.

இந்த இணைப்பிலே கூடத் தீமை சாகவில்லை.

* * *

அந்த ஔவைப் பாட்டி பாடத் தொடங்கினாள்!

'பண்டு முளைப்பதரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்....'

## 36. அணி

'அனந்தத்தை வணங்கினாலும் ஏகனையே வணங்குகின்றோம். ஏகனை வணங்கினாலும் அனந்தத்தையே வணங்குகின்றோம்....'

அநுட்டான விதிகள் பலவும் அவனுக்கு அர்த்தமற்றவையாகத் தோன்றின. 'நமசிவாய' எனப் பஞ்சாட்சரம் உச்சாடனஞ்செய்து சிவனைச் சிலர் வழிபட்டனர். 'சர

வணபவ' என்ற சடாட்சர ஓதுதலில் நிறைவு கண்டார்கள் முருக பக்தர்கள். 'நாராயணய நமஹ' என்ற அட்டாட்சர பஜனையில் மனம் ஒன்றினர் வேறு சிலர். 'கணபதியே நம' எனக்குட்டி, 'கும்பியோ நம' எனக் கும்பிடுதலைச் சிறந்த அநுட்டான முறையாக விநாயக பக்தர்கள் ஒழுகினர்கள். 'உமாதேவ்ய நம' எனச் சக்தி வழிபாட்டுக்காரர்களும், 'வடுக வயிரவாய நம' என வயிரவர் பக்தர்களும் தனித்தனி கோஷ்டிகளாக அமைந்தனர். இவர்களுள் யார் அநுஷ்டிக்கும் வழி மேலானது என்பதை அவனல் நிதானிக்க இயலவில்லை.

'இந்துக்கள் அஞ்ஞானிகள், மனம் போன போக்கிற் பல தெய்வங்களை வழிபடுகிறுர்கள். ஈசன் ஏகனே, அவனை அடையும் மார்க்கத்தைக் கண்டுபிடிப்பேன்' என வைராக்கிய நோன்பு இயற்றி அவன் புறப்பட்டான்.

நாடு-நகர்-காடு-மலை-வனந்திரம் எனப் பலப்பல தாண்டி அலைந்தபோதிலும் உண்மை மார்க்கம் புலப்படவில்லை. கால்கள் அலுத்தன; மனம் களைத்தது.

'மனிதனுடைய செழுமையான கற்பனையிலே உதித்ததுதான் ஈசன். சர்வ வல்லமையுள்ள ஏகன் ஒருவன் இருப்பானேயாகில், தன் வல்லபங்களை நிலைநாட்ட முன் வரமாட்டான?' என ஐயங்கள் இடையிடையே தோன்ற அவனுடைய மனம் நிரீச்சுவரவாதத்தில் பற்று வைக்கலாயிற்று.

அசதி மேலிட, ஆலமரம் ஒன்றின் கீழ் இளைப்பாற அமர்ந்தான். அதே ஆலமரத்தின் கீழ் மேனியெல்லாம் திருநீறு அப்பிய தபஸ்வி ஒருவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவனுடைய விழிப்புலன் ஆலமரத்தை மேய்ந்தது. அது செழுங்கிளைகள் பரப்பிக் கொழுத்திருந்தது. சிறுசிறு பழங்கள் சினைத்துக் கிடந்தன. அவற்றைப் பார்த்தது?

'ஈசன் விகிதாசாரப் படைப்பு முறையை அறியாதவன். கோணங்கி....'—சிந்தனை ஈசுவர நிந்தனை என்ற தடத்திற் சரியலாயிற்று.

'பட்'. ஆலம்பழமொன்று தபஸ்வியின் தலையிலே விழுந்தது. 'ஆண்டவனின் கருணையே கருணை! அவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் வல்லவன் என்பது பொய் யாகுமோ? ஆலம்பழங்கள் தேங்காயளவு சொரிய ஆரம் பித்தால்....? எல்லாம் உன் லீலை....! என அவர் ஆண்ட வனைத் துதிக்கலானார்.

'உலகில் எத்தனை கடவுள்கள் இருக்கிறார்கள்?' என அவன் தபஸ்வியை வம்புக்கு இழுத்தான்.

'அனந்தம்....' தபஸ்வியின் பதில்.

'அந்த அனந்தத்துள் நீர் எதைச் சிறப்பாக வழிபடு கின்றீர்'.

'அனந்தத்துள் சிறப்பான ஒன்றா? அனந்தத்தை வணங்கி னாலும், ஏகனையே வணங்குகின்றோம். ஏகனையே வணங்கினா லும், அனந்தத்தையே வணங்குகின்றோம்....'

'ஆத்திகம் என்பது ஆதாரமற்ற போலி ஆசாரம். இல் லாத ஒன்றை இருப்பதாக நம்பிச் சுயத்தையும் பிறரையும் ஏமாற்றும் முயற்சி....அனந்தம் சமன் ஏகன்; ஏகம் சமன் அனந்தம் என்பன எந்த சாஸ்திர விதிக்கும் அமையாத கணக்குகள்! சொற்களை வைத்துத் தாய்ச்சிற்றம்பலம் ஆடு வதும், அந்த விளையாட்டே கடவுள் தரிசனம் என்று கூறு வதும் அறிவு சார்ந்தவையல்ல....' என வெகு எதார்த்த மாகப் பேசினான்.

'அப்படியா? இந்த ஆலமரத்தின் கீழ் எத்தனை ஒளித் திட்டுக்கள் தென்படுகின்றன? எண்ணிப்பார்....'

'நூற்றுக்கும் அதிகமாக இருக்கலாம்....' குத்து மதிப்பாகக் கூறினான்.

'உலகிலுள்ள அத்தனை மரங்களின் கீழும் ஒளிஜாலம் காட்டும் ஒளித்திட்டுகளின் எண்ணிக்கை....'

'அனந்தம் எனச் சௌகரியத்திற்காக வைத்துக் கொள்ளலாம்....'

'இத்திட்டுகள் என்ன?'

'சூரிய வெளிச்சம்....'

'எத்தனை சூரியன்களிடமிருந்து பெறப்படும் வெளிச்சம்?'

'ஏக சூரியனிடமிருந்து....' எனக் கூறத்தொடங்கியவன், சடுதியாக உதடுகளைக் கடித்துக்கொண்டு, '—ஏகனும், அந்தமும்!....சுவாமி, எனக்குப் புதிய கணக்கின் உண்மை புரிகின்றது' என்று தபஸ்வியை வணங்கினன்.

## 37. பூஜை

'புண்ணியத்தைப் பற்றி நீ கொண்டிருக்கும் கர்வம் மிகவும் கொடியது; பாவம் அவ்வளவு கொடியதல்ல .'

அக்கம் பக்கமாக அமைந்த இரு வீடுகள்.

ஒன்றிலே குலமகள் ஒருத்தி வாழ்ந்தாள். பூசை அநுட்டானங்களிலெல்லாம் மகா ஒழுங்கு. விரத நியமங்களைச் சீர்த்தியுடன் ஒழுகினாள். நாள் தவருது, காலம் பிசகாது ஆலயவழிபாட்டிலும் ஈடுபட்டாள். தான் கற்பு நெறி பிறழாது வாழ்வதான மமதையைச் சுகித்தனள்.

அடுத்த வீட்டில் வாழ்ந்தவள் பொதுமகள். ஆடவருக்கு உடலின்பம் விற்பதிலேயே அவளுடைய நாளெல்லாம்

பொழுதெல்லாம் கரைந்தது. சோர நாயகர்களுக்குப் பிரீதியானவற்றையே குடித்தும் புசித்தும் வந்தாள். ஆலய வழிபாட்டிற்கு நேரமே கிடைக்கவில்லை.

இருவருக்கும் ஒரே நேரத்தில் மரணவஸ்தை ஏற்பட்டது.

புஷ்பவிமானம் ஒன்று ஆகாயத்திலிருந்து இறங்கி, பொதுமகளின் வீட்டுப் பக்கமாக நகர்ந்தது. அதனைக் கண்ட குலமகளின் மனத்திலே சரிவு. ஏதோ தவறுதல் நடப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

'விமானமே! நீ வந்து சேரவேண்டிய முகவரி என்னுடைய வீடே....' எனக் கத்தினள்.

புஷ்பவிமானம் சற்றே தரித்தது.

'சரியான இடத்தை நாடித்தான் செல்கிறேன். உன் பக்கத்து வீட்டுக்காரியின் உயிரைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப் பணிக்கப்பட்டிருக்கிறேன்....' என்றது விமானம்.

'நான் பூஜைகளையும் விரதங்களையும் நியமப்படி நிறைவேற்றியுள்ளேன். வேளை தவறுது ஆலயம் சென்றேன். நான் கற்பு நெறி பிறழாதவள். பக்கத்து வீட்டுக்காரி கேவலம் ஒரு வேசி....'

'நீ புண்ணியமான கர்வ வாழ்க்கையை மேற்கொண்டாய். அவள் பாவமானதாயினும் பணிந்த வாழ்க்கையை மேற்கொண்டாள். புண்ணியமான வாழ்க்கையிலே நீ பரம்பொருளை மறந்தாய்....'

'அவள்....?' நம்பிக்கை வரண்ட தொனியிற் குலமகள் கேட்டாள்.

'வர்ணசிரமம் வகுத்த வாழ்க்கையை அவள் பயின்றிருக்கலாம், பாவ வாழ்க்கை கிட்டியபோதிலும் அவள்

பரம்பொருளை மறந்தாளல்லள். இதனை நீ அறிந்து கொள்ளக் கடவாய்: புண்ணியத்தைப் பற்றி நீ கொண்டிருக்கும் கர்வம் மிகவும் கொடியது; பாவம் அவ்வளவு கொடியதல்ல....' என்று கூறி, புஷ்ப விமானம் நகரத் தொடங்கியது.

## 38. மண்

'வெளியிலிருக்கும் பரந்த ஆகாயமே குடத்துள்ளும் இருக்கிறது. குடம் உடைந்ததும் அது பரந்த ஆகாயத்துடன் கலந்துவிடுகிறது....'

**அச்சீடனை** மந்த புத்திக்காரனுகவே குருதேவர் கணித்திருந்தார். எனினும், யாக்கை நிலையாமை பற்றி விளக்கவேண்டுமெனத் திருவுளங் கொண்டார். பாட உபகரணங்களாகத் தன் முன்னுல் களிமண், குடம், உடைந்த ஓடுகள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு பாடத்தை ஆரம்பித்தார்.

'இது களி மண். இது மண்ணின் ஒரு நிலை. இந்த மண்ணிலிருந்துதான் குடம் முதலியவான பலவற்றைப் பற்பல ரூபபேதங்களிலே உருவாக்குகின்றனர். குடம் முதலியனவும் மண்ணே. மண்ணின் பிறிதொரு நிலை. குடம் முதலியன உடைந்ததும் பெறப்படுவன ஓடுகள். அவை மண்ணின் இன்னெரு நிலை. மேலும், உன்னிப்பாகக் கேள். வெளியிலிருக்கும் பரந்த ஆகாசமே குடத்துள்ளும் இருக்கிறது. அது தனித்ததல்ல. குடம் உடைந்ததும் அது பரந்த ஆகாயத்துடன் கலந்துவிடும். எனவே, இந்தக் குடத்திற்கு ஒப்பான யாக்கையே எல்லாவற்றிற்கும் மேலானது எனக் கொண்டாடுவது பேதமை. புரிகிறதா?' எனக் கூறிக் குருதேவர் நிறுத்தினர்.

குருதேவர் போதிப்பவை ஒரு சமயம் புரிவன போலவும், மறுசமயம் புரியாதன போலவும் தோன்றியது.

'ஓர் ஐயம்....' என்ருன் சீடன்.

'என்ன?'

'குயவன் ஒருவனே அழைத்து இக்களிமண்ணிலிருந்து, இங்கிருக்கும் இதே போன்ற குடம் ஒன்றினே வனேந்தெடுக் கலாமல்லவா?'

ஆம்; அது சாலும்!'

'அதே குயவனிடம் உடைந்து கிடக்கும் இந்த ஓடுகளேக் கொடுத்து இதே போன்ற குடம் ஒன்றினே வனேந்தெடுக்க முடியுமா?'

'அது சாலாது!'

'ஏன் சாலாது? இதுவும் மண்; அதுவும் மண். குடம் உடைந்த பிறகு கிடைக்கும் ஓடான மண்ணிலிருந்து புதிய குடம் ஒன்றினே வனேதல் சாலாது என்ருல், குடம் என்ற இந்த உருவமே மகத்தானது எனக் கொண்டாடுவதில் என்ன தப்பிதம்?'

குருதேவர் சிந்தனேயுடன் ஆகாயத்தை அண்ணுந்து பார்த்தார்.

'இன்னெரு வழியிலும் கேட்கலாம். களிமண் குயவ னுக்குப் பயன்படலாம்; எனக்குப் பயன்படமாட்டாது. உடைந்த ஓடுகளாற் குயவனுக்குப் பயனில்லே; எனக்கும் பயனில்லே. குடம் எனக்கும் பயன்படும்; குயவனுக்கும் பயன்படும். யாக்கை நிலேயற்றது என்ற நினேப்பில், நிகழ் கால உருவமான குடத்தை உபயோகிக்காமல், இஃது உடைந்த பிறகு ஏற்படலாம் என்ற நிச்சயமற்ற வாழ்க்கை யைப் பற்றிய சிந்தனேயில் ஆழ்ந்திருப்பது எவ்வாறு அறிவு சார்ந்ததாகும்?' என்று சீடன் கேட்டான்.

'உன் மனம் இகலோக இச்சைகளை நாடி நிற்கின்றன. நான் போதிப்பவற்றை புரிந்துகொள்ளும் பக்குவ நிலை உனக்கு ஏற்படவில்லை' எனக் குருதேவர் வருத்தத்துடன் கூறினர்.

'குருதேவரே! உண்மை இதுதான். நீங்கள் கூறுபவை எனக்கு எப்படி விளங்கவில்லையோ, அவ்வாறே நான் கூறுபவையும் உங்களுக்கு விளங்கவில்லை' எனச் சீடன் தன் தளத்தில் நின்று வழக்குரைத்தான்.

## 39. கனி

'பிறவிச் சக்கரம்கூட ஈசனின் படைப்புத் தானே?'

அரனின் உள்ளத்தில் ஓர் எண்ணத்தின் வெடிப்பு. தன் படைப்புகளை உன்னிப்பாக அவதானித்தான். வாஞ்சையுடன் பார்க்கும் பொழுது, சுரீரென்று நெஞ்சத்தில் ஒரு கீறல். தன் படைப்புகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு மனக் குறையைத் தன்னிடமிருந்து மறைப்பதான பிரமை அவனுக்குத் தட்டியது.

மலர் முறுவலித்தது. அந்த முறுவலின் கோடியிலே சோகம் புரையோடி இருப்பதை அவன் அவதானிக்கத் தவறவில்லை.

'மலரே! நீ விரும்புவது யாதோ?' என விநயமுடன் கேட்டான்.

'நான் காயாக விரும்புகிறேன்' எனச் சட்டெனப் பதில் வந்தது.

விசாரணை சங்கிலித் தொடராக நகர்ந்தது.

'காயே, எதை நீ விரும்புகிருய்?'

'கனியாக!'

'கனியே, உன் விருப்பம்?'

'வித்தாக!'

'வித்தே, உன் விருப்பம்?'

'முளையாக!'

'முளையே, உன் விருப்பம்?'

'மரமாக....'

'மரமே, உன் விருப்பம்?'

'நான் புஷ்பிக்க....'

கேள்வி கேட்ட அரனுக்குச் சலிப்புத் தோன்றத் தொடங்கிற்று. 'அசரங்களின் ஆசை அவ்வளவுதான்' என வாய் முணுமுணுத்தது.

'எல்லாப் படைப்புகளுக்கும் உயர்ந்ததாக இருக்க நீங்கள் படைத்த ஆறறிவு மனிதன் கூடப் பிறவிச் சக்கரத்திற்குள் சிக்குண்டே சாம்புகிருன்' என்ருள் தேவி அவன் செவிகளில் இரகசியமாக,

'என்ன தேவீ? ஈசனின் செவிகளைக் கடிப்பது ஏனோ? பிறவிச் சக்கரம்கூட ஈசனின் படைப்புத்தானே?' என்று கூறிய நாரதன் 'சம்போ சங்கர மகாதேவா!' என அஞ்சலி செய்து நின்ருன்.

## 40. துதி

> 'இந்த ஆலயத்தைச் சூழ மதில் அமைத்துக் கொள்வதின் மூலம், இந்த மதிலுக்கு அப்பால் உலகளாவியதாகப் பரந்து கிடக்கும் எதுவுமே ஆலயத்திற்குத் தேவையில்லையென்றும் பிரகடனமாகின்றதல்லவா?'

அவருக்கு இவரைப் பிடிக்காது ; இவருக்கு அவரைப் பிடிக்காது.

அவர் பாதிரியார்; இவர் பொதுவுடைமைவாதி.

தேவாலயத் திருப்பணி வேலைகள் நிறைவுறும் நிறைவில், தேவாலயத்தைச் சுற்றிக் கட்டப்படும் மதிலை அவர் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பொதுவுடைமைவாதி அங்கு வந்து சேர்ந்தார்.

'பாதிரியாரே! ஏன் இந்த மதில்? நீர் வழிபடும் ஏசுநாதரின் உருவத்தை யாராவது திருடிக் கொண்டு போய்விடுவார்களென்ற அச்சமா?' என இவர் ஏளனமாகக் கேட்டார்.

'இது கோயிற் காணி. பயன் பல தரும் மரங்கள் இங்கே நாட்டப்பட்டிருக்கின்றன. அஞ்ஞானிகளுக்கும், விசுவாசமற்றவர்களுக்கும் அப்பயன் கிட்டுவது முறையோ? பரமபிதா அமைத்துள்ள பரலோக ராஜ்யத்திற்குக்கூட மதில்களும் நெடுங்கதவுகளும் உள. அஞ்ஞானிகளுக்கு அந்த இராஜ்யத்திற்குள் அனுமதி இல்லை. எல்லோருக்கும் எல்லாம் என்று, நல்லோர் உழைப்பினை எடுத்துப் பொல்லார்க்கும் பங்கிட்டும், புரட்சியையும், பலாத்காரத்தையும் கட்டவிழ்த்து விடும் விரியன் பாம்புக் குட்டிகளுக்கும் நிச்சயமாக ஆண்டவன் ராஜ்யத்தில் இடம் கிடையாது.' என்றார் அவர்.

'ஆண்டவன் ராஜ்யத்தைப் பற்றிக் கவலையில்லை. நீங்கள் கூறும் சொர்க்கத்தை இப்பூவுலகத்தில் தோற்றுவிக்கலாம் என்று நம்புவன் நான். எல்லோருடைய கூட்டு உழைப்பில் விளையும் சம்பத்துக்கள் அவரவர் ஆற்றலுக்கும், தேவைக்கும் ஏற்பப் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். இந்த ஆலயத்தைச் சூழ மதில் அமைத்துக் கொள்வதின் மூலம், இந்த மதிலுக்கு அப்பால் உலகளாவியதாகப் பரந்து கிடக்கும் எதுவுமே ஆலயத்திற்குத் தேவையில்லை யென்றும் பிரகடனமாகின்றதல்லவா? அந்த அளவிலாப் பயனை நல்லாயனின் மெய் விசுவாசிகளுக்கு மறுதலிக்கின்றீர் என்பதையாவது உணர முடிகிறதா?' என்ருர் இவர்.

பொதுவுடமைவாதி தன் விஞ்ஞான மார்க்ஸியத்தின் தத்துவ வித்துவ யுக்தியினுல் தன்னை மடக்கிவிட்டதான தோல்வி உணர்வு பாதிரியாரின் மனத்திலே சடைக்கலாயிற்று.

* * *

பிறிதொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுடைய சந்திப்பு விவாதமாக மாறியது.

'பாதிரியாரே! நீங்கள் ஏசுநாதர் செய்த தியாகம் மகதானது எனத் தினமும் நிதமும் புகழ்கின்றீர்களே! இறுதி நாளிலே சிலுவை சுமந்து சிந்திய சில துளி ரத்தங்களை இவ்வளவு பிரமாதப்படுத்துவதில் என்ன அர்த்தம்?.... தொழிலாளி தினமும் குடக்கணக்கான வியர்வை சிந்தி, இரத்தம் சுண்டப் பாடுபட்டுழைக்கிருன். பத்துச் சிலுவைகளுக்கும் மேலான பாரத்தை முதுகிலே சுமந்தும், ஏசுவிலும் பார்க்க அளப்பரிய அவமானங்களைத் தாங்கியும் அவன் வாழ்கின்ருன். அந்தப் புனிதர்களுடைய தியாகத்தை உங்கள் உதடுகள் பஜிக்காதது ஏனோ?' எனப் பொதுவுடமைவாதி கேட்டார்.

'ஒப்புக் கொள்ளுகிறேன்; ஏசுநாதரிலும் பார்க்க ஒருவன் பல மடங்கு கஷ்டங்களையும், அவமானங்களையும்

## விதை

அந்தந்த விதையின் வகைக்கேற்ப அது அது முளை கொள்ளுகின்றது. ஆனாலும், மண்வளம்—சுவாத்தியம்—விதையின் தன்மை—பதியம் — பருவகாலம் — உழவனின் ஊக்கம்—வேலி—காவல் ஆகிய பிற ஏதுக்களும் முளையின் வளர்ச்சியையும், பயனின் ஏற்றத்தையும் நிர்ணயிக்கின்றன. இங்கு இப்படி விதையையும் பயனையும் வகுத்துப் பேசுவதற்குக் காரணம் உண்டு. பகவத் கீதை என்ற விதை என் மனத்திலே வித்தப்பட்டது. 'கீதை நிழலில்....' என்னும் இப்பயன் சமைந்தது. கீதைக் கருத்து அற்புத விதை. இதிலே சமைந்த பயன் எல்லைக்கட்டுடையதாயின், குறை விதை சார்ந்ததல்ல என்பதை உங்கள் மனத்தில் இருத்திக் கொள்ளுதலை யாசிப்பேன்.

ஒரு சமயம் என் மனத்தினை பாரிய சஞ்சலம் உலைக்கலாயிற்று. அதனைப் போக்கு மார்க்கம் என்ன என மனம் அலையலாயிற்று. அப்போழுது பகவத் கீதையே என் நினைவில் எழுந்தது. மீண்டும் அதனுடன் கலக்கவேண்டும் என்ற ஆசை முற்றியது. கீதையின் படனம் வேர் கொண்டது. கீதையிலே ஒன்ற ஒன்ற என் மனம் இலேசாகியது என்பது சத்தியம். அதே சமயம் என் கற்பனைகளும் சடைத்து வளர்வதை உணரலானேன்.

கீதையிலே காணப்படும் கருத்துக்களை ஒன்றிச் சில கற்பனைகள் முளைத்தன. விளங்கியும் விளங்காததுமான ஐய நிலையில் வேறு சில கற்பனைகள் கிளைத்தன. எனவே, சில கதைகளிலே கீதையின் கருத்துக்களும், வேறு சில கதைகளிலே கீதைக்கு விளக்கவுரை வழங்கிய பெரியோருடைய கருத்துக்களும் இயல்பாகப் புகுந்து கொண்டன. வினோபாஜி, சித்பவானந்தஜி, ராஜாஜி ஆகியோர் கையாண்ட சில உவமைகளும் ஆங்காங்குச் சேர்ந்து கொண்டன. வேறு சிலவற்றிலே கீதையுடன் நேரடித்

ஏற்றுக் கொள்ளுகின்றான் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றேன். ஆனால் அத் தொழிலாளி அத்தனை பாடுகளையும் தன்னுடைய வயிற்றுக்காகவே செய்வதினால், எவ்வித மகத்துவமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவன் அப்பாடுகளிற் பாதியளவுதானும் ஆண்டவனுக்காகச் செய்வானேயாகில், அவனுடைய பாடுகளை ஏசுநாதரிலும் பார்க்க அதிகமாகத் துதிப்பேன்' என்றார் அமைதியாக.

கார்ல் மார்க்ஸ் நூல்களில் இதற்கான எதிர்வாதம் ஏதாவது எழுதப்பட்டிருக்கின்றதா என்பது தனக்குத் தெரியவில்லையே என்ற தோல்வி உணர்வு இவரை அரிக்கலாயிற்று!

## 41. மறை

'....ஆனால், பக்தி என்ற தீயும் சேரும்
பொழுதுதான் விளக்கினால் ஒளி
பரப்ப முடியும்....'

அறையின் இருளைப் பிளந்து பேச்சுக் குரல் கேட்டது.

அவிந்து கிடந்த விளக்கின் திரியும், எண்ணெயுமே உரையாடலில் ஈடுபட்டிருந்தன.

'நான் ஞானத்திற்குச் சமமானவன்! நானில்லாவிட்டால், இந்த விளக்கிலே ஒளி பிறக்கமாட்டாது. எனவே, ஒளியின் ஆதாரமே நான்தான்' என்றது.

'நான் அற்பமாகத் தோன்றலாம். ஆனால், உன்னையும் தீயையும் இணைக்கும் கர்மத்தை இயற்றுபவன் நான். கர்மம் ஞானத்தின் நிமித்தமாக இருப்பதினால், 'கர்மம் ஞானத்தின் திரியாகும்' என அறிந்தோர் என்புகழ் சாற்றுவர்' எனத் திரி தன் கட்சியைப் பேசியது.

எண்ணெய்யும் திரியும் தாம் தத்தமது பெருமைகளை இருளிலிருந்து பேசுவதை மறந்துவிட்டன.

ஈசன் தீயை எடுத்துத் திரியின் முனையிலே சுடரை ஏற்றினான்!

அறையிலே ஒளி பரவியது. அத்துடன் ஈசனின் சிரிப்பு அலைகளும் விரிந்தன.

'எண்ணெய்யுந் தேவைதான்; திரியுந் தேவைதான்! ஆனால், பக்தி என்ற தீயும் சேரும்பொழுதுதான் விளக்கினால் ஒளிபரப்ப முடியும். இது விளக்கிற்கும் பொருந்தும், மக்களின் பாவனைக்கும் பொருந்தும்' என்றான் ஈசன்.

'நான்!' எனக் கேட்டது விளக்கு.

'நீ உடல்!' என்றான் ஈசன்.

அறையிலே சுடரின் தவக்கோவலம் அழகு சிந்தத் தொடங்கிற்று.

## 42. வீடு

'நமது வாழ்க்கையில் பேரின்பப் பேறு
மின்னலைப் போன்று, கணநேரக்
கலவியிலே தான் சித்திக்கின்றது....'

**அ**வன் முப்பொழுதும் ஸ்நானஞ் செய்து, அக்கினி காரியஞ் செய்து, வெயிற் காலத்தில் நெருப்புக்குச் சமீபத்திலும், மழை காலத்தில் தண்ணீரிலும், பனிகாலத்தில் வெளியிலும் இருந்து தவஞ்செய்து, வேத சிரசுகளாகிய உபநிஷத்துக்களையே பாராயணஞ் செய்து வந்தான். இப்படி வானப்பிரஸ்தாச்சிரமத்திலிருந்து, மிகுந்த வைராக்கியம் அடைந்தபோது, சந்தியாச்சிரமத்திலே

பிரவேசித்தல் வேண்டும் என்ற எண்ணம் இயல்பாக உதிக்கலாயிற்று.

தான் ஈடுபட்டுத் திளைத்த கிருகஸ்த வாழ்க்கை அவனுக்கு மிக மங்கலான கனவாகத் தோன்றலாயிற்று. பிதா, மாதா, பெண்டிர், பிள்ளை முதலானோரிடத்தும், பொருள் முதலானவைகளிடத்தும் பற்றுக்களைத் துறந்து காஷாயந் தரித்துப் புறப்பட்டான்.

வழியில்....

அல்லி விட்டங்களை அலர்த்தி மேடைகள் அமைத்து, அமுதம் இருக்கும் இடத்தைக் காட்டும் வழிகாட்டிக் கோடுகளை நிர்வாணமாகத் தெளித்தும் சிருங்காரம் பிழிகின்றது மலர்மொய். அதன் மீது காமுற்ற தேனீ ஒன்று மலர்க் குறிகளை இடித்தும், மகரந்தக் கூடுகளைக் குழைத்தும், தேன் மாந்தியும் களிப்புக் கொள்ளுகின்றது.

அவனுடைய உள்ளத்தில் அருவருப்பு உணர்வின் ஊற்றுக்கண் உடைத்தது!

'மலர் மொய்யே! நீ காமத்தில் அழிந்துபோவதை உணரவில்லையா? இறை தியானத்தில் ஈடுபட்டு, பரமபதம் அடைதலே முக்தி' என்றான்.

'ஓகோ, காஷாயம் தரித்து சந்நியாச தத்துவம் பேசுகிறாயா?' என மலர்மொய் நகைத்தது.

'யான் அநுபவத்திலிருந்து பேசுகிறேன். சிற்றின்பம் புல்லியது; போலி; மாயத்திரை. அதனையும் அதன் விளைச்சல்களையும் துறந்தேன். உண்மையின் தரிசனம் வாய்த்தது. வீட்டின்பப் பேற்றினை நாடிச் செல்லுகின்றேன்....'

'உன் அநுபவம் ஒரு தலைப்பட்சமானது. உணர்ச்சி நிலையில் சிற்றின்பத்தை நாடினாய்; அதன் பலாபலன்களை அறிவு நிலையில் விசாரணை செய்கின்றாய். கரிப்புச் சுவை

புகுந்ததற்கு அதுதான் காரணம். எனக்கு உணர்ச்சியும் அறிவும் ஒரே தளத்தவை. அதனால், என்னுடைய அநுபவம் வேறாக இருக்கின்றது. நமது வாழ்க்கையில் பேரின்பம் பேறு மின்னலைப் போன்று, கணநேரக் கலவியிலேதான் சித்திக்கின்றது. அக்கலவியிலே, என்னையே முற்றாக இழந்து, நானே இல்லையான, ஆனால் நானேயான புதுப் பிறவி எடுக்கின்றேன். தன்னையே அழித்து, தன்னில் தன்னையே உருவாக்கும் அற்புதக்கலையே கலவி. 'கலவியினால் சாகாமல் இருத்தல் கூடும்' என்ற தத்துவ வழி நடந்து, பிஞ்சாகிக் காயாகிக் கனியாகி நான் அமரத்துவம் அடைகிறேன். இறப்பு அற்ற நிலையே பேரின்பம்....' என்றது மலர்மொய்.

'சிவ சிவா....' என அவன் செவிகளைப் பொத்தினான்.

மலர்மொய் தேனீயுடன் கலவியில் ஒன்றுபட்டு, தன்னையே இழந்து மறந்தது!

புதிய உண்மையின் தரிசனம் பெற்றவனாக இவன் நடக்கத் தொடங்கினான்.

தூரத்திலே, அவன் முன்னர் துறந்து சென்ற வீடு தெரிகின்றது.

## 43. கலை

'இறைவன் படைத்தனன் கவிஞனை;
அவன் படைத்தனன் காவியத் தீஞ்
சுவையை!'

அக்கூட்டத்திற்குக் கவிஞன், விஞ்ஞானி, விமர்சகன் ஆகிய மூவரும் பேச அழைக்கப்பட்டிருந்தார்கள். சந்தர்ப்பம் வலிய வந்து வாய்த்தது என விஞ்ஞானியும், விமர்சகனும் அக மகிழ்ந்திருந்தார்கள்.

முதலில் விஞ்ஞானி பேசினன்.

'கவிஞன் சோம்பேறி; சதா கனவு கண்டு கொண்டு இருப்பவன். தென்றலின் தழுவல், புள்ளினத்தின் கீதம்; வானவில்லின் எழில், ஏகாந்த இனிமை—இவற்றிலே மனம் பறிகொடுத்ததாகப் பிதற்றுவான். அலங்காரப் பிதற்றல் களால் நாமும் சமுதாயமும் முன்னேற முடியுமா? இப் பிதற்றல்களைச் சிருஷ்டி என்று மயங்குதலும் போற்றுதலும் எவ்வளவு அபத்தமானது? இக்கவிஞர்கள் கவிதை பாடித் தமது நேரத்தையும், பிறரின் நேரத்தையும் பாழாக்குவதை அனுமதிப்பதிலும் பார்க்க, இவர்களைக் கலப்பைகளிலே பூட்டி உழ வைப்பீர்களானல், இவர்களுடைய 'தொப்பை' களையும் நிரப்பக் கொஞ்சம் நெல்மணிகளையாவது அதிகமாகப் பயிரிடலாம். விஞ்ஞானியின் சமுதாயச் சேவையைப் பாருங்கள். உந்திகள், வான ஊர்திகள், வானெலி, சலனப் படம், தொலைபேசி என அவன் நமது சௌகரியத்திற்காகப் படைத்துள்ளவற்றின் பட்டியல் மிகவும் நீண்டது. கடவுளுக் குச் சமதையான உண்மையான படைப்பாளிகள் விஞ்ஞானி களே...' என மிகவும் ஆவேசமாகக் கவிஞர்களைச் சாடி, விஞ்ஞானிகளை விண்ணிலே உயர்த்தி அவர் தமது பேச்சினை முடித்தார்.

அடுத்ததாகப் பேசிய விமர்சகன், 'விமர்சகன் சமுதாயத் தின் மனச்சாட்சியாகவும் இலக்கியச் சுவையின் உயிர்த் துடிப்பாகவும் உழைத்து வருகின்றுன். பல்வகை நூல்களைக் கற்றுத் தேர்ந்த பெற்றியனே விமர்சகன். இலக்கியத்திற் கான இலட்சணங்களையும், இலக்கணங்களையும் அறிந்தவன். அவனுடைய தொண்டு மட்டும் இல்லாவிட்டால், எந்தக் கவிதா ஆக்கமும் பொதுமக்களின் சுவையை எட்ட மாட்டாது. பொதுமக்களின் சுவையைப் பூர்த்தி செய் யும் பண்டங்களை இறக்கும் துறையாகவும் அவன் தன்ன லமற்ற தொண்டு இயற்றுகின்றுன். இந்த உண்மை களை மறந்து, கவிஞனனவன் தான் வானத்தில் இருந்து குதித்த தனிப்பிறவி என்ற பாவனையில் வாழ்தல் அகம்பாவம்

சார்ந்ததாகும்....'என நிழல் யுத்தம் பயின்று, தனது பேச்சை நீட்டி முழக்கினன்.

'விஞ்ஞானியும், விமர்சகனும் பேசிய பின்னர் என் கட்சியை எடுத்துப் பேசாதுவிட்டால், என்னை நீங்கள் சோம்பேறி என்றோ, அகம்பாவியென்றோ நினைத்துவிடக் கூடும். விஞ்ஞானிகளின் சமுதாயத் தொண்டினை நான் என்றுமே குறைத்து மதிப்பிட்டது கிடையாது. ஆனல், ஒரு ஹென்றி போர்டோ, ரைட் சகோதரரோ, மார்க்கோனியா, ஒரு எடிசனே தோன்றி அற்புத விஞ்ஞானக் கருவிகளை அமைத்துத் தந்திருக்காவிட்டாலும்கூட, பின்வந்த விஞ்ஞானிகள் நிச்சயம் அவற்றைக் கண்டுபிடித்துத் தந்திருப்பார்கள். மனிதன் அக்கினியையும், அதன் உபயோகத்தையும் கண்டு பிடித்ததிலிருந்து, இயற்கையின் இரகசியங்களைத் துருவித் துருவி ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சி உண்மைகளை அடித்தளமாக வைத்துப் பல சாதனங்களை உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளான். இவை 'கண்டுபிடிப்பு'களே என்பது கவனத்திற்குரியது. ஆனல், காளிதாஸன் தோன்றியிருக்கா விட்டால் சாகுந்தலம், ஷேக்ஸ்பியர் தோன்றியிருக்கா விட்டால் ஒத்தெல்லோ, வள்ளுவன் இன்றித் திருக்குறள், கம்பனின்றிக் கம்பராமாயணம் தோன்றியிருக்கமாட்டா. அவற்றை அதே சுவையிலும், கற்பனை வளத்திலும் இன்னொரு கவிஞனினுற் படைத்தே இருக்க முடியாது. இறைவன் படைத்தனன் கவிஞனை; அவன் படைத்தனன் காவியத் தீஞ்சுவையை! விமர்சகனின் கூற்றினைப் பிறிதொரு கவிஞன் முற்கூட்டியே அழகாக விமர்சனஞ் செய்துள்ளான். கவிஞன் பலாப் பழத்தின் தீஞ்சுவைகளைச் சுவைத்து மகிழ்கின்றான்; விமர்சகன் அப்பலாப் பழத்தின் தோலிலுள்ள முட்களை எண்ணுவதிற் காலம் கழிக்கின்றான். இனி....' எனத் தன் பேச்சைக் கவிஞன் தொடங்கினன்.

## 44. விதி

அணுவைப்பிளந்து சக்தியைப் பெற்ருேம்.
யதார்த்தம். சக்தியை ஒடுக்கிச்
சிவத்தைத் தரிசிக்க முடியாதா?
தவிப்பு.

வயிற்றிலே பசி. நெஞ்சிலே உரம். மூளையிலே சுறுசுறுப்பு. அவன் மகாசிந்தனைவாதி. ஞானவானுங்கூட, மனித சமுதாயத்தின் ஈடேற்றமே அவன் நோக்கம்.

மனித குலத்தின் ஈடேற்றம் குறித்துப் பேசும் மதங்களை ஆராய்ந்தான். அவை அனைத்தும் இறைபக்தி பற்றியும், இறை அச்சம் பற்றியும் போதித்தன. மறுவுலக வாழ்க்கைப் பற்றி ஆசை வார்த்தைகள் ஊட்டின. இவற்றை எல்லாம் நம்பிய மனிதன், அபினி உட்கொண்ட ஒரு போதையிலே, உழைத்து உழைத்து இவ்வுலக வாழ்க்கையிலே ஓடாகி உருக்குலைவதைக் கண்டான். கற்றவற்றையும் கண்டவற்றையும் அவன் மோதவிட்டான். கருத்துவமும் கருத்துவமும் மோதுகின்றன. மோதுதலிலே சிதைந்து அழிந்தவை ஒழிய, மிச்சில் புதிய கருத்துவமாக உயிர்க்கின்றது. புதிய மதத்தின் உயிர்ப்பு.

புதிய மதத்திற்கு ஒரு தளம். எண்ணம் வாதத்தின் முதலல்ல. பொருளே வாதத்தின் முதல். இம்மை வாழ்க்கையின் சுகம் பொருள். பொருளின் யதார்த்தம் கவர்ச்சியானது. பொருளே மூலதனம். மூலதனம் என்ருல் என்ன? அது தொற்றியும் ஆராய்வுகள். சேமிக்கப்பட்ட உழைப்புச் சக்திதான் மூலதனம். உழைப்புச் சக்தி கைவரப்பட்டவர்கள் பாட்டாளிகள். அவர்கள் உடபரி. அவர்கள் சுரண்டப்படுகிருர்கள். இதனுல் பட்டினி என்னும் சிறையிலே மெலிகிருர்கள். சிறையிலிருந்து விமுக்தி பெறும் மார்க்கம் கம்யூனிஸம். புதிய மதத்திற்கு அநுட்டான கிரியைகளும் குறியீடுகளுந் தேவை. செங்கொடி, அரிவாளும் சுத்தி

யலும் என்று பலப்பல. கொலையிற் கொல்லாமை என்ற யுக்தியிலும் அவனுக்குச் சம்மதம். இந்த யுக்தி 'புரட்சி ஓங்குக' என்ற மந்திரத்தில் அடக்கப்படுகின்றது.

பாட்டாளிகளின் பொருளாதார விமுக்திக்கு எற்ற புதிய மதமாக கம்யூனிஸம் பரம்புகின்றது. மதம் என்று கூறக் கூச்சம், விஞ்ஞான சாஸ்திரம் என்று பேசப்படுகின்றது.

* * *

கம்யூனிஸத்தின் விஞ்ஞானத் தளம் நின்று பிடிக்கவில்லை. அதன் விமுக்தி மகத்துவம் நிருபணமாகி நிலைத்தது. எந்த மதத்திலும் இன்னொரு மகத்துவம் உண்டு. அந்த மகத்துவம் ஒரு மதத்திற்குப் பல மத்ஹபுகள் தோன்றுவதுதான். அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்ற உட்பிரிவுகள் மட்டுமா? பின்னர் தோன்றிய மதங்களான கிருஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களிலும் மத்ஹபுகள். கம்யூனிஸத்திலே லெனினிஸம், ட்ரொஸ்கிஸம், ஸ்டாலினிஸம், ஜிலாயிஸம், மாசேதுங்கிஸம்,....மத்ஹபுகள் விஷயத்தில் பிரிவினைப் போட்டியின் உச்சம். பொது எதிரியான பூர்ஷுவா வர்க்கத்தையும் முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் கம்யூனிஸ மத்ஹபுகள் மறந்துவிட்டன. உள் பிணக்குகளை எதிர்க்கும் மூர்க்கம்.

மார்க்ஸ் என்ற சிந்தனைவாதி யோகியுங்கூட. புதிய மதத்தினைத் தோற்றுவித்துவிட்டு, மத்ஹபுகளுக்கிடையிலான பிணக்குகளைப் பார்க்காது கல்லறையிலே நிம்மதியாகத் தூங்குகின்றார்.

* * *

**தூக்கமில்லை** சிவனுக்கும் சக்திக்கும். அவர்களுக்கிடையில் ஊடல்.

''சக்தியின்றிச் சிவனில்லை'' எனச் சாடினாள் சக்தி.

''சிவனின்றிச் சக்தியில்லை'' என்று ஒற்றைக் காலில் நின்றான் சிவன்.

''சக்தியே சிவன்!''

''சிவனே சக்தி',

பள்ளிச் சிறுர் வாக்கில் மாறி மாறிக் கத்திஞர்கள்.

கணக்குப் பண்ண அவர்களுக்குச் சித்தமில்லை. ஊடல் உச்சம் அவர்களின் நத்துதல்.

* * *

சக்திக்கு ஒரு சமன்பாடு இயற்றும் விசித்திரக் கணக்கு ஒன்றிலே சிரத்தை ஊன்றிஞன் ஒரு ஞானி. அவன் பரம விஞ்ஞானி. ஒளியின் வேகத்தை இழுத்தடிக்கும் சமன்பாடு ஒன்று பளிச்சிட்டது.

$E = MC^2$

சக்தி = திணிவு = ஒளி வேகத்தின் வர்க்கம்.

திணிவு தர ஒளிவேகத்தின் வர்க்கம் சிவஞ?

திணிவு தர ஒளிவேகத்தின் வர்க்கம் மூலதனமா?

இது சீட்டுக் கூட்டத்தை மீண்டும் பிரித்துப் போட்டுச் சோடி சேர்க்கும் விவகாரம்.

* * *

விளையாட்டிற்கு அப்பாற்பட்ட யதார்த்தம்.

அணுக்கருவைப் பிளந்து அளப்பரிய சக்தி பெறப்படுகின்றது. ஜடப்பொருளின் ஓர் அணுவுள் இவ்வளவு சக்தி உறைந்து கிடந்ததா? விந்தை. ஆனுலும், அந்த சக்தியை அதற்குள் புகுத்தி வைக்கவில்லை என்பதும் உண்மை.

நாலு ஹைட்ரஜன் அணுக்களை இணைத்து ஒரு ஹீலியம் அணுவினைப் பெறும் 'ரசவாத' விந்தை. இந்த மாற்றத்தின் போது அழிக்கமுடியாத .032(தசம் சைபர் மூன்று இரண்டு) கிராம் திணிவுக்கு என்ன நேர்ந்தது? அஃது அதிசக்தியானதா?

விஞ்ஞானத்தின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தும் மீள் பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன.

மார்க்ஸ் தாம் நிறுவிய மதத்தின் விஞ்ஞானத் தளத்தினை மீள்பார்வை செய்யாமல் கல்லறையில் நிம்மதியாகத் தூங்கினார். சிவனுக்கும் சக்திக்குமிடையில் ஊடல் நீடித்தது.

அணுவைப் பிளந்து சக்தியைப் பெற்றோம். யதார்த்தம். சக்தியை ஒடுக்கிச் சிவத்தைத் தரிசிக்க முடியாதா? தவிப்பு. தவிப்பிலே சஞ்சலமுங் கவிந்து கொள்ளுகின்றது. சாந்தி மார்க்க நிறுவகரின் நினைவும் நடுவில்.

படைக்கப்பட்ட பொழுது பூமி நடுங்கிற்று.

இறைவன் மலைகளைப் படைத்து வைத்து அதன் நடுக்கத்தைப் போக்கினான்.

மலை பலம் மிக்கது.

இரும்பு மலையைப் பிளக்கும்.

இரும்பு மலையிலும் பலம் மிக்கது.

தீ இரும்பை உருக்க வல்லது.

தீ இரும்பிலும் பலம் மிக்கது.

நீர் தீயை அவிக்க வல்லது.

நீர் தீயினும் பலம்மிக்கது.

காற்று நீரின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

காற்று நீரிலும் பலம்மிக்கது.

காற்றிலும் பலம் மிக்கது?

* * *

அந்த ஏகாந்த வெளியிலே அவன் நிற்கின்றான். அவன் வயிற்றிலே பசியில்லை. நெஞ்சிலே உரம் இல்லை. மூளையிலே

சுறுசுறுப்பில்லை. அவன் மகா சாமானியன். சௌகரியத்திற்காக எஸ். பொ. என்று அழைக்கப்படுவனுங்கூட. தத்துவக் கடைசல் அவன் நோக்கமும் அல்ல. எல்லாமே இற்றுவிட்ட சுகநிலை. காற்று வாலைக் குமரியின் பட்டுடலின் மிருதுத் தயையுடன் தழுவுகின்றது. தவ நிலை என்றும் கூறலாம். அந்தக் காற்றிலே கீதாசிரியனின் புல்லாங்குழல் இசை மிதந்து வராதா என்ற தாகத்தினை மட்டும் அந்தத் தவம் விழுங்கவில்லை.

## 45. நிலை

> 'புண்ணியத்தைப் பொறுத்து மேனிலைப் பிறவிகளும், பாவத்தைப் பொறுத்துக் கீழ்நிலைப் பிறவிகளும் சித்திக்கின்றன. ஈசனைச் சார்ந்து உலகத்தினின்றும் ஜீவன் விடுதலை யடைடலே முக்தி....'

அஃகிய வறிவினுல் அறிந்து கொள்ளுங்கள். இது உலகம். இதில் வாழும் உயிர்கள் ஜீவர்கள். உலகையும், உயிர்களையும் பரம்பொருள் தாங்கியிருக்கின்றது. ஈசன் இரண்டிற்கும் மேலானவன்; அவற்றை ஆள்பவன். உலக பாசத்திற் கட்டுண்டு ஜீவர்கள் பிறவிகள் பல எடுக்கின்றனர். பிறப்பும் பல வகைத்து. புண்ணியத்தைப் பொறுத்து மேனிலைப் பிறவிகளும், பாவத்தைப் பொறுத்துக் கீழ்நிலைப் பிறவிகளும் சித்திக்கின்றன. ஈசனைச் சார்ந்து உலகத்தினின்றும் ஜீவன் விடுதலையடைதலே முக்தி.'

இவ்வேதாந்த விளக்கத்தைத் தென்னகத்திற் பிறந்த ஸ்ரீ சங்கராச்சாரியார், ஸ்ரீ ராமானுஜாசாரியார், ஸ்ரீமத்வாசாரியார் ஆகிய ஞானியர் மூவரும் மூன்று கோணத்தில் தரிசித்தனர். சங்கர் அத்வைதம் என்ருர்; ராமானுஜர்

விசிஷ்டாத்வைதம் என்றார்; ஸ்ரீமத் துவைதம் என்றார். ஒரே விளக்கத்திற்கு மூன்று தனிவிளக்கங்களும் கிளைத்தன.

'உலகம்-ஜீவன் - ஈசன் ஆகிய மூன்றும் அநாதி யானவை. அதேசமயம் அவை வேறானவை. ஜீவன், ஈசன் கருணையால் உலகிலிருந்து விடுதலை யடைந்து, அவனுக்குத் தொண்டனாய் ஆட்படுவதே முக்தி. முக்தியிலும் ஈசன் வேறு; ஜீவன் வேறு' எனத் துவைதம் விளக்கப் பட்டது.

'ஈசன் ஏகன். அவனுக்கு உடலாக இருப்பது உலகம். உடலின் கணக்கற்ற உயிர்த்தத்துவங்களாக இருப்பது ஜீவர்கள். ஈசன் பூரணன் என்றும், அதில் தன்னை ஓர் அம்சம் என்றும் ஜீவன் சுகாநுபவத்தில் அறிந்து கொள்ளு தலே முக்தி. முக்தி அடைவதற்கு ஜீவன் ஈசனிடம் சரணாகதியடைந்து, தன்னை அவனுடைய அவயமாக அறிதல் வேண்டும்' என்று விசிஷ்டாத்வைதம் விளக்கப் பட்டது.

'அத்வைதம் என்பதற்கு இரண்டல்ல என்பது பொருள். உள்ளது ஒரேயொரு பொருள்தான். அஃதே அகண்ட சத் சித் ஆனந்தம். தன்னை உலகமாகவும், ஜீவனாகவும் காட்டிக் கொள்ளுகிற வல்லமை அதற்கு உண்டு. அவ்வல்லமை மாயாசக்தி எனப்படும். பிரம்மமும், பிரமத்தினுடைய சக்தியும் எனவும் பெறப்படும். ஞான மடைந்த ஜீவன் ஈசனிலே கலப்பதுதான் முக்தி நிலை. கடலிலுள்ள அலை நாமரூபத்தை அழித்து விடும்பொழுது பழையபடி கடலாகிவிடுகிறது. அவ்வாறே முக்தி நிலையில் ஜீவன் ஈசனிற் கலந்து விடுகின்றான்' என அத்வைதம் விளக்கப்பட்டது.

* * *

இவற்றுள் எது மெய்யான விளக்கம் என்பதை அறியும் வேட்கையுடன் ஒருவன் புறப்பட்டான். பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து, பசியால் அலைந்து, சோர்

வற்ற நிலையில் மகா தபஸ்வி ஒருவரின் பாதங்களைச் சரணடைந்தான்.

'சத்தியம் வேறு; மெய்மை வேறு. மெய்மை நித்தியமானதல்ல; அதன் உண்மை அஃது எழுந்து நிற்கும் தளத்தைப் பொறுத்தது....இன்னொரு வழியில் யோசித்துப் பார் துவைதம் விழிப்பு நிலை என்று கூறலாம். அப்பொழுது அவன் வேறு, மற்றும் உயிர்கள் வேறு, உலகம் வேறு என்பன மெய்யாகத் தோன்றுகின்றன. விசிஷ்டாத்வைதம் அபேத நிலையான சொப்பனமாக இருக்கலாம். கனவு மாந்தரும், உலகமும் அந்நியமானவையல்ல; பேதப்படுவதாகத் தோன்றலாம். பின்னர் அயர்ந்த உறக்கநிலை. பிரக்ஞையைத் தவிர மற்றவை இற்றுவிடுகின்றன. அதுவே அத்வைத நிலை. இப்பொழுது நீயே சொல். எது மெய்யான நிலை?' என தபஸ்வி கேட்டார்.

'நான் சாமான்யன்; எனக்கு வயிற்றுப் பசி எடுக்கிறது' என்றான்.

'அபக்குவன்' எனக் கூறிய மகாதபஸ்வி தியானத்தில் ஒன்றினார்.

## 46. சாரு

'நாம் உலகை எந்நோக்குடன் பார்க்கிறோமோ, அப்படியே அது நமக்குத் தோன்றும்....'

அவர் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் தாஸர். அந்த இராமதாஸர் இராமாயணத்தை எழுதிக் கொண்டிருந்தார். எழுதுவதை அவ்வப்போது தமது சீடர்களுக்கு விளக்குவது அவர் வழக்கம். ஒருவருக்கும் தெரியாது, ஸ்ரீராமரின்

தாஸானுதாஸரான அநுமாரும் அவ்விளக்கங்களைக் கேட்டின்புறுவது வழக்கம்.

விளக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று இராமதாஸர் அநுமார் அசோகவனத்தை அடைந்த காட்சியை விளக்கிக் கொண்டிருந்தார்.

'அநுமர் அசோக வனத்தை அடைந்தார். அங்கே வெள்ளை மலர்களைக் கண்டார்....!'

கேட்டுக் கொண்டிருந்த அநுமாரினால் இராமதாஸரின் விளக்கத்தைப் பொறுக்க முடியவில்லை.

'நான் அசோகவனத்தில் வெள்ளை மலர்களைப் பார்க்கவே யில்லை. நான் அங்குப் பார்த்த மலர்கள் சிவப்பு நிறத்தன. நீர் எழுதியிருப்பது பிழை. அதைத் திருத்தும்' என்றார் அநுமார்.

இராமதாஸர் அநுமாரை வணங்கி, 'நீங்கள் அசோக வனத்தில் வெள்ளை மலர்களைத்தான் பார்த்தீர்கள். நான் எழுதியிருப்பது சரி....!' என்றார் அடக்கமாக. அவருடைய குரலில் உறுதி தொனித்தது.

'அசோக வனத்திற்குப் போனவன் நான். அப்படி யானால், நான் சொல்வது பொய்யா?' என அநுமார் தீர்மான மாகக் கேட்டார்.

இராமதாஸருக்கும் அநுமாருக்கும் தத்தமது கட்சியே சரியானதாகத் தோன்றியது. எனவே, இவ்வழக்கு சாட்சாத் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் மத்தியஸ்தத்திற்குச் சென்றது.

* * *

நாம் உலகை எந்நோக்குடன் பார்க்கிறோமோ, அப்படியே அது நமக்குத் தோன்றும்....அசோகவனத்தி லிருந்த பூக்கள் வெள்ளை நிறத்தனவே. ஆனால், பக்தன் அநுமான் அங்கு கோபவசத்தினனாகச் சென்றான்.

சினத்தால் அவனுடைய விழிகள் சிவந்திருந்தன. எனவே, மலர்கள் அவன் விழிக்குச் சிவப்பு நிறத்தனவாகத் தோன்றியதில் வியப்பில்லை....' என்ருர் ஸ்ரீராமர் அமைதியாக.

## 47. உரை

'உறுப்புகளுக் கிடையில் வேறுபாடு இல்லாவிட்டால், அவற்றின் முழுத் தொகுதியிலே எவ்வாறு வேறுபாடு ஏற்படும்?... ......ஒன்றேகுலமாகும்காலம் அண்மிக்கின்றது...'

அவனுடைய உதடுகள் 'சம்போ சங்கர மகாதேவா....' என அடிக்கொரு தடவை உச்சரித்தபோதிலும், விழிகளிலே அசாதாரண சினமும் விரக்தியும் இழையோடி யிருப்பதைத் தேவி அவதானித்தாள். நாரதனுடைய அத்தகைய பாவம் கலகம் ஒன்றின் முன்னேடி என்பதை அவள் அறிவாள். எனினும், எதையும் அவதானிக்காதவளைப்போல, 'திரிலோக சஞ்சாரி, என்ன செய்தி கொண்டு வந்திருக்கிருரோ?' என்ற வினவைத் தொடுத்து, சினத்திற்குத் தூபமிட்டாள்.

'பூலோகம் கெட்டுச் சீரழிந்து கொண்டே போகின்றது. அங்கு போவதென்ருலும் வெட்கமாகவும், வெறுப்பாகவும் இருக்கின்றது' என நாரதன் அலுத்துக் கொண்டான்.

'உன் தலையீடு இன்றியே, மானிடர் தாமாகவே கலகங்களைக் கற்பித்துச் சண்டையிட்டுக் கொள்கிருர்களென்ற மனத்தாங்கலா?' எனத் தேவி எளனஞ் சிந்தக் கேட்டாள்.

'அச்சண்டைகளினுல் மனிதப் பூண்டே அழிந்துவிட்டாற்கூடச் சேமம் என்று தோன்றுகின்றது...இங்கு

ஏளனமும் சிரிப்பும் சிந்தி விளையாடுகின்றது. பூலோகத்திற்குப் போய்ப் பார்த்தாலல்லவோ உண்மை தெரியும்? விஞ்ஞான வளர்ச்சி—மருத்துவப் புதுமை எனக்கூறி ஓர் உடலிலுள்ள இரத்தத்தைப் பிறிதொரு உடலுக்குள் பாய்ச்சினார்கள். சிறுசிறு உறுப்புகளையும், விழிகளையும், குண்டிக்காய்களையும் அறுவை வைத்தியம் மூலம் ஓர் உடலிலிருந்து இன்னோர் உயிருக்கு மாற்றினார்கள்....' இன்னும் சில ஆண்டுகளில் மனித உடலுக்குத் தேவையான சகல புதிய உபரி உறுப்புகளும் கடைகளிற் பெறக் கூடியதாக இருக்கும்' என விஞ்ஞானி ஒருவன் வருங்காலத்தைப் பற்றி அகம்பாவத்துடன் ஆருடம் கூறுகிறான், உம்பருராருக்கு இன்னும் அவமானம் நிகழ இருக்கிறதா?' என நாரதன் கேட்டான். தேவியின் சினம் மறைந்தது. ஈசனிலே கோபம் பற்றிப் படர்ந்தது.

அவ்வேளையில் ஈசனும் அவ்விடம் வந்து சேர்ந்தான்.

'நித்தியராம், சருவவியாபகராம், அநாதிமலமுத்தராம்.... லிங்கத்தின் பக்கலில் நிற்க ஓடுகிறார்....' தேவியின் சினத் தெறிப்பு.

'லிங்கம் முதலிய இடங்களில் தயிரில் நெய் போலவும், மற்றைய இடங்களிலெல்லாம் பாலில் நெய் போலவும் வெளிப்படாது நிற்பன் யான் என்பதை மறந்தாயா?.... ஓகோ, பக்கத்தில் நாரதன் நிற்பதை மறந்தேன்....' என்றான் ஈசன்.

'ஊமத்தஞ்சாறு குடித்தும், சுடலைப் பொடி பூசியும் நீங்கள் பித்தனாய் ஆடித்திரியுங்கள். பூலோகத்தில் யார் உங்களை மதிக்கின்றான்? படைத்தல்—காத்தல்—அழித்தல்—மறைத்தல்—அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் இயற்றுவதாகக் கூறினாற் போதுமா?....பூலோகத்தில் நடப்பவற்றைக் கேட்டீர்களா?' எனத் தேவி சீறினாள்.

'யான் சருவஞ்ஞரும்! அறிந்தேன்; மகிழ்ந்தேன்' என்றான் ஈசன்.

நாரதன் திகைத்தான். தேவி பார்த்தாள். ஈசன் சொன்னான்.

'யான் மனிதனுக்கு உடலை உவந்தனன் என்னைச் சேவிப்பதற்காக....அவன் தன்னையே மறந்ததினால், என்னை மறந்தனன். வெள்ளை—கறுப்பு—மஞ்சள் எனத் தோலின் நிறத்தை வைத்து உயர்வுதாழ்வு! பொருள் தேட்டத்தைப் பொறுத்து உயர்வுதாழ்வு! பேசும் மொழியை வைத்து உயர்வுதாழ்வு! வர்ணாசிரமத்தை வைத்து உயர்வுதாழ்வு!.... இந்த உயர்வு தாழ்வுகளை நிலைநாட்டவும், எதிர்க்கவும் நடந்தேறிய சண்டைகள் அனந்தம்....இன்று 'எஜமான' வெள்ளையனின் உடலிலே, கறுப்பு அடிமையின் இதயம் துடிக்கிறது. நாளை இந்தி பேசும் பிராமணனின் உடலிலே துளுபேசும் தோட்டியின் இதயம் துடிக்கப் போகிறது... உறுப்புகளுக்கிடையில் வேறுபாடு இல்லாவிட்டால், அவற்றின் முழுத் தொகுதியிலே எவ்வாறு வேறுபாடு ஏற்படும்?....ஒன்றே குலமாகும் காலம் அண்மிக்கின்றது.... யானும் ஏகனே!....மனிதன் இவற்றைத் தனது அறிவின் சாதனை எனப் போற்றலாம்! ஆனால், அந்த அறிவைப் படைத்தவன் யானே!'

ஈசனைக் காணவில்லை.

சுடலையிலே வீரபத்திர நடனத்தில் ஏற்பாடு!

## 48. அலை

'யான் மோட்சம் அளிக்கும் சமர்த்தன். நீ மோட்சத்தைப் பற்றிக் கவலைப்படாதே. நீ சாதனையைப் பற்றிச் சிந்தித்தால் போதும்....'

அநேக பாவங்களை இயற்றிக்கொண்டிருந்த ஒருவன் ஏகநாத சுவாமிகளிடம் வந்தான். 'சுவாமி, தங்கள் வாழ்க்கை

சிறிதும் சிக்கலற்றதாய், பாவமற்றதாய் இருக்கிறதே!.... தாங்கள் ஒருவரையும் கோபிப்பதில்லை; தங்களுக்கு எவருடனும் சண்டை சச்சரவுகளும், விரோதம்—வழக்குகளும் இல்லை. தங்கள் சுபாவம் எவ்வளவு அமைதியும் அன்பும் பொருந்தியதாய், எவ்வளவு புனிதமாக இருக்கிறது!' என வியந்தான்.

'இப்பொழுது என் விஷயம் இருக்கட்டும். உன்னைப் பற்றி எனக்கொரு விஷயம் தெரியவந்திருக்கிறதே. இன்றைக்கு ஏழாம் நாள் நீ இறந்துபோவாய்' என்றார் ஏசுநாதர்.

'ஏழு நாளில் சாவு! ஏ, கடவுளே! இதென்ன ஆபத்து!' என அரண்டு, அவன் அவசரமாக வீட்டிற்கு ஓடிச் சென்றான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இறுதிக் காலம் கருதி எல்லாவற்றையும் முடித்துக் கொள்வதாகப் பேசிக் கொண்டிருந்தான். அவனுக்கு நோய் உண்டானது. படுத்த படுக்கையானான். ஆறு நாட்கள் கழிந்தன. ஏழாம் நாள் ஏசுநாதர் அவனைப் பார்க்க வந்து, 'எப்படி இருக்கிறாய்?' எனக் கேட்டார்.

'எல்லாம் ஆயிற்று; இனிப்போக வேண்டியதுதான்' என்றான்.

'இந்த ஆறு நாட்களில் எவ்வளவு பாவம் செய்தாய்? எத்தனை தீய எண்ணங்கள் மனத்தில் உதித்தன?' என ஏசுநாதர் கேட்டார்.

'நாதரே! தீய விஷயங்களைக் குறித்து எண்ணுவதற்கு நேரம் ஏது? மரணம் சதா கண்முன் நின்றுகொண்டிருக்கிறதே!' என்றான்.

'என் வாழ்க்கை சிறிதும் பாவமற்றதாய் இருப்பதற்கான காரணம் இப்பொழுது புரிந்துவிட்டதல்லவா?.... சாவைப் பற்றி எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருத்தல் பாவத்தினின்றும் தப்புவதற்கு ஓர் உபாயமாகும்!'

* * *

"புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி தம்மம் சரணம் கச்சாமி' என்ற முச்சரணத்தை நீங்கள் போதித்திருப்பதற்கு காரணம் என்ன?' என ஒருவன் புத்த பகவானைக் கேட்டான்.

'முதலில் தனி மனிதனிடத்தில் உறுதி. இந்த உறுதி உடனடியாக தத்துவ உறுதியாக முதிர்வது அபூர்வம். ஒரு மனிதனிடம் இருந்து வந்த மரியாதையும் மதிப்பும் பத்தும் பதினைந்து பேரிடத்திலாவது வளரவேண்டும். ஆகவே சங்க நிஷ்டை. முதலில் தனி நபரிடம் பற்று, பிறகு சங்கப்பற்று. இவ்விரு பற்றுகளும் வலுவில்லாதவையே. ஆனல், இறுதியில் தத்துவப் பற்றுத் தோன்றும் பொழுது தான் ஸ்தாபனம் நிலைத்துப் பயன் அளிப்பதாகும்....' என புத்தபிரான் விளக்கினார்.

* * *

'கீதை போதனைக்குச் சிறந்த பாஷ்யம் எது? யார்?' என்ற ஐயம் உள்ளத்தில் சுழன்றது.

என் போதனைக்கு நானே பாஷ்யம் என்பது போலக் கண்ணன் பார்த்தனன்.

'வாழ்க்கை என்னும் ரதம். கர்மயோகம்—ராஜயோகம்—பக்தியோகம்—ஞானயோகம் என்ற நான்கு குதிரைகள் அந்த ரதத்திலே பூட்டப்பட்டிருக்கின்றன. சாத்துவிக இயல்பையும், தூய்மையும் புலப்படுத்துவது போல அவை வெண் புரவிகளாகவும் இருக்கின்றன. ஸாரதியாக அமர்ந்திருப்பவன் கண்ணன்!'—காட்சியின் முழுத் தரிசனம்.

மறுகணம், 'மோட்சம் கிடைக்குமா?' என்ற விஞ உள்ளத்தில் முளைவிடுகிறது.

'யான் மோட்சம் அளிக்கும் சமர்த்தன். நீ மோட்சத்தைப் பற்றிக் கவலைப்படாதே. நீ கடமையைப் பற்றிச் சிந்தித்தால் போதும்' என்பது போலக் கண்ணன் முறுவலிக்கின்றான்.

ரதம் ஓடத்தொடங்கியது; அன்றிலிருந்து மனித வாழ்க்கை 'செப்ப' மாக ஓடிக்கொண்டிருக்கின்றது.

## 49. நீயே!

'என்னிடம் மனம் வைத்தவனாய்,
என்னிடம் பக்தி வைத்தவனாய்,
என்னை ஆராதிப்பவனாய் ஆவாய்....

எனக்கு இனியன் நீ!'

அவனுக்கு ஆட்டுக் குட்டியினுடைய குரல் கேட்டது. 'மே....மே....மே' என மீண்டும் அது கத்தியது.

'இந்த ஆட்டிலே குடிகொண்டிருக்கும் ஆணவந்தான் என்ன? 'நான்....நான்....நான்....' எனக் கத்தி எப்படி எப்படியெல்லாம் அட்டகாசம் செய்கின்றது?' என அவன் நினைத்தான்.

* * *

'அச்சுதா! இரண்டு சேனைகளுக்கும் மத்தியில் என்னுடைய ரதத்தை நிறுத்து. இப்போரில் யான் யாரோடு யுத்தம் செய்ய வேண்டுமென்பதையும், போர் விரும்பி முன்னிற்பார் யார் என்பதையும் கவனிக்கிறேன். புல்லறிவாளனாகிய துரியோதனுக்குப் பிரீதி செய்யும் வண்ணம் போர் புரிய இங்கு திரண்டிருப்போரை யான் காண வேண்டும்....' என்றான் அர்ஜுனன்.

'இந்த அர்ஜுனன் யான் என எவ்வளவு அழுத்தி உச்சரிக்கிறான்....' என அவன் நினைத்தபோதிலும், குமிண் நகையின் ஓசங் குலையாமல் ரதத்தை ஆணைப்படியே ஓட்டுகிறான்.

* * *

'யான்' என வெகுண்டு, பின்னர் மாயையிலே மருண்ட அர்ஜுனனில் இரங்கி, அவன் பல மேலான கருத்துக்களை எல்லாம் போதித்தான்.

இறுதியாக,....'மோகத்தால் எதைச் செய்ய இச்சிக்கிருயில்லையோ, உன் இயல்பிற் பிறந்த வினைகளினல் கட்டுண்டு, உன் வசமிழந்தவனுய், அதையே நீ செவ்வாய்.... மறை பொருள்களுக்கெல்லாம் மறைபொருளாகிய ஞானம் இங்ஙனம் உனக்கு இயம்பப்பட்டது. இதை மிச்சமின்றி விமர்சித்து, எப்படி இச்சிக்கின்ருயோ அப்படிச் செய்....' என்ருன்.

எல்லாவற்றையும் பொதுமையாகவும் விளக்கமாகவும் எடுத்தியம்பிய அவன், மிகத் தாராளமாக, 'எப்படி இச்சிக்கிருயோ அப்படியே செய்' எனச் சுதந்திரமளித்து விட்டான். இச்சுதந்திரப் பிரதிக்ஞையை அளித்தவனுக்கும் அளிக்கப்பட்டவனுக்குமிடையில் மின்னல் சொடுக்கி மறையும் நேரம் இவ்வாறு தொங்கிக் கொண்டு நின்றது. மறுகணம் சாதகன்மீது அவனுக்குத் தயைச் சுரப்பு மீறிப் பாய்கின்றது.

'எல்லாவற்றிலும் ஆழ்ந்ததும், மேலானதுமான என்னுடைய மொழியைத் திரும்பவும் கேள். நீ என்னுடைய திடமான இஷ்டனுயிருக்கிருய். ஆகையால், உன் நலத்தையே நவில்கின்றேன். என்னிடம் மனம் வைத்தவனுய், என்னிடம் பக்தி வைத்தவனுய், என்னை ஆராதிப்பவனுய் ஆவாய். என்னை வணங்கு. என்னையே அடைவாய். உனக்கு உண்மையாய்ப் பிரதிக்ஞை செய்கின்றேன். எனக்கு இனியன் நீ!' என அளிக்கப்பட்ட சுதந்திரத்தை நயமாகப் பெற்றுக் கொள்ளுகின்ருன். வழங்கப்பட்ட சுதந்திரத்தை மீண்டும் ஒப்படைப்பதா என்ற சங்கடம் அர்ஜுனனுக்கு. தடுமாற்றத்திற்கு இம்மியும் இடம் வைக்காது, 'எல்லாத் தர்மங்களையும் பரித்தியாகஞ் செய்துவிட்டு என் ஒருவனையே சரணடைவாயாக. நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன்' என்கிருன்.

'யானே....யானே....' என்றவனின் மனத்திலேற்பட்ட மாற்றம்! எல்லாவற்றையும் பரித்தியாகஞ் செய்து, 'எல்லாம்

நீயே!' என்ற போதம் அர்ஜுனனின் உள்ளத்திலிருந்து வழிகின்றது.

* * *

'மே....மே....மே....' எனக் கத்திக்கொண்டே ஆடு இறந்தது. அதன் நரம்பு நாணைகப் பதமடைந்து வில்லிலே ஏறியது.

'துஹீ....துஹீ....துஹீ' என்ற ஒலி. சகல திக்குகளிலும், 'நீயே....நீயே....நீயே....' என்ற ஒலியின் ஓங்கல்!

ஆடு—காண்டீபம்—அர்ஜுனன் ஆகிய சகலவும், சகலமும் 'நான்' என்பதை மறந்து, 'நீயே!' என அவனையே சரணடைந்துவிட்ட திருக்கோலம்....

## 50. முனை

அச்சோகம் பற்றின்மையிலே படர்ந்து,
அருட் தாகப் பெருக்காக அமைந்து
தது. அதுவும் ஒருவகை யோகமே.

அமைதியின் திருக்கோலம் தவிசிருக்கும் ஆரண்யம். தபோவனவாசிகள் உபநிஷதக் கருத்துக்களை ஆராய்ந்து, பரதத்துவங்களின் திவ்விய திருகுமுடிச்சுகளை விடுவித்துக் கொண்டிருந்தார்கள். வேதாந்தம் என்னும் சாந்தி பாட ஓதுதல் எனக் கண்ணன் களித்தனன்.

ஆரண்யத்தைக் கடந்ததும், வயல்வெளி. சோகம் பிழிந்து சிந்த விழிகளை நிலத்திலே புதைத்து ஒருவன் ஏங்குகின்றான். தனக்கு அமைந்த பொருளும் யோகமும் போதவில்லை என்ற மனக்குறையின் உபரி. அத்துயரின் நீழலில் அவனுடைய ஆண்மை நொடிந்து; அகத்தில் அஞ்ஞான இருள் கவிவதைக் கண்ணன் அவதானித் தனன். அவன் நிலைக்காக அநுதாபம் பிறக்கிறது:

ஆனாலும், அந்த வியாகூலத்தைப் போக்கவல்ல அருள் சுரக்கவில்லை.

போர்க்களம் ஒன்றில் வியாகூலமே யோகமாகச் சிந்தித்த நிகழ்ச்சி ஒன்று கண்ணன் மனத்திலே எழுகின்றது....

*　　*　　*

அதர்மம் ஏமாப்புடன் நகைத்தது. தர்மம் தாழ்ந்தது கவலுடல் தொடர்ந்தது. துர்யோதனனின் பதிதாக விளையாடிய சகுனியின் சொற்கேட்டுப் பாச்சிகைகள் உருண்டன. இந்திரப்ரதஸ்தத்தைப் பாண்டவர் இழந்தனர். தர்ம போதம் மிகுந்த தருமன், போலி மான உணர்வின் வாய்ப்பட்டு, தர்மத்தை மறந்தனன். தம்பிமார் நால்வரையும் தோற்று, தன்னையுந் தோற்று, ஐவரின் மனையாள் திரௌபதியையுந் தோற்று, அஸ்தினபுர இறைமாட்சியாளரின் கேலிக்கும், அன்புள்ளங் கொண்டோரின் அநுதாபத்திற்கும் இலக்கான சோக பாத்திரமாகத் தர்மன் மனமிடிந்து நிற்கின்றான்.

துகிலுரி படலமும்; கண்ணனின் அபயமும்! பெரியோரின் சமரசமும்; பாண்டவர் சபதமும்! வினையின் விதி வழி பாண்டவர் பயணம்........

பன்னீராட்டை வனவாசம் முற்றியது. ஓராண்டு அஞ்ஞாத வாசத்தை விராடபுரத்தில் இயற்றி முடித்தனர். அநுபவித்த துன்பமோ நெடியது. ஏற்றல் தர்மமெனப் பொறுத்தனர். ஈற்றில், உபலாபியம் என்ற நகரத்தில் வெளிப்பட்டார்கள். கண்ணனும் வந்து சேர்ந்தான். குருவாகிய சஞ்சயர் கௌரவர் தூதாக உபலாபியம் அடைந்தார். உடனேயே தருமருக்கு வேதாந்த ஞானம் போதிக்கத் தொடங்கினர். '....மித்தை ஆகிய மண்ணாசை தவிர். மீண்டும் காட்டுக்குச் செல். நீ புண்ணியன் தவஞ் செய்து வீடு அடைதலே மேலான செயல்....' சஞ்சயர் கூற்றை ஒப்பும் நிலையில் தருமனின் மனம் இல்லை. இயல்

பிற்கு மார்க்கச் சீற்றமும் வந்து குதிக்கின்றது. 'என்னறத்தில் நின்று தெய்வரை இருவிசும்பினில் ஏற்றுதலே இப்பொழுது எதிர்நிற்கும் எனது சுவதர்மம்' எனத் தருமன் உறுதியாக நின்றான். கண்ணன் குறுக்கிட்டு, அருமந்த வேதாந்த முத்தை இந்த அபக்குவர்கள் முன்னிலையிலா வித்துவது? என உபகார மொழிகூறிச் சஞ்சயனை வழியனுப்பி வைக்கின்றான்.

அடுத்த நாளே தர்மனுடைய உறுதியிலே சிறிது உடைவு. 'முடியுமானால் போரைத் தவிர்ப்போம். கொல்லாமையே அகிம்சை, அதுவே தர்மம்....' என்ற நினைவு நுகும்புகிறது. கண்ணனைத் தூது அனுப்பும் யோசனையின் உதயம். ஐவருக்கும் ஐந்து வீடுகள் யாசித்து வாழும் கருத்தும் தர்மனின் வாயினின்றும் நழுவுகின்றன. இளவல்கள் சினந்தெழுகின்றனர். பாஞ்சாலி சோகக் குரல் இசைக்கின்றாள். இருப்பினும், கண்ணன் தூது நிகழ்கின்றது.

சமாதானத்திற்குரிய சகல கதவுகளையும் துரியோதனன் அடைத்துவிட்டான். அதர்மத்தின் முதிர் விளைவு.

விடுதலைப் போர் பலிக்கின்றது. கண்ணனின் எண்ணமும் அதுவே. அவதாரத்தின் சாரமும் அதுவே!

குருநிலம் அமர்க்களமாகக் குறிக்கப்படுகின்றது.

விடுதலை வெறியன் விஜயன் வீறுகொண்டு போருக்கெழுகின்றான். தேரேறுகின்றான்' தீர்த்தன் சாரத்தியம் செய்கின்றான்.

திணவெடுத்த தோள்கள். சபதத்தை நிறைவேற்றும் துடிப்பு. மிதமிஞ்சிய ஊக்கம் உந்துகிறது. அம்புகள் அம்புக்கூட்டிற்குள் தங்கமாட்டாது பறக்கத் துடிக்கின்றன. காண்டீபம் கையிலே முனிவுடன் முறுகுகின்றது.

'அச்சுதா! படை நடுவில் என் தேரை நிறுத்துக. இப் போர்த் துவக்கத்தில் யான் யாரோடு யுத்தம் செய்ய வேண் டும்; போரைக் காமித்து எதிர் நிற்பார் யார் என்பதையும் கவனிக்கிறேன்....'

தேர் அவ்வாறே நிறுத்தப்படுகின்றது. 'பார்த்தா, கூடியுள்ள இக்கௌரவர்களைப் பார்' எனக் கண்ணன் கூறினன்.

அங்கே இரண்டு சேனைகளிலும் இருக்கின்ற தகப்பன் மார்கள், பாட்டன்மார்கள், ஆசாரியர்கள், மாதுலர்கள் சகோதரர்கள், புத்திரர்கள், பேரன்மார்கள், தோழர்கள், அன்பர்கள் அனைவரையும் பார்த்தன் பார்த்தான். நான்கு தலைமுறையினர் தம்முயிரைத் துறக்கவும், பிறர் உயிரைப் பறிக்கவும் உறுதிபூண்டு நிற்கின்றனர். குரவரையும் இளைஞரையும் கொன்று குவிப்பதா என்ற கலக்கத்தின் சிரசுதயம்.

அவயங்கள் சோர்வடைகின்றன. சரீரத்தில் நடுக்கமும் மயிர்க்கூச்சலும் உண்டாகின்றன. காண்டீபம் நழுவு கின்றது, சர்மம் எரிகின்றது. நிற்பதற்குச் சக்தியற்றவ னாகின்றான். மனம் சுழல்கின்றது. விபரீத சகுனங்கள் தோன்றுகின்றன.

சுடலை ஞானம் வெடித்துக் கிளம்புகிறது. அவனுடைய நிச்சய புத்தி தடுமாறுகின்றது. கிளைஞரைக் கொல்வதி லுள்ள பாவத்தைப் பற்றியும், மாதர் கற்பிழக்குமிடத்து ஏற்படும் வர்ணக்கலப்புப் பற்றியும், ஜாதி தர்மங்கள், குலதர்மங்கள் தடுமாறுதல் பற்றியும், அதனால் ஏற்படும் நரகத்தின் நெடிய வாழ்க்கை பற்றியும் புலம்பி, 'அரச சுக ஆசையினால் சுற்றத்தாரைக் கொல்லத் துணிதல் என்ற பாவத்தைச் செய்யத் தலைப்பட்டோம், அந்தோ!' எனச் சொல்லி, அம்பையும் வில்லையும் அரங்கில் எறிந்து, துயரம் துய்க்கும் மனத்தினனாய் அர்ஜுனன் தேர்த்தட்டில் உட்கார்ந்தான்.

அர்ஜுனனின் வியாகூலம்! அச்சோகம் பற்றின்மையிலே படர்ந்து, அருட்தாகப் பெருக்காக அமைந்தது. அதுவும் ஒருவகை யோகமே எனக் கண்ணன் களித்தனன்.

அந்நிலையில்....

அவனையே குருவாக வரித்து இவன் மாறுக்கனுகச் சரணடைகின்றான்.

அவன் கண்ணன்.

இவன் அர்ஜுனன்.

அவன் போர்முனைக்கு ஓரளவு முதுகுகாட்டி, இவனை முன்னிலை செய்கின்றான்.

கீதையின் நித்திலக் கருத்துக்கள் அருள்வயலில் முளை கொள்ளுகின்றன,

*　　　　*　　　　*

காலம் காலமாகச் செழித்த கருத்து வயலிலே கோபி கிருஷ்ண கானத்தாற் கவரப்பட்ட பசு ஒன்று மேய்கின்றது. பசியின் அகோரம், ஜீரணிக்க இயலாத அளவுக்கு வயிற்றைச் செம்பிக் கொள்ளுகின்றது. சுகமும் அவதியும். அவதியிலே அண்டை மரநிழலில் அது படுத்துக் கொள்ளுகின்றது. அசை மீட்கும் படலத்தின் துவக்கம்.

கீதை அல்ல; கீதை நிழலில்....

அசை போடுதல் நீண்டது.

பசுவுக்கு நாளைக்குப் புதிதாகப் பசி எடுக்கும்.

முற்றும்.

# வாசித்தீர்களா ?

## புதிய வெளியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| மலர்களிலே அவள் மல்லிகை | | | | |
| | —இந்துமதி | .... | 8 | 00 |
| அனிதா | ,, | .... | 4 | 00 |
| கீதமடி நீ எனக்கு | ,, | .... | 6 | 00 |
| நந்திவர்மன் | —கோவி. மணிசேகரன் | .... | 16 | 00 |
| பாலவல்லியின் தியாகம் | | | | |
| | —கி. ரா. கோபாலன் | .... | 15 | 00 |
| நடிகை | —பி. கேசவதேவ் | .... | 12 | 00 |
| கலிங்க நாயகி | —புரவலன் | .... | 12 | 00 |
| பகல் உறவுகள் | —ஜெயந்தன் | .... | 6 | 00 |
| லா. ச. ரா. கதைகள் | | | | |
| | லா. ச. ரா. | .... | 8 | 00 |
| இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள் | | | | |
| | —ரஹ்மான் | .... | 2 | 50 |

**கலைஞன் பதிப்பகம்**

81, பாண்டி பஜார்,

சென்னை-600 017.

கலைஞன் பதிப்பகம்

wrapper printed by:
prabhu printing house, madras-600 017.